Not for sale

ஜுலை - ஆகஸ்டு 2017

தமிழாக்கம்

# The Herald
## of Christ's Kingdom



## சான்றளித்தல் - நம்முடைய கிறிஸ்துவ பாரம்பரியம்

ஏரியஸ் மற்றும் பொது விவாதம் • பீட்டர் வால்டோ மற்றும் அவரை பின்பற்றியவர்கள்

ஜான் விக்லிப் மற்றும் அவரை பின்பற்றினவர்கள் • ஜான் ஹஸ்த் மற்றும் முந்தைய சீர்திருத்தாளர்கள்


மார்ட்டின் லூத்தர் மற்றும் சீர்த்திருத்தாளர்கள் • இணையான சாட்சிகளின் அறிமுகம்

சான்றளித்தலின் செயல்முறை ஏற்பாடு • பள்ளியில் சான்றளித்தல்

வேலையகத்தில் சான்றளித்தல் • நண்பர்களிடம் சாட்சியளித்தல்

சான்றளித்தல் - நம்முடைய கிறிஸ்துவ பாரம்பரியம்

# ஆதியிலே



வெளிப்படுத்தல் புத்தகத்தின் முக்கியமான ஒரு பகுதி, சுவிசேஷ யுகத்தைப் பற்றிய தீர்க்கதரிசனமாகும். இந்த யுகம் பரிசுத்தவான்களுக்கு ஒரு கடினமான காலமாக இருக்க போவதை இது முன்னறிவித்தது. எந்த ஒரு உபதேசமும், வாழ்க்கை முறையும், கத்தோலிக்க சபையின் பழக்கத்திற்கும், போதகத்திற்கும் விலகினால் கசப்பான சித்திரவதைக்கு ஆளாக வேண்டியதாக இருந்தது.

ஐந்தாம் காலக்கட்ட சபையின் போது பரிசுத்தவான்கள் அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின் மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். (வெளி 6:10) என்று அழுதார்கள். இன்னும் கொஞ்ச காலத்திற்கு இளைப்பாற வேண்டும் என்று அவர்களுக்கு சொல்லப்பட்டது. மற்றொரு வார்த்தையில் சொல்லப்போனால் இந்த சோதனையின் காலம் இன்னும் சிறிது காலம் தொடரும். யுகத்தின் முடிவில் பாவ நிவாரண பலி முழுமையாக செலுத்தப்படும் வரையில் சுவிசேஷ யுகத்தின் அனுபவங்களில் பரிசுத்தவான்கள் தொடர வேண்டும். இந்த சுவிசேஷ யுக பரிசுத்தவான்களுடன் உடன் ஊழியக்காரர்களாக எண்ணப்படுவது மிகப்பெரிய சிலாக்கியமாக உள்ளது.

நம்முடைய ஆவிக்குரிய முற்பிதாக்கள், தாங்கள் ஆன்மீக குற்றவாளிகள் என்று தீர்ப்பளிக்கப்பட்ட காரியங்களை பகிர்ந்து கொண்டு வாழ்ந்து மரித்தார்கள். அவர்களுடைய ஒரு பகுதியானது வன்முறையினால் கட்டுப்படுத்தவோ அல்லது மிதிக்கப்படுவதற்கோ இயலாமல் போனது. இன்றைய தினங்களில் நம்முடைய வாழ்க்கை வேறுப்பட்டுள்ளது. இனி வரக்கூடிய காலங்களில் நம்மை சொல்ல வல்லமையுள்ள எந்த அமைப்புகளோடு போராட வேண்டியதாக இருந்தாலும் இப்போது அப்படிப்பட்ட போராட்டங்கள் நமக்கு இல்லை. நம்முடைய போராட்டம் மிகுதியான நிறைவு மற்றும் அக்கறையில்லாமையோடும் நடக்கிறது. ஆனால் நம்முடைய வாழ்க்கை சங்கடங்கள் அல்லது ஏளனம் செய்யப்படுவோமோ என்ற பயமின்றி சாட்சியுள்ளதாக இருக்க வேண்டும்.

சாட்சிப்பகிர்தல் என்பது மிகவும் தனிப்பட்ட விஷயமாகவும் மற்றும் நமது வாழ்வில் ஓர் உயிர்த்துடிப்பான பகுதியாகவும் இருத்தல் வேண்டும். நாம் வாழும் நாளின் ஆவிக்கு எதிராக, நம்முடைய சுவிசேஷ யுக சகோதரர்களோடு உள்ள ஓர் தொடர்பை க் கண்டுபிடிக்க உதவியாக இவைகள் நமக்கு இருக்கும். தங்களது விசுவாசத்திற்காக தங்களது ஜீவனையே இறுதி விலையாக கொடுத்தோரின் வாழ்வைப்பற்றி படிப்பது நம்மை ஊக்குவிக்கும். நாம் சர்வ சாதரணமாக எடுத்தக் கொள்ளும் விஷயங்களுக்கு பலரும் மிகவும் துன்பப்பட்டுள்ளனர். இந்த பதிப்பில், கடந்த 2000 ஆண்டுகளில் வாழ்ந்த ஒரு சிலரது அனுபவங்களின் குரல்களே பதிவிடப்பட்டுள்ளது. அவர்களின் குரல்கள் அமைதியடையவில்லை, ஏனெனில், இன்றும், சத்தியத்திற்காக சாட்சி பகிருங்கள் என்று அறிவிக்கும் அவர்களது குரல்களை நாம் கேட்டுக் கொண்டிருக்கிறோம். என்ன ஓர் ஆசீர்வாதமான சிலாக்கியம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது!

இந்த ஹெரால்டு பிரதியின் முதன்மையான செய்தி இதுவே சாட்சியளித்தலை ஒரு சிறப்புரிமையை நாம் மிக உயர்வாக மதிப்பிட வேண்டும். நாம் பேசுவதற்கு உரிமையையும், பகிர்ந்து கொள்வதற்கு மிகுதியான வழிமுறைகளையும் பெற்றுள்ளோம். கடந்த காலத்திலிருந்து நம்முடைய ஆண்டவர் மற்றும் பழைய கதையை சொல்லி கொண்டேயிருப்பதற்கு நாம் கடன்பட்டுள்ளோம்.

நமக்குள் மனநிறைவான அமைதியை பெறுவதற்கு இந்த பிரதியின் பகுதியை இணையான சாட்சிகள் என்ற தலைப்பில் சகோதரர்களின் சாட்சிகளுக்கு அர்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. சாட்சி கொடுத்தவர்களும், சாட்சியை கேட்ட இரண்டு தனி நபர்களும் இந்த ஆர்வமூட்டும் பகுதியில் சந்தித்து பேட்டி காணப்பட்டது.

நம்முடைய தேசத்தில் சத்தியத்திற்குள் வரும் நபர்களின் எண்ணிக்கை குறைவாக இருந்தாலும் அதற்கு செவி கொடுப்பவர்கள், தொடர்ந்து இந்த சுவிசேஷத்தை அறிவிக்கக்கூடிய தேவையைப் பற்றிய அற்புதமான உள்நோக்கத்தை வழங்குகிறார்கள்.

**ஜூலை/ஆகஸ்ட் 2017**


**ஏரியஸ் மற்றும் பொது விவாதம்** 35
பெர்கமு சபை

**பீட்டர் வால்டோ மற்றும் அவரை பின்பற்றியவர்கள்** 37
தியத்தீரா சபை

**ஜான் விக்லிப் மற்றும் அவரை பின்பற்றினவர்கள்** 40
சீர்த்திருத்ததின் விடிவெள்ளி

**ஜான் ஹஸ் மற்றும் முந்தைய சீர்திருத்தாளர்கள்** 42
பிரத்தியேகமான வீரத் தியாகி

**மார்டீன் லூத்தர் மற்றும் சீர்த்திருத்தாளர்கள்** 45
சீர்த்திருத்த இயக்கம்


**இணையான சாட்சிகளின் அறிமுகம்** 51
நம்மை ஊக்குவிப்பதற்கான எடுத்துக்காட்டுகள்

**சான்றளித்தலின் செயல்முறை ஏற்பாடு** 53
இதன் காரணம்

**பள்ளியில் சான்றளித்தல்** 58
அர்ப்பணித்த நான்கு சகோதரர்கள்

**வேலையகத்தில் சான்றதளித்தல்** 64

**நண்பர்களிடம் சாட்சியளித்தல்** 69



# ஏரியஸ் மற்றும் பொது விவாதம்

**"பெர்கமு சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்: இருபுறமும் கருக்குள்ள பட்டயத்தை உடையவர் சொல்லுகிறதாவது; உன கிரியைகளையும், சாத்தானுடைய சிங்காசனமிருக்கிற இடத்தில் நீ குடியிருக்கிறதையும், நீ என் நாமத்தைப் பற்றிக் கொண்டிருக்கிறதையும், சாத்தான் குடிகொண்டிருக்கிற இடத்திலே உங்ளுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்ட நாட்களிலும் என்னைப் பற்றும் விசுவாசத்தை நீ மறுதலியாமலிருந்ததையும் அறிந்திருக்கிறேன்." (வெளி 2:12,13)**

வரலாற்றின் இந்த பக்கங்கள் விசுவாசத்தின் பல ஊக்குவிக்கும் பாடங்களை வழங்குகிறது. மேற்கூறப்பட்ட வேதப்பகுதியில், இந்த குறிப்பிட்ட கால பகுதியில் கிபி 250 – கிபி 336 காலத்தில் வாழ்ந்த ஏரியஸின் வாழ்க்கையை நம்முடைய சகோதரர்கள் சரியாக கண்டு பிடித்திருக்கிறார்கள்.

இவர் எகிப்து அலெக்சான்ந்திரியாவின் திருச்சபை அலுவலராகவும், ஒரு கற்றறிந்த மேதையும், கடுந்துறவியாக வாழ்ந்தவரும் ஒழுக்கமுள்ள எடுத்துக்காட்டான வாழ்க்கையை வாழ்ந்ததற்கு அதிக அளவில் பாராட்டை பெற்றவர். சபையில் தலைமை எதிர்ப்புகள் வந்தபோது, அலெக்சான்ந்திரியாவின் கண்காணியாக பதவி பெறுவதற்கான ஒரு வாய்ப்பை அவர் பெற்ற போது, மனத்தாழ்மையோடு, அதை அவர் நிராகரித்தார்.

பரலோக பிதாவின் பார்வையில் ஆதி சபையில் அவருடைய முன் அறிவின்படி மற்ற சகல மனுஷரை காட்டிலும் ஏரியஸ் ஒரு தலைமை பேச்சாளாராக உயர்ந்து காணப்பட்டார். இயேசுவையும் பிதாவையும் சமப்படுத்துவதற்கு அலெக்ஸாண்டர் மற்றும் அத்தனேசியஸ் போன்று சபை ஜனங்களின் முயற்சிகளை எதிர்த்து நின்றார். சகல மனுஷருக்கும் மேலாக இயேசு மிகவும் உயர்த்தப்பட வேண்டும் என்றும் அவர் தேவனோடு சமம் இல்லை என்று வேதம் கற்பித்ததாக ஏரியஸ் நம்பினார். குமாரன் இல்லாத ஒரு காலமும் இருந்தது. முன் காணப்படாத பொருட் கூறிலிருந்து மற்ற சகல சிருஷ்டிகளை போல அவர் சிருஷ்டிக்கப்பட்டார்.

### நீசீயாவில் நடந்த ஆலோசனை சங்கம்:

குல ஆட்சி முதல்வராகிய அலெக்சாந்தரால் கூட்டப்பட்ட குரு மன்றத்திலிருந்து ஏரியஸ் கிபி 321-ம் வருடத்தில் விலக்கி வைக்கப்பட்டார். இந்த விவாதம், சாம்ராஜ்யத்தின் ஐக்கியத்தை குலைக்கக்கூடிய அச்சுறுத்தலை ஏற்படுத்தினபடியால் கான்ஸ்டன்டைன் சக்கரவர்த்தி இந்த பிரச்சனைக்கு தீர்வு காணும்படிக்கு 325-ம் வருடம் நீசியாவில் ஆலோசனை சங்கத்தை கூட்டினான். குறிப்பான அந்த ஆன்மீக விவாதத்தை பற்றிய முழுமையான புரிந்து கொள்ளுதலை இந்த சக்கரவர்த்தி பெற்றிருந்தார் என்பது சந்தேகத்திற்குரியதாக இருந்தாலும் அவன் தாமே அந்த ஆலோசனை கூட்டத்தில் ஒரு முக்கியமான பங்கை எடுத்துக்கொண்டான். அலெக்சாந்திரியர்களின் நோக்கமே மிகவும் விரும்ப தகுந்தது என்று அந்த அரசியல்வாதியான கான்ஸ்டன்டைன் முடிவுரை கூறினான். ஆகவே அவருடைய விருப்பத்தை அந்த ஆலோசனை சங்கத்தின் மேல் திணித்து, இந்த முடிவுகளை ஏற்றுகொள்ளாதவர்கள் பதவியை விட்டு நீக்கப்படுவார்கள் என்று பயமுறுத்தப்பட்டார்கள்.

கிறிஸ்து சிருஷ்டிக்கப்படவில்லை, மற்றும் அவர் பிதாவில் உள்ள பொருள் என்று அந்த ஆலோசனை கூட்டத்தில் கட்டளை பிறப்பித்தது. கிறிஸ்து பிதாவின் அதே தன்மையை கொண்டவரும், அவருடைய பொருட்கூறு கொண்டவரும் மற்றும் அவர் தேவனால் எதை கொண்டும் சிருஷ்டிக்கப்படவில்லை என்று இதனால் பொருள்பட்டது. ஏரியஸ் மற்றும் இரண்டு கண்காணிகள் மட்டுமே இந்த கோட்பாட்டிற்கு கையொப்பம் இட மறுத்தார்கள். இந்த மூன்று பேரும் நாடு கடத்தப்பட்டார்கள்.

அஞ்சிப் பின் வாங்காத ஏரியஸ் நீசியாவில் ஏற்படுத்தப்பட்ட அறிக்கைக்கு எதிராக ஒரு புதிய அறிக்கையை உறுதிப்படுத்தினார். இந்த அறிக்கை கான்ஸ்டன்டைனின் ஆழ்ந்த உணர்ச்சியைத் தூண்டினதால் ஏரியஸ் மறுபடியும் அழைக்கப்பட்டார். ஆனால் கான்ஸ்டன்டைனின் பதவி ஏற்கும் அந்த நாளில் ஏரியஸ் ஒரு ஐயுறவான (கடினமான) சூழ்நிலையில் மரித்தார். அவருக்கு விஷம் கொடுத்து கொலை செய்தார்கள் என்று அவர்களுடைய நண்பர்கள் நம்புவதற்கு இது வழி நடத்தியது. (The seven chrucehs of Revelation charles f.Readeker 1989 page 12)

மேல் கூறப்பட்டுள்ள வெளிப்படுத்தலின் பகுதி

ஏரியஸின் விவாதம் நடந்த சூழ்நிலைக்கு மிக சரியாக பொருந்த கூடியதாக இருந்தது. விசுவாசமுள்ள தேவ ஜனங்கள் சாத்தானுடைய சிங்காசனமிருக்கும் இடத்தில் குடியிருந்தார்கள் என்று வெளிப்படுத்தல் ஆசிரியர் கூறுகிறார். ஏரியசும் அவரை பின்பற்றினவர்கள் அனைவரும் சபையின் ஒரு அங்கமாக இருந்தாலும் அவர்கள் மௌனமாக இருந்ததில்லை. அவர்கள் "அவருடைய நாமத்தை இறுகப்பற்றி கொண்டார்கள்" ஏரியஸ்க்கும் மற்றவர்களுக்கும் உள்ள மத கோட்பாடுகளின் கண்ணோட்டத்தை இது எவ்வளவு நேர்த்தியாக விவரிக்கிறது. மற்ற அனைவரை காட்டிலும் குமாரனையும் காட்டிலும் தேவன் மிகவும் மேலானவர் என்று சத்தியத்திற்கு எதிரான உபதேசத்தை எதிர்த்து, இவர்கள் சத்தியத்தை பாதுகாத்தார்கள். கூடுதலாக ஏரியஸ் சபையின் தலைமையினால் அவர் எதிர்க்கப்பட்ட காரணத்தினால் அலெக்சாந்திரியாவின் கண்காணி என்ற தன்னுடைய பதவியிலிருந்து விலகினார்.

இப்படிப்பட்ட நிலை உருவாக்குவதற்கு சபை எடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவளிக்காத இந்த செயல்பாடு அவர்களுக்குள்ளிருந்த மனத்தாழ்மையை காட்டுகிறது. இது நிக்கொலாய் மதஸ்தினருடைய போதனை என்று வெளி 2:15-ம் வசனம் விவரிக்கிறது. சகோ.ரசல் இதை சபையின் தலைமை அல்லது மேலாண்மை ஆட்சி என்று விவரிக்கிறார். முக்கியமான சபையின் குருக்களின் மத்தியில் யார் பெரியவர் என்ற கலவரம் இருந்தது.


மேலும் "பெர்கமு என்பதற்கு பூமிக்குரிய உயர்வு என்று பொருள். இந்த காலத்தில் பெயர் சபை பிரபலமாக வளர்ச்சி அடைந்து புறஜாதியார் மற்றும் போப் அமைப்பின் கருத்துக்கள் அறிமுகப்படுத்தப்பட்டு வளர்ச்சி அடையும் போது உண்மையான சபை சோதிக்கப்பட்டு தன்னை மெய்ப்பித்து காட்டியது. புறஜாதி பாதிரியார்கள், தங்களுடைய கனத்தையும் மதிப்பையும் இழக்க மனதில்லாதவர்களாக, புதிய மதத்திற்கு இசைவாக தங்களுடைய கருத்துக்களை வளைத்து கொள்ள முடிவு செய்தனர்"(R5992,3) என்றும் அவர் எழுதினார்.

"உங்களுக்குள்ளே எனக்கு உண்மையுள்ள சாட்சியான அந்திப்பா என்பவன் கொல்லப்பட்டார்"என்றும் இந்த வேத பகுதி கூறுகிறது. கிருபையிலிருந்து புறகணிக்கப்பட்டதாக அடையாளமாக குறிப்பிட்டாலும், கான்ஸ்டன்டைனால், மீண்டும் பழைய பதவி கொடுக்கப்படும் என்று காத்திருந்த ஏரியஸை கொன்ற போது (என்று அனுமானிக்கப்படுகிறது) இவருடைய விஷயத்தில் இது சொல்லர்த்தமாகவே நிறைவேறியிருக்க வேண்டும். இப்படியாக, பாதுகாப்பிற்காகவும் அல்லது ஆதாயத்திற்காகவும் தன்னுடைய விசுவாசத்தை மறுதலியாமல் "என்னுடைய உண்மையுள்ள சாட்சி" ஆனார்.

தேவனே சர்வத்திற்கும் மேலான ஒரே ஒருவர் என்ற உண்மையை புரிந்து கொண்டு அந்த சத்தியத்தை பாதுகாத்து ஒவ்வொருவரிடமிருந்து இன்று நம்முடைய ஆவிக்குரிய பாரம்பரியமாக கடந்து வந்துள்ளது. ஏரியஸ் போன்ற ஜனங்களுக்கு நாம் அதிகமாக கடன்பட்டுள்ளோம். அவர் தன்னொழுக்கத்தில் கண்டிப்பானவரும், ஒரு எளிமையான வாழ்க்கை வாழ்ந்த வரும் அவர் வாழ்ந்த காலத்தில் பல குருக்கள் இசைந்து வாழ்வதற்கு கட்டாயப்படுத்தப்பட்டாலும், அவர் இவர்களோடு இணைவதற்கு மறுத்துவிட்டார். உன்னதமான தத்துவத்திற்கும் சத்தியத்திற்கும் பக்தியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ உதவுவார்.

அக்காலத்தில் வாழ்ந்து வந்த பரிசுத்தவான்களின் வழி வந்த பண்புகள், நாம் எவைகளை விசுவாசிக்கின்றோமோ, அவைகளுக்காக மதிப்பு வாய்ந்த மற்றும் சிறப்பு வாய்ந்த முறையில் நிற்க கற்றுக்கொடுக்கிறது.

*"ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்க கொடுத்து, " (வெளி 2:17)*



# பீட்டர் வால்டோ மற்றும் அவரை பின்பற்றினவர்கள் (Waldensians)

**“உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன். (வெளி 2:19)**

ஏறக்குறைய வால்டோ கிபி 1150 வருடத்தில் வாழ்ந்தவரும், பிரான்ஸில் உள்ள லியோனில் ஒரு பணக்கார வியாபாரியாக இருந்தார். ஒரு நாள் நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ள என்ன செய்ய வேண்டும் என்று ஒரு ஐசுவரியமுள்ள வாலிபன் இயேசுவிடத்தில் கேட்ட கேள்வியை பற்றிய கதையை அவர் கேட்டார். சில பேச்சு வார்த்தைகளுக்கு பின், “இயேசு அதைக் கேட்டு: இன்னும் உன்னிடத்தில் ஒரு குறைவு உண்டு; உனக்கு உண்டானவைகளையெல்லாம் விற்றுத் தரித்திரருக்குக் கொடு, அப்பொழுது பரலோகத்திலே உனக்குப் பொக்கிஷம் உண்டாயிருக்கும்; பின்பு என்னைப் பின் பற்றிவா என்றார்.” (லூக் 18:22) என்று இயேசு கூறினார்.

அந்த வாலிபன் ஐசுவரியமுள்ளவனாக இருந்தபடியால், அவர் வருத்தமடைந்தவராக போய்விட்டார். ஆனால் பீட்டர் வால்டோ வேறு மாதிரி செயல்பட்டார். அதன் பயனாக அவருடைய மனைவிக்கும் பிள்ளைகளுக்கும் முன்னேற்பாடுகளை செய்து விட்டு, அவருடைய சொத்துக்களை ஏழைகளுக்கு பகிர்ந்து கொடுத்தார். உண்மையில் கிபி 1170-ம் வருடம் “லீயோனின் எளியோர்” என்ற குழுவை நிறுவினார்.

வால்டோ மற்றும் அவருடன் வாழ்ந்த அவருடைய பின் அடியார்களும் தங்களை பற்றி எழுதியதினால், நாம் அறிந்திருக்கும் அவர்களுடைய ஆதிகால அனுபவங்களை மற்ற ஆதாரங்களிலிருந்து திரட்டியுள்ளோம். தென் பிரான்சில் உள்ள ஒரு சபையின் கண்டுபிடிக்கப்பட்ட ஒரு கத்தோலிக்க வழக்காராய்சியாளரின் அறிக்கையில் மேல் கூறப்பட்டுள்ள விமர்சனம் காணப்பட்டது.

சுவிசேஷங்களையும் வேதாகமத்தின் மற்ற புத்தகங்களின் உட்பொருளை அவர் புரிந்து கொள்ளாத போதிலும் அவைகளை அவர் படிக்கும் மொழியில் மொழி பெயர்ப்பதற்கு ஏற்பாடு செய்தார். இவர் தன்னை தானே உணர்வுக்குள்ளாக்கி அப்போஸ்தலர்களுடைய சாட்சியை கைப்பற்றி சுவிசேஷங்களை வீதிகளில் பிரசங்கித்தார்கள். இவர்கள் ஆண், பெண் என்று அநேக சீடர்களை உருவாக்கினார். அவர்களையும் பிரசங்கிக்க அனுப்பினார். படிப்பறிவில்லாத இந்த ஜனங்கள், அறியாமையில் பட்டணங்கள், வீடுகள், மற்றும் சபைகளுக்கு சென்று பல தவறுகளையும் பரப்பி வந்தார்கள்.“(Xenos.org/essays/waldension-movement-walder reformation)

இது ஒரு கத்தோலிக்க வழக்காராய்சியாளரின் காட்சிப்படத்திலிருந்து எழுதப்பட்டது. வால்டோ ஏழைகளுக்கு உதவி செய்யும் படிக்கும், தன்னுடைய சொத்துக்களை (பொருள்) பகிர்ந்து கொடுத்து, இவரை போல அவர்களும் ஊழியம் செய்வதற்கும் அவர்களை ஊக்குவித்து, தங்களையே பொது சாட்சிகளாக அர்ப்பணித்த காரியங்கள் மேலோட்டமான உணர்ச்சி வசப்படுதலை அல்ல, உண்மையில் அவருடைய ஒப்புக்கொடுக்கப்பட்ட வாழ்க்கை முறையை காட்டுகிறது.

வால்டோவை பின்பற்றினவர்களைப்பற்றி மேற்கூறப்பட்டவைகள் இந்நாள் வரையில் மத சார்பான வல்லமைக்கு அவமதிப்பாகவே உள்ளது, என்று வழக்காராட்சியாளரின் அறிக்கை தொடருகிறது. இதன் காரணமாக இவர்கள் சபையிலிருந்து விளக்கப்பட்டு சாத்தானுக்கு ஒப்பு கொடுக்கப்பட்டார்கள். இவர்கள் முன்பின் ஆராயாத எண்ணிக்கைக்கு அடங்காத தவறுகளுக்குள் சென்றார்கள். தவறை பின்பற்றக்கூடிய இவர்கள், மற்றும் இந்த பிரிவில் உறுதியாக இருக்கக்கூடிய மதிப்பை குலைக்கிற தலைவர்கள், ஆண்டவராகிய போப் அல்லது ரோமன் மேற்றாணியார் அல்லது எந்த விதமான ரோம சபையின் மத தலைவர்களுக்கும் கீழ்ப்பட்டவர்கள் அல்ல என்று உறுதியாக போதித்து வந்தனர்.

வழக்காராய்சியாளர், வால்டோவின் சிறப்பியல்புகளை என்றுமே கண்டனம் தெரிவிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஜனங்கள் போப் அல்லது ரோம சபைக்கு உட்பட்டவர்கள் அல்ல என்ற நம்பிக்கையை மட்டுமே அவர் விமர்சித்தார். வால்டோவை பின்பற்றினவர்களை “Waldensians” என்று ஆங்கிலத்தில் அழைக்கப்பட்டார்கள் என்று வழக்காராய்சியாளர் குறிப்பிடுகிறார். ஆனால் எழுதப்பட்டது போல வால்டோவின் ஊழியத்தின் துவக்கத்தில் மத வல்லமையை வெறுக்கவோ,

அவமதிக்கவோ இல்லை. இவர்கள் ஒரு ஒழுக்கமுள்ள வாழ்க்கையை வாழ்ந்து, உலகத்திற்கு சுவிசேஷத்தை அறிவிக்க வேண்டும் என்று விரும்பிய சராசரி கத்தோலிக்கர்கள். துவக்கத்திலிருந்தே இது ஒரு சிறப்பு வாய்ந்த கருத்தாக உள்ளது.

வால்டோவின் பின் அடியார்கள் வறுமையில் வாழ்வதை பற்றி, சபைக்கு எந்த பிரச்சனையும் இல்லை. இது கத்தோலிக்க துறவி மடங்களில் ஒரு பொதுவான பழக்கமாக இருந்தது. ஆனால் இந்த சகோதரர்கள் இந்த மடங்களில் வாழ விரும்பவில்லை. தேவனுடைய வார்த்தையை போதிப்பதின் வழியாக ஜனங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்று விரும்பினார்கள். ஆனால் சபையின் நிலைப்பாட்டில், குருக்கள் மட்டுமே போதிப்பதற்கு தகுதி பெற்றவர்கள் என்றதால் வால்டோவை பின்பற்றுகிறவர்கள், பிரசங்கிப்பதை நிறுத்த வேண்டும் என்று தடை விதிக்கப்பட்டது. ஆயினும் ஒவ்வொரு கிறிஸ்துவர்களும், சாட்சி கொடுப்பதற்கு தெய்வீக அதிகாரம் பெற்றிருப்பதாக நம்பி தாங்களும் அந்த அதிகாரத்தை பெற்றிருக்கிறார்கள் என்பதால் அவர்கள் எதையும் நிறுத்தவில்லை. பிரான்சு மொழியின் பண்டைய கால பதிப்பாகிய புரோவின்சில், நான்கு சுவிசேஷங்களை மொழி பெயர்க்க தொடர்ந்தார். ஜனங்கள் வேதாகமத்தை வாசிப்பதற்கு இதுவே முதலாவது பொது மொழியாக இருந்தது.

1184-ல் போப் லூசியஸ் III , வால்டோவையும் அவரை பின் பற்றினவர்களையும் சபையிலிருந்து விளக்கினான். பிரான்சின் லியோனில் இனி பாதுகாப்பாக இருக்க வாய்ப்பில்லாததினால் தென்கிழக்கு பிரான்சில் உள்ள அழகான மலைகளிலும், வடமேற்கு இத்தாலியில் உள்ள மாகாணத்தில் உள்ள பைட்மான்ட் என்று அழைக்கப்பட்ட பகுதிகளிலும் தஞ்சம் அடைந்தார்கள். இதன் விளைவாக தங்கள் எதிராளிகள் அவர்களை கைபற்றும் வகையில் மூன்று பக்கங்களிலும் மலை முகடுகளினால் சூழப்பட்டிருந்தது.

அக்காலத்தில், வரலாற்றில் பல வகுப்பார், சபையில் தவறுகளை கண்டார்கள். இது வால்டோவை பின் பற்றினவர்களின் சிந்தனையை தாக்கியது. இந்த வகுப்பாரின் மத்தியில் வறுமையில் நேர்மை மற்றும் துறவு வாழ்க்கை போன்றவைகளே ஆவிக்குரிய வளர்ச்சிக்கான வழிமுறைகள் போன்ற சில பொதுவான காரியங்கள் சம்மந்தபட்டிருந்தது. தங்களுடைய வாழ்க்கையில் சடங்குகளின் செயல்பாடுகளை பற்றின கேள்வி எழுப்பப்பட்டது. மத சம்பந்தப்பட்ட அனைத்தையும் குருக்களிடம் ஒப்பிவிப்பதை விட அவர்கள் மத சார்ப்பற்ற மனம் முடித்தவர்களை கிறிஸ்துவ பணியில் ஈடுபடுத்தினார்கள். குருமார்களின் ஒழுங்கையும் பல குருக்களின் உலக பிரகாரமான வாழ்க்கை முறையையும் குறித்து இவர்கள் கேள்வி எழுப்பினார்கள். வேதாகமத்தை குறித்த போப் அமைப்பின் விளக்க உரைகளை குறித்து எல்லோருக்கும் தெரியும் படியாக கேள்வி எழுப்பினார்கள். இப்படிப்பட்ட தாக்கங்களே, வால்டோவின் கொள்கைகளின் நிலை அதிகமாக உறுதிபட துவங்கியது.

வால்டோவை விலக்கி வைத்ததற்கும், இந்த வால்டோவை பின்பற்றினவர்களுக்கு எதிராக நடந்த முதல் சிலுவை போருக்கு இடையில் உள்ள கால பகுதியாகிய சுமார் 30 வருடங்களில், இந்த ஒரு இயக்கம் பிரமிக்கத்தக்கதாக பரவியது. தென் ஐரோப்பாவின் குறுக்காக வால்டோவை பின்பற்றினவர்கள் கூட்டம் கூட்டமாக காணப்பட்டார்கள். குருமார்களின் இறுமாப்பையும் வாழ்க்கை முறையையும் பொது ஜனங்கள் தங்களுடைய கண்ணோட்டத்தோடு ஒப்பிட்டார்கள். வால்டோவை பின்பற்றக்கூடியவர்கள் தூய்மையும், ஒழுக்ககேடற்ற ஆதி கிறிஸ்துவ அமைப்பை பாதுகாப்பதாகவும் கோரினார்கள்.

இந்த காலத்திற்குள், வரலாற்றில், இஸ்லாமியர்களுக்கு எதிராக போப் அமைப்பின் சிலுவையே, சுமார் நூறு வருடங்களாக நடைபெற்று கொண்டிருந்தது. ஆனால் கி.பி 1214, வால்டோவை பின்பற்றுபவர்களுக்கு எதிராக சிலுவை போர் துவங்கியது. இசைந்திராத கிறிஸ்தவர்களுக்கு எதிராக சிலுவை போரின் கருத்துக்கள் பயன்படுத்தப்பட்ட காரியம் இதுவே முதல் முறையாகும்.

"நீண்ட காலப்பகுதியான இருபது வருடங்களாக பிரான்ஸ் மாகாணத்தில் மற்றும் ஆற்றிற்குத் தெற்கே உள்ள பகுதியில் உள்ளவர்கள் ஒரு இரத்த குளியலுக்கு கீழ்ப்படுத்தப்பட்டார்கள். அக்காலத்தில் முற்போக்கான நாகரீகத்தினால் இதை அகற்ற முடியவில்லை, ஆனால் சபைக்குள் திசைத்திருப்பக்கூடிய எந்த விதமான கருத்துக்களின் ஆதீக்கத்தையும் வலுக்கட்டாயமாக அழிக்கப்பட வேண்டும் என்று அறிமுகப்படுத்தப்பட்டது." (Giorgio Tourn, The waldensians Pg 18)


ரோமன் கத்தோலிக்க சபை அடுத்து 450 வருடங்கள் இப்படியாகவே வால்டோவை பின்பற்றினவர்களிடம் நடந்து கொண்டனர். இந்த காலப்பகுதியில் வால்டோவை பின்பற்றினவர்களின் வரலாறு நம்புவதற்குரிய அளவுக்கு இவர்களின் அழிவு ஏற்பட்டது எத்தனை ஆயிரமாயிரம் வாலிபர்கள் கொல்லப்பட்டார்கள் என்பதை அறிந்து கொள்ள கடினமாகவே உள்ளது. முதல் சிலுவை போர் பிரான்சில்

துவங்கி அதற்குபின் இத்தாலி, ஜெர்மென் செக்கோசிலோவியா ஹங்கேரி மற்றும் சுவிட்சர்லாந்துக்கும் பரவியது. மரண எண்ணிக்கை உச்சத்தை எட்டியது. சிறைகள் கொள்ளளவை அடைந்தது.

சிலுவை போர் நடந்து கொண்டிருந்தாலும், இந்த இயக்கம் தொடர்ந்து வளர்ச்சி அடைந்ததே குறிப்பிடத்தக்கதாக இருந்தது. சாட்சி கொடுப்பதில் அவர்கள் ஏறெடுத்த தொடர்ச்சியான முயற்சிகளினாலே இந்த வளர்ச்சி ஏற்பட்டது. அவர்களுக்கு செய்யப்பட்ட கொடுமைகள், அவர்களின் முயற்சிகளை புதைத்தது. "பெரியோர், சிறியோராகிய புருஷரும், ஸ்திரீகளும், இரவும், பகலும், கற்பிப்பதிலும், கற்று கொள்வதிலும் ஓயவில்லை. ஒரு நாள் முழுவதும் கூலி வேலை செய்யும் வேலைக்காரர்கள் இரவு முழுவதும கற்றுகொண்டார்கள். அல்லது கற்பித்தார்கள். "(Edward Peters, Heresy and Authority in Medieval Europe, page 153)

இந்த சகோதரர்கள், மிக கடுமையான இந்த காலங்களில் விடாமுயற்சியோடு செயல்பட்டார்கள். இருண்ட யுகத்தில், அதிகமாக பரவிய இணக்கமற்ற வகுப்புகளின் ஒன்றாக வால்பீயர்கள் இருந்தார்கள். இவர்கள் சபையிலிருந்து விலக்கப்பட்டு, வரலாற்றில் அதிகமாக சித்திரவதையை அனுபவித்தவர்களுமாக இருந்தார்கள். ஏறக்குறைய 700 வருடங்களாக அவர்கள் ஐரோப்பாவிற்கு குறுக்கே விரைந்தார்கள். ஆனாலும் அவர்கள் பெற்ற விசுவாசத்தை அவர்களால் மறுதலிக்க முடியவில்லை. அவர்கள் விரும்பி பணி செய்து சாட்சி கொடுத்து தங்களுடைய ஜீவனை கர்த்தருக்காக பனையம் வைத்தார்கள். அவர்கள் வசனங்களுக்காக தாகம் கொண்டிருந்ததினால், தாங்கள் வேதாகமத்தை வாசிக்க வேண்டாம் என்று சொல்லுவதற்கு ஒருவரையும் அவர்கள் அனுமதிக்கவில்லை.

"உன் கிரியைகளையும், உன் அன்பையும் உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும் உன் பொறுமையையும் நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்." இப்போது நாம் இவைகளை திரும்பி பார்த்து, உபத்திரவங்களோடு வந்த பயத்தை விசுவாசம் எவ்வாறு மேற்கொண்டது என்பதை தெளிவாக காணலாம். இப்படிப்பட்ட சகோதரர்களை பற்றி நம்முடைய ஆண்டவரின் தீர்க்கதரிசனமாக விவரித்ததால் எப்படிப்பட்ட ஆசீர்வாதம். சத்தியத்திற்காக நிற்கக்கூடிய தைரியத்தை பகிர்ந்து கொள்ளும் நம்முடைய குரலை அமைதிப்படுத்தக்கூடிய எதிர்ப்புகளை நாம் அனுமதிக்காமல் இருப்பதற்கு நாம் எந்த அளவுக்கு விரும்ப வேண்டும். இவைகள் நம்முடைய சுவிசேஷ யுகத்தின் பாரம்பரிய பங்கு.



# ஜான் விக்லி:ப் மற்றும் அவரை பின்பற்றினவர்கள் (Lollards)

**“ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களான படியால் வெண் வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். ” (வெளி 3:4,5)**

மேற்கூறப்பட்டுள்ள வேத பகுதி ஜான் விக்லிப்பின் காலத்திற்கு பொருந்தக்கூடியதாக உள்ளது. இவர் ஆங்கிலம் பேசுபவர்களுக்கு, வேதாகமங்களை வழங்குவதற்காக சோர்வின்றி உழைத்த ஒரு விசுவாசமுள்ள சாட்சி. கிபி1300-க்கு இடையில் வால்டோவிற்கு பின் சுமார் 200 வருடங்களுக்கு பின் விக்லிப் வந்தார். பீட்டர் வால்டோவை போல இவர் ஒரு தொழில் அதிபரல்ல.

இவர் ஒரு மாணவரும் பட்டதாரியும் உயர்பட்டம் பெற்ற அறிஞரும், ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைகழகத்தில் உயர் பேராசிரியருமாக இருந்தவர். இந்த பல்கலைகழகத்தில் எந்த போட்டியின்றி நிலை நின்றவர். அவர் ஒடுங்கிய உடல் அமைப்பையும், அன்பான மனநிலையையும், அளவிட முடியாத வலிமையையும், அசைக்கமுடியாத உறுதியும், ஆடம்பரமில்லாத சமநிலை கொண்டவரும், வாழ்க்கையில் பரிசுத்தமுள்ளவருமாக இருந்தார். (History of the Church of God, page 457, Hassell)

“விக்லிஃப் வாழ்க்கையின் மிகப்பெரிய ஆய்வுக் கட்டுரை நம்முடைய வாசகத்தில் சுருக்கிக் கூறப்பட்டுள்ளது. பரிசுத்தமுள்ள வேத நூல் ஜனங்களின் சொத்தாக இருக்க வேண்டும். யார் ஒருவரும் அவர்களிடமிருந்து பறித்து கொள்ள அனுமதிக்கக்கூடாது.” (Foxe’s Christian Martyrs, Moody Press, page 323)

வால்டோவை போலிராமல், வேறு பின்னனியிலிருந்து விக்லிஃப் வந்தாலும் வேதாகமத்திற்காக அவர் கொண்டிருந்த பேரார்வம் அவரை போல அதே அளவுக்கு வாஞ்சையுள்ளதாக இருந்தது. ஜனங்களின் கைகளில் படிக்கக்கூடிய வேதாகமம் வைத்திருப்பது, ஒரு முக்கியமான ஒழுங்கு முறை என்று இருவருமே நம்பினார்கள். இன்றைக்கு சுமார் 500 ஆங்கில மொழி பெயர்ப்புகள் உண்டு. விக்லீஃப்பின் காலத்திற்கு முன் ஒன்றுக்கூட இல்லை. ஒருவர் வேதாகமத்தை வாசிக்க வேண்டுமானால் அவர் லத்தீன் அல்லது பழங்கால பிரன்சு மொழிபெயர்ப்பாகிய புராவென்சு (Provence) மொழியை கற்று கொள்ள வேண்டியதாக இருந்தது.

பொது ஜனங்கள் வேதாகமத்தை வாசிக்க துவங்கினால், சபையின் உறுதிக் கோட்பாடுகளுக்கு எதிராக கேள்வி எழுப்பப்படும் என்று ரோம கத்தோலிக்க சபையினர் அறிந்து, அப்படிப்பட்ட காரியங்களை ஒவ்வொரு முறையும் எதிர்த்தார்கள். ஆனால் வேதாகமம் கைகளில் எழுதப்பட்டதினால், திரளான ஜனக்கூட்டத்திற்கு வேதாகமங்களை வழங்குவது கடினமான காரியமாக இருந்தது. குட்டன்பெர்கு (Gutenberg)அச்சகத்தில் அதிகளவில் வேதாகமத்தை அச்சடிப்பதற்கு சுமார் 80 வருடங்களுக்கு முன் இது சம்பவித்தது. ஆகவே துவக்கத்தில் வேதாகமம் பொதுவான மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட போது, முழு வேதாகமங்கள் அறிதாக இருந்தது. [Gutenberg’s] (விக்லிஃபின் வேதாகமங்களை அழிப்பதற்கு சபை வைராக்கியம் கொண்டிருந்தாலும் 150 முழுமையான அல்லது பகுதியளவான கைபிரதிகள் இந்நாள் வரையில் காணப்படுகிறது. பதினைந்தாம் நூற்றாண்டில் எவ்வளவு விரிவாக அந்த புத்தகங்கள் சுவிசேஷ யுகத்தின் பரிசுத்தவான்களின் அன்பான உழைப்பாகும். அவர்கள் இவைகளை மையினால் எழுதாமல் தங்களுடைய இரத்தத்தினால் எழுதினார்கள். தேவனுடைய வார்த்தைகளை காத்து, அபிவிருத்தி படுத்துவதற்கு தங்களுடைய ஜீவனையே அர்பணித்த சகோதரர்களோடு ஒரு மதிப்புக்கூரிய பந்தத்தை நாம் உணர வேண்டும். இதைவிட நாம் என்ன செய்ய முடியும்?)

56 வயதில், விக்லிஃப் தன்னுடைய முன்னோர்கள் செய்தபடியே திருச்சபை குருமார்களை வெளிப்படையாகவே குறைக்கூறினார். சபையை சீர்த்திருத்தும் அளவுக்கு அது செல்வத்தினாலும் வல்லமையினாலும் சீரழிக்கப்பட்டதையும் மீண்டும் சபை அப்போஸ்தலர்களின் எளிமைக்கும், ஏழ்மைக்கும் திரும்ப வேண்டும் என்பதையும் அவர் உணர்ந்தார். சபையின் சொத்துக்களை அரசாங்கம் கைப்பற்ற வேண்டும் என்றும் அவர் பிரசங்கித்தார். போப் அமைப்பின் நடத்தையை கவனித்து கொண்டிருந்து விக்லிப் தானியேல் புத்தகத்தில் சொல்லப்பட்டிருக்கும் அந்தி கிறிஸ்துவை பற்றிய தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் இந்த அமைப்புக்கு பொருந்தும் என்று இறுதியாக கூறினார். அவர் கைபிரதிகளை எழுதினார். போப் அமைப்பின் குற்றங்களை தெளிவாக விவரித்து பிரசங்கித்தார். மேலும் ஜனங்கள் பின்பற்ற வேண்டிய ஒரே பிரமாணம் வேதாகமம் மட்டுமே, தவிர கத்தோலிக்க சபை இல்லை என்று அவர் போதித்தார். அவர் சபையின் ஆட்சியை ஆசாரியத்து

வத்தை தனிச்சிறப்புரிமைகள், பாவ அறிக்கை, உபவாசம், உருவ வழிபாடுகளையும், ரோம திருச்சபையின் பூசை பலிகளை எதிர்த்தார்.

### லோலார்டுஸ் (Lollards)

ஆக்ஸ்ஃபோர்டில் உள்ள மாணவர்களுக்கு இடையில் விக்லீபின் போதனைகள் பிரபலமானது. விரைவில் வலிமையான ஒரு பின் தொடர் ஏற்பட்டது. விக்லீபை பின்பற்றக்கூடிய இவர்களை சுற்றுலா போதகர்களின் குழுக்களாக பிரித்து ஒழுங்குப்படுத்தினார். அவர்கள் இந்த செய்தியை இங்கிலாந்துக்கும், அதற்கு அப்பாலும் எடுத்து சென்றனர். இவர்கள் “The Lollards” என்று அழைக்கப்பட்டார்கள்.

Lollards என்ற பெயரின் தோற்றம் ஆர்வமிக்கதாக உள்ளது. இதன் சொல்லாக்க விளக்கத்திற்கு குறைந்தபட்சம் மூன்று சாத்தியமான காரியங்கள் உள்ளது. அவைகள் அனைத்தும் சிறுமைப்படுத்துகிறதாக உள்ளது. (இழுக்கான, தீங்கான) விக்லிபின் போதனைகள் ஹாலந்தில் பிரபலமாக துவங்கியதிலிருந்து லோலார்டு (Lollards) என்ற வார்த்தை டச்சு வார்த்தையிலிருந்து எடுத்தது என்று கருதப்படுகிறது. இதற்கு தாலாட்டு என்று பொருள். அதாவது ஒரு தாய் தன் குழந்தையை உறங்க வைப்பதற்கு பாடும் தாலாட்டாகும். விக்லிபின் போதனைகள் சக ஜனங்களை தாலாட்டி உறங்க வைத்து விடுகிறது என்று அவருடைய எதிராளிகள் கூறினார்கள்.

இரண்டாவது சாத்தியமான காரியம் என்னவெனில் இந்த வார்த்தை “லோலியம்” (lolium) என்ற லத்தீன் வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு களைகள் என்று பொருள். அதாவது கத்தோலிக்க கோதுமை மணிகளோடு (lollards) லோலார்டாகிய களைகள் கலந்திருப்பதாக பொருள் கூறப்பட்டது. மூன்றாவதாக, இது லோலர் (loller) என்ற பழைய ஆங்கில வார்த்தையிலிருந்து வந்தது. இதற்கு சோம்பேறியான நாடோடிகள் அல்லது “மோசடி செய்யும் பிச்சைக்காரன்” என்று பொருள். துவக்கத்தில் இந்த லோலார்டுகள் இந்த பெயரை வெறுத்தார்கள். ஆனால் பின்னர் தங்களை சபையை விட்டு வேறுப்படுத்தி காண்பிப்பதற்காக அதை அவர்களுடைய மதிப்புமிக்க அடையாளக்குறியாக கருதினார்கள்.

வேதாகமத்தை மொழி பெயர்த்தவுடன் அதை பார்த்து அநேக வேதாகமங்களை எழுதுவதற்கு விக்லிப்பை பின்பற்றினவர்கள் கடுமையாக உழைத்தார்கள். இது ஒரு கடினமான அதாவது மனச்சோர்வூட்டுகிற வேலையாக இருந்தது. ஒரே ஒரு வேதாகமத்தை எழுதுவதற்கு பல மாதங்கள் ஆயிற்று. விக்லீஃப் சீர்த்திருத்தலுக்கு சுமார் 150 வருடங்களுக்கு முன் வாழ்ந்தவர். ஆனால் அவருடைய போதனைகள் லூத்தரின் வேலைக்கு அடித்தளமிட்டது. புரோட்டஸ்டண்டு வரலாற்று வெள்ளி என்று குறிப்பிடுகிறார்கள். தங்களுடைய எதிராளிகளின் வல்லமைகளின் அச்சுறுத்தலுக்கு அஞ்சாமலும், சத்தியத்திற்காக நிலை நின்ற நம்முடைய ஜனங்களின் தைரியத்திற்கு நாம் அனைவரும் கடமைப்பட்டிருக்கிறோம்.

### விடாத்துயரளிப்பு (உபத்திரவம்)

விக்லிஃப், ஆக்ஸ்ஃபோர்டில் தன்னுடைய பணி நிலையை தொலைத்து சபையை விட்டு நீக்கப்பட்டாலும் அவர் இயற்கையாகவே மரித்தார். தங்களுடைய தலைவரை போல அவருடைய பின் அடியார்கள் சமாதானமாக மரிக்க அனுமதிக்கப்படவில்லை. இவர்களுக்கு முன் இருந்த வால்டோவை பின்பற்றினவர்களை முற்றிலுமாக அழியும் வரையில் முறையாக வேட்டையாடினது போல இவர்களையும் கொன்று போட்டார்கள்.

விக்லிஃப் மரித்து சுமார் 40 வருடங்களுக்கு பின் அவரை அவமதிக்கும் படியாக போப் மார்டீன்V விக்லிஃபின் எலும்புகளை தன்னுடைய சமய குருக்களின் கல்லறையிலிருந்தெடுத்து அதை சுட்டெரிக்க கட்டளையிட்டான். அதற்கு பின் அந்த சாம்பல் அங்குள்ள ஆற்றில் எறியப்பட்டது. விக்லிப்பின் சாம்பல் கடலில் பரவியது போல அவருடைய செய்திகளும் உலகமெங்கும் பரவும் என்று ஆங்கில கவிஞன் வில்லியம் வோர்ட்ஸ்வொர்த் (William Wordsworth) எழுதினார். அப்படியே ஆயிற்று.


விக்லிஃபின் செய்தி ஐரோப்பா முழுவதும் பரவியது. அவருடைய மரணத்திற்கு ஒரு வருடத்திற்கு முன் இங்கிலாந்து அரசன் ரிட்சர்டு II பொஹெமியா I (Bohemia) இந்நாளில் – (Czech Republic) இளவரசி அன் (Ann) திருணம் முடித்தார். இவள் விக்லீபின் போதனைகளுக்கு ஆதரவு தெரிவித்தாள். மேலும் இவளுடைய செல்வாக்கினால் தான் விக்லீஃபை ஒருவரும் கொல்லவில்லை என்று தோன்றுகிறது.

ஆக்ஸ்போர்டு பல்கலைகழகத்தில் விக்லிஃபின் உபதேசங்களை கற்றுகொள்வதற்கு அன் பொஹிமியா மாணவர்களுக்கு ஊக்கத்தொகை அளித்தாள். அவருடைய செய்திகளால் ஆட்கொள்ளப்பட்டவர்கள் தங்களுடைய வீடுகளுக்கு அந்த போதனைகளை எடுத்து சென்றனர். இதிலிருந்து ஜான்ஹஸ் கற்று கொண்டார்.

தாங்கள் சத்தியத்திற்காக நிலை கொள்ளுதல், மற்றவர்களுக்கு எந்த அளவுக்கு பலன் அளிக்கும் என்று அவருக்கு தெரியாது. ஒருவருடைய கிரியைகளின் பலன், ஆண்டவரின் கரங்களில் உள்ளது. நம்முடைய பொறுப்புகள் எளிமையானது. “சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு; எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம் பண்ணி, கடிந்துகொண்டு, புத்தி சொல்லு.” (2தீமோத் 4:2) தேவனுடைய இந்த மனுஷர்கள் தங்களுடைய பங்கை செய்து விசுவாசத்தோடு தேவனுடைய வார்த்தைகளை காத்துக்கொண்டார்கள்.

பிரத்தியேகமான வீர தியாகி

# ஜான் ஹஸ் மற்றும் முந்தைய சீர்திருத்தாளர்கள்



**"ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களான படியால் வெண் வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். " (வெளி 3:4,5)**

அன் என்ற இளவரசியின் செல்வாக்கினால் விக்லீபின் போதனைகள் போஹேமியாவுக்கு எடுத்து செல்லப்பட்டது. தெய்வச் செயலாக இருந்தது. ஜான்ஹஸ் ஆசாரியத்துவத்திற்காக பயிற்சி பெற்றவரும் பிரேகு (Prague) பல்கலைகழகத்தில் கிறிஸ்துவ சமய நூலில் முதல்வராக இருந்தார். அங்கு ஞாயிற்று கிழமைகளில் பிரசங்கித்தும் வந்தார். அவர் விக்லீபின் இலக்கியத்தை வாசித்தபின், அதை நம்பி குருக்களின் ஊழல்களுக்கு எதிராக பிரசங்கித்து பூசை பலியின் உபதேசத்தை குறித்து பகிரங்கமாக கேள்வி எழுப்பினார். பிரேசில் போப் அமைப்பு, பாவ மன்னிப்பு சீட்டை விற்க துவங்கின போது ஹஸ் மும்முரமாக இதை கண்டனம் செய்தார். ஜனங்களுக்கு மத்தியில் இவர் பிரபலமாக இருந்தாலும், அவர் நாட்டை விட்டு ஓட வேண்டியதாக இருந்தது. நடைமுறை நாடு கடத்தலாக இருந்தது

அவர் நாடு கடத்தப்பட்டிருந்த போது, தம்முடைய மிக சிறந்த ஓர் வேலையை அவர் வெளியிட்டார். -De Ecclesia (சபை) "இவர்கள் சபை அல்ல" என்று போப் மற்றும் அவருக்கு அடுத்திருந்த குருமார்களின் அதிகாரத்தை இந்த வெளியீட்டில் சவாலிட்டார். மேலும் "இவர்கள் எல்லாம் சபை" ஒரு காலத்தில் நிறுவப்பட்டது. இந்த சபைக்கு பேதுரு அல்ல கிறிஸ்துவே அஸ்திபாரம்" என்று கூறினர்.

விக்லீபுக்கு இந்த போப் அமைப்பு பதில்அளித்ததை காட்டிலும் ஹஸ்லுக்கு மிக துரிதமாக பதில்அளித்தார்கள். சுவிட்சர்லாந்து ஒரு பொதுவான ஆலோசனைகூட்டம் கூட்டப்பட்டு ஹஸ் போப்பினால் வரவழைக்கப்பட்டார். இது ஒரு சதித்திட்டமாக இருக்கும் என்று அவருடைய நண்பர்கள் அவரை எச்சரித்தார்கள். ஆனால் போஹீமியாவின் சக்கரவர்த்தி சிகிஸ்மண்டு (Sigismund) ஹஸ்ஸை அந்த ஆலோசனை கூட்டத்திற்கு அழைத்து சென்று மீண்டும் அங்கிருந்து அழைத்து வருவதாக வாக்களித்தார். ஹஸ் அந்த அழைப்பை ஏற்றுகொண்டார். ஆனால் சில வாரங்களுக்கு பின்னர் வழி வழியாக வந்த அவருடைய மத கோட்பாடுகளினால், குற்றம் சாட்டப்பட்டு அவரை சிறையில் அடைத்தார்கள். சிறையில் அவர் கடுமையாக வியாதிப்பட்டு அதற்கு பின் மரிக்கும் அளவுக்கு பட்டினியாக இருந்தார். கி.பி 1415-ம் வருஷம் ஜுலை மாதம் 5-ம் தேதி ஒரு வழக்குக் கேள்வி முறை வரும் வரையில் கிட்டத்தட்ட எட்டு மாதங்களாக அவர் சிறையில் நலிவுற்றிருந்தார். இது ஒரு படுத்தோல்வியாகும். ஹஸ்க்கு எதிராக சாட்டப்பட்ட குற்றத்திற்கு பதில் சொல்வதற்கு அவர் முயன்றபோது, சுற்றிலும் போடப்படும் கூச்சல்கள் அவருடைய வார்த்தைகளை மூழ்கடித்தது. அவருடைய எழுத்துக்களை அவர் மறுதலிக்க கட்டாயப்படுத்துவதற்கு அவைகள் முன்னால் கொண்டு வரப்பட்டது. பல வருடங்களுக்கு பின் மார்டின் லூத்தரின் வார்த்தைகளை போலவே அவருடைய பதிலும் இருந்தது. அவருடைய போதனைகள் வசனங்களில் இல்லை என்பது நிரூபிக்கப்பட்டால் அவர் பின் வாங்குவதாக கூறினார்.

ஜுலை 6-ம் தேதி அவர் மாவட்ட கிறிஸ்தவ திருச்சபைக்கு எடுத்து செல்லப்பட்டு வெளிப்படையாகவே அவர் அவமானப்படுத்தப்பட்டார். அவருக்கு முழுமையாக ஆசாரியர்களின் உடைகள் அணிவிக்கப்பட்டு அதற்கு பின் ஒன்றுக்கு பின் ஒன்றாக அகற்றப்பட்டு அவருடைய ஆத்துமா சாத்தானுக்கு ஒப்பு கொடுக்கப்பட்டது. பிசாசுகளின் படம் வரையப்பட்ட ஒரு காகித தொப்பி அவர் தலையில் வைக்கப்பட்டது. அதில் "Here is the Heresiarch" (அதாவது மதத்திற்கு எதிரான கொள்கை உடையவர் இவரே)

**ஒரு கேளியான விசாரணை மற்றும் சுட்டெரித்தல்:**

உதவியற்ற நிலையில் அங்குள்ள பேரரசன் இவைகளை கவனித்து கொண்டிருந்தார். இறுதியாக வல்லமை பெற்றவர் யார் என்பது தெளிவாக உணரப்பட்டது. ஹஸ் மாவட்ட தலைமைக்கு கிறிஸ்துவ ஆலயத்திலிருந்து வெளியே கொண்டு வரப்பட்டார். கீழ்காணும் விவரங்கள் கி.பி 1826-ம் வருடம் செப்டம்பர் 27-ம்தேதி அன்று வெளியிடப்பட்ட செய்தித்தாளில் வெளியிடப்பட்ட தகவல்களாகும்.

ஆட்சிக்குட்பட்டவரின் அரமணையின் வாசலுக்கு வந்த போது அடுக்கப்பட்ட விறகுகளை கண்டு, அவருடைய முடிவு வந்துவிட்டது என்று நம்பினார். அவருடைய நம்பிக்கை வீண் போகாமல் விறகுகளுக்கு தீ மூட்டப்பட்டு அவரால் எழுதப்பட்ட ஆவணங்கள், வெற்றிகரமாக அந்த நெருப்பில் சுட்டெறிக்கப்பட்டது. இப்போது அங்குள்ள திரளான ஜனங்கள் அகற்றப்பட்ட அந்த மிக பெரிய நிலப்பரப்பை நோக்கி சென்றார். காவலர்களின் கண்காணிப்பு தளர்ந்து போகும் இடங்களில் ஆர்வமிக்க அந்த ஜனங்கள் நெருக்கி கொண்டு முன் வந்தார்கள். நடுவில் கட்டப்பட்டிருந்த அடுக்கப்பட்ட குச்சிகளை அவர் கண்டார். இதற்கு நடுவில், ஒரு உறுதியான கம்பம் நிறுத்தப்பட்டிருந்தது. அந்த திறந்த வெளியில் விறகுகளை எடுத்து செல்வதற்கு இன்னும் சிலர் வேலைக்கு அமர்த்தப்பட்டார்கள். கட்டப்பட்டிருந்த குச்சிகளுக்கு நடுவில் நான்கு வைக்கோல் மூட்டைகள் வைக்கப் பட்டிருந்தது. முரட்டுக்குணமுள்ள ஒரு மனுஷன் அந்த கம்பத்திற்கு அருகில் நின்றான். அப்போது தண்ணீரில் தொய்க்கப்பட்ட கயிற்றுச்சுருளில் உள்ள சிக்கல்களை அவன் நீக்கி கொண்டிருந்தான். மேலும் இரண்டு மூன்று சங்கிலிகள் ஒரு மர இருக்கையின் குறுக்காக போடப்பட்டிருந்தது.

தண்டனையை நிறைவேற்றக்கூடியவர், ஒரு அங்கியை எடுத்து நிலகீல் மற்றும் தாரினால் அதை ஆயத்தம் செய்தான். அந்த கம்பத்தில் கட்டப்படுவதற்கு முன் அந்த அங்கியை ஹஸ் அணிய வேண்டியதாக இருந்தது. முதலில் ஹஸ் நடுவில் நிறுத்தப்பட்டு கயிறுகளினால் கட்டப்பட்டார். இவைகளின் மேல் ஒரு சங்கிலி கடந்து சென்று அவருடைய இடது காலிலும் கழுத்திலும் கட்டப்பட்டது. இப்படியாக அந்த கம்பத்தோடு அவர் உறுதியாக கட்டப்பட்டார். அடுக்கப்பட்ட விறகுகள் அவர் தாடை வரையில் அடுக்கப்பட்டது. அடியில் வைக்கோல்கள் இருந்தன. இதற்கு இடையில், சிறந்த முறையில் அக்கினி தழல் அங்கு போடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. எதிர்பார்க்கப்பட்ட அந்த வியப்பூட்டும் நொடி தொடர்ந்தது.

“தண்டனையை நிறைவேற்றக்கூடியவன் ஒரு தீ பந்தத்தோடு வந்தான். பெவாரியாவின் (Bavaria) பேரரசன் துரிதமாக ஹஸிடம் சென்று உரத்த சத்தமிட்டு அவரை கூப்பிட்டு அவருடைய தவறுகளை உடனடியாக ஒப்புகொள்ள வேண்டும் என்று கட்டாயப்படுத்தினான். மேலும் இன்னும் சில வினாடிகளில் தன்னுடைய வல்லமையும் தன்னைவிட்டு கடந்துவிடும் என்றும் எச்சரித்தான்.”

அபாயம் முன்னதாக கடந்து சென்றது என்று நான் எண்ணினேன் என்று ஹஸ் பதில் அளித்தார். நான் போதித்த உயர்தரமானவைகளுக்கு எதிர் பேச்சு பேசுவதற்கு வசப்படுத்தும் படியாக என்னிடம் ஒன்றும் இல்லை. நான் சத்தியத்தை போதித்தேன். அதை இப்போது என்னுடைய இரத்தத்தினால் அதை முத்திரையிட ஆயத்தமாக உள்ளேன். இனி நான் காணாவிட்டாலும் இறுதியில் அது செல்வாக்குப் பெறும். இன்று நீர் ஒரு எளிய பாவமற்றவரை சித்திரவதை செய்வதற்கு அக்கினியை பற்ற வைக்கிறாய், ஆனால் எனக்குள் இறந்தெழும் பறவைபோல (கிரேக்க புராண மரபுப்படி பல நூற்றாண்டுகள் வாழ்ந்து தன்னை எரித்த சாம்பலிருந்து மீண்டும் புத்துயிர் பெறுவதாக கருதப்பட்ட பாலைவனப் பறவை வகையாகும்.) உயிரோட்டத்தை உண்டுபண்ணும் ஆவி, (சிந்தை) என்னுடைய சாம்பலிலிருந்து எழும்பி, இனி வரக்கூடிய யுகங்களில் உயர் தளத்தில் மிக கம்பீரமாக வட்டமிட்டு, உங்களுடைய சீற்றம் எந்த அளவுக்கு வலுவுற்றும் இந்த சித்திரவதைகள் எந்த அளவுக்கு வீணானதென்றும், இந்த முழு கிறிஸ்துவ உலகத்திற்கும் நிரூபிக்கும்.

“....தீ பந்தம் மறுபடியும் எடுக்கப்பட்டதை ஹஸ் கண்டார். அதே நேரத்தில் பற்றி எரிகிற வைக்கோலின் சத்தத்தை கேட்டார்.” (The Massachusells Spy and Worcester County Advertiser, September 27, 1826)

தொடர்ந்து நடந்த காரியங்களை விவரிப்பது மிகவும் கடினமானது. ஒருவரை உயிரோடு எரிக்கக்கூடிய கொடூரமான காரியத்திற்கும் மேலாக நிலகீல் (தார்) ஹஸின் சரீரத்தில் நேரடியாக தொடர்பு கொண்டு அவரை உருக்கி, உச்சபட்சமான வேதனையை உண்டு பண்ணும் படியாக, அவருக்கு கீலினால் தொய்க்கப்பட்ட அங்கியை உடுத்தினார்கள். சர்தை சபையை பற்றி விவரிக்கப்படும் போது, கருமை நிறத்தில், தாரில் தொய்க்கப்பட்ட அந்த அங்கி, நம்முடைய கருப்பொருளான வார்த்தைகளுக்கு இன்றும் வல்லமையை தருகிறது. “ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு; அவர்கள் பாத்திரவான்களான படியால் வெண் வஸ்திரந்தரித்து என்னோடேகூட நடப்பார்கள். ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும்; ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்”. (வெளி 3:4,5)

தாங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப்பட்டாலும், தங்களுடைய அங்கிகளை தூய்மையாக காத்து கொள்வதற்கான தைரியத்தை பெற்றிருந்த ஒரு வகுப்பாரை (சகோதரர்கள்) குறித்தே ஆண்டவர் இயேசு


இங்கு நிச்சயமாக விவரித்திருக்க வேண்டும். ஆனால் ஒரு மனுஷன் கருப்பு அங்கியினால் சித்திரவதைப்படுத்தி எரிக்கப்படக்கூடிய இரக்கமற்ற நம்பிக்கை ஆண்டவருடைய நீதிக்கு நேர் எதிராக இருந்தது. அவர் இப்படியாக தன்னை அர்பணிக்கப்படவருக்கு நீதியின் பரிசுத்தமான வஸ்திரத்தை பரிசாக தந்தார். இந்த ஒப்பீடு, உண்மையில் குறிப்பிடத்தக்கது.

நாம் திரும்பி பார்த்து, ஆண்டவருக்காகவும், சத்தியத்திற்காகவும், நம்முடைய சகோதரர்கள் பட்டபாடுகள் என்ன என்பதை நாம் அறிந்து கொள்ள முயற்சி செய்யும் போது ஜீவ கீரிடத்தை பெறுவதற்கு அவர்களுடைய வாய்ப்பாக அவைகள் இருந்ததை நாம் உணர வேண்டியவர்களாக இருக்கிறோம். வாய்ப்புகளை ஞானமாக பயன்படுத்தி கொண்டவர்கள் பரிசை பெற்றார்கள். இனி ஒருபோதும் இப்படிப்பட்ட உபத்திரவங்களை அவர்கள் சகிக்க வேண்டியதில்லை. அவர்களின் மனவுரம் வாய்ந்த விசுவாசத்திற்காக அவர்கள் சகித்த உபத்திரவங்களை, அழியாமைக்கு விலை கிரையமாக கொடுத்தார்கள். இந்த சகோதரர்கள் வரக்கூடிய சீர்த்திருத்தலுக்கு மேடை அமைத்தார்கள். மார்டீன் லூத்தர், ஜான் விக்லிஃப் மற்றும் ஹ த் அவர்களின் வாழ்க்கை சரித்திரங்களை படித்தபின், சபை தீர்த்தப்பட முடியாது மாறாக அதை முழுமையாக தள்ளுபடி செய்ய வேண்டும் என்ற முடிவுக்கு வந்தார்.

ஆனால் இந்த சகோதரர்கள் நமக்காக இன்னும் வேறு காரியங்களும் செய்திருக்கிறார்கள். இவர்கள் நமக்கு ஒரு மாதிரியை முன் வைத்திருக்கிறார்கள். இவர்கள் மலையின் மேல் ஒரு பட்டணமாக இருந்தார்கள். இவர்களின் வெளிச்சம் மறைந்திருக்கமாட்டாது. (மத் 5:14) அதே பக்தி வைராக்கியத்தோடும் உறுதியான தீர்மானத்தோடு சேவை செய்வதற்கு இவர்களின் வாழ்க்கை நம்மை ஊக்குவிக்கட்டும். மேலும் சத்தியத்தை பேசவும் நம்முடைய விசுவாசத்திற்காக நிலை நிற்கவும், ஆண்டவர் தாமே அதே ஆற்றலை தருவாராக.

சீர்த்திருத்தம்

# மார்டீன் லூத்தர் மற்றும் சீர்திருத்தாளர்கள்



**“உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். (வெளி 3:8)**

சீர்திருத்தம், சபையின் வரலாற்று பகுதிகளில் மிக சிறந்த ஒன்றாக இருந்தது. ஸ்பானியார்டு (Spaniard) மைக்கேல் (Michel) செர்வீட்டஸ் (Servetus) போன்றவர்கள் திருத்துவ கொள்கைக்கு எதிராக எழுதிய போது, கால்வினால் (Calvin) கம்பத்தில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டார்கள். இங்கிலாந்தில் இருந்த வில்லியம் பின்டேல் (William Tyndale) வேதாகமத்தை நவீன ஆங்கில மொழி பெயர்ப்பில் கொண்டு வருவதற்கு அயராமல் உழைத்தார். ஆண்டவருடைய இராபோஜனம் ஒரு நினைவுக்கூருதலே தவிர அது பாவத்தை ரத்து செய்யும் மத சடங்கான பூசை பலி அல்ல என்பதை சுவிட்சர்லாந்தில் உள்ள உல்ரிச் சுவிங்கிலி (Ulrich Zwingli) புரிந்து கொண்டார்.

குழந்தை ஞானஸ்நானம் தவறானது என்று Anabaptists-க்கு ஆதித்தலைவர்களில் ஒருவராகிய மைக்கேல் சாட்லர் (Michel Sattler) புரிந்து கொண்டார். ஞானஸ்நானம் உடன்படிக்கைக்கு ஒரு அடையாளமே தவிர, ஒரு தனிப்பட்ட நபருக்கு பரலோகத்தில் இடம் பெறுவதற்கு உத்திரவாதம் அளிக்கும் மத சடங்கு அல்ல. இந்த சகோதரர்கள் ஒவ்வொருவரும் சத்தியத்தின் ஒவ்வொரு பிரிவு நூல்களை வைத்திருந்தார்கள். இன்று நாம் அனுபவிக்கக்கூடிய அறுவடை செய்திகள் அனைத்தும் இவைகளின் முழு ஒருமித்த தொகுப்பாகும்.

சீர்த்திருத்தத்திற்கு நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன் இப்படிப்பட்ட கருத்துக்களையும் போதனைகளையும் சீர்த்திருத்தவாதிகள் போதித்தார்கள். “சீர்த்திருத்தலுக்கு முன்னிருந்த சீர்த்திருத்தவாதிகளான” விக்லீப், ஹஸ் மற்றும் சாவோனா ரோலா (Savonarola) வினால், கிறிஸ்துவத்திற்கான புதிய வழிக்கு அஸ்திபாரம் போடப்பட்டது. சீர்த்திருத்தவாதிகள் இந்த சத்தியங்களை எடுத்து, அவைகளுக்கு தேவைப்படும் முக்கியமான மாற்றங்களை ஏற்படுத்துவதற்கு ஆயத்தமாகும் வரையில், இவர்கள் பல சத்தியங்களை உயிருடன் பாதுகாத்தார்கள். போப் அமைப்பாகிய அந்தி கிறிஸ்துவுக்கு எதிராக மறுத்துரைத்ததே, புரோட்டஸ்டன்ட்டு (Protestant Reformation) சீர்த்திருத்தமாகும். கி.பி 1517-ம் வருடம் அக்டோபர் மாதம் 31-ம் தேதி அன்று மார்டீன் லூத்தர், ஜெர்மனியில் விட்டன் பெர்கு ஆலயத்தின் வாசல் கதவில் ரோம மத கோட்பாடுகளுக்கு எதிராக 95 ஆய்வறிக்கையை எழுதி ஆணி அடித்தார். இப்படியாக அந்த சீர்த்திருத்தம் ஒரு ஆணி அடிக்கப்பட்டு துவங்கியது.

மார்டீன் லூத்தர் அவருடைய அறிக்கைகளை திரும்ப பெறுமாறு போப் இடமிருந்து ஒரு அரசாணையை பெற்றார். இதை அவர் எரித்து போட்டார். என்னை பொருத்தவரையில், மாற்ற முடியாத முடிவு எடுக்கப்பட்டு விட்டது. ரோமாபுரியின் ஆதரவையும் கோபத்தையும் சமமாகவே வெறுக்கிறேன். நான் அவனோடு சமரசமாக விரும்பவில்லை, அல்லது அவனோடு தொடர்பு கொள்ளவும் விரும்பவில்லை. என்னுடைய புத்தகங்களுக்கு கண்டனம் தெரிவித்து, அதை அவன் எரித்து போடட்டும். அதற்கு பதிலாக நான் நெருப்பை கண்டுபிடிக்கும் அளவு மதவெறியால் நிறைந்திருக்கும் போப்பின் முழு சட்டத்திற்கு கண்டனம் தெரிவித்து பகிரங்கமாக எதிர்த்து போராடுவேன்.

மிக பெரிய இரண்டு வேத நூல் கோட்பாடுகள், சீர்த்திருத்தலின் தூண்களாயின. 1) கிறிஸ்துவையும், அவருடைய இரட்சிப்பையும் மீண்டும் கண்டுபிடித்தல் 2) அந்தி கிறிஸ்துவின் அடையாளத்தை கண்டுபிடித்தல்.

“இந்த இரண்டு கோட்பாடுகளின் மேல் சீர்த்திருத்தம் முழுவதும் சார்ந்திருந்தது. சீர்த்திருத்தவாதிகள் அனைவரும் இதை ஏர்முகமாக ஏற்று கொண்டனர். மேலும் தங்களுடைய திருத்தும் கிரியைக்கு, இந்த தீர்க்கதரிசன விளக்கவுரையை முக்கியத்துவம் படுத்தினார்கள். இதை அஞ்சி பின் வாங்காத தைரியத்தோடும், வியக்கத்தக்க பலத்தோடும் ரோமாவை எதிர்க்க வழி நடத்தியது. இந்த அப்போஸ்தல சபையின் இயலும் உச்ச அளவிலான கோரிக்கைகள் மறுக்க அவர்களை அச்சுறுத்தியது. இது இவர்களை உயிர் இழக்கும் தியாகிகளாக கொண்டு நிறுத்தியது. உண்மையாகவே, இந்த ஒரு கட்டத்தில், போரின் கூக்கூரலே சீர்த்திருத்ததை (தாகம் தனிக்காத) தொடர்வதற்கு வழி நடத்தியது. (Prophetic Faith of our

Fathers, Volume 2, pages 243, 244).

இயல்பாகவே, சீர்த்திருத்தலை பற்றிய எந்த படிப்பிலும், மார்டீன் லூத்தரின் வேலைகள் உள்ளடக்கப்பட்டிருக்கும். போப் அமைப்பின் ஊழலான பழக்க வழக்கங்களை பல கிறிஸ்தவர்கள் விரும்பாவிட்டாலும், லூத்தர் பகிரங்கமாக தன்னுடைய குற்றச்சாட்டை பிரகடணப்படுத்த துவங்கும் போது மற்றவர்கள் ஆவலுடன் அவரை சேர்ந்து கொண்டனர்.

ஜெர்மனியில் உள்ள எர்பட்டு (Erfut) பல்கலைகழகத்தில் லூத்தர் சட்டம் பயிலும் ஒரு மாணவனாக இருந்த போது, அவர் ஒரு லத்தீன் வேதாகமத்தை நூலகத்தில் கண்டுபிடித்தார். அதுவரைக்கும் அவர் கத்தோலிக்க ஜெப புத்தகங்கள் மற்றும் உள்ளூர் குருக்களின் பிரசங்கங்ளை தவிர வேதாகமத்தை பற்றி அவர் எதையும் அறிந்திருக்க வில்லை.

மடத்தில் சேருவதற்கு அவரை இழுத்து செல்வதற்கான காரணம் எதுவும் நிச்சயமில்லாத தாயி ருந்தது. ஆனால் அவருடைய நெருங்கிய நண்பர் ஒருவர் மரித்த போது மரணத்தை பற்றிய கருத்து மற்றும் ,தேவனுடைய நியாயத்தீர்ப்பின் இருக்கையை சந்திக்கக்கூடிய காரியங்கள் லூத்தரை தட்டி எழுப்பியது. அதற்கு பின் ஒரு பயங்கரமான புயலின் போது, ஒரு மின்னல் அவர் அருகில் தாக்கிய போது "சகோதரி ஆனா, எனக்கு உதவி செய்யுங்கள், நான் ஒரு துறவியாக மாற வேண்டும்" என்று உரக்கக்கத்தினார். லூத்தர் ஒரு கடுமையான குழந்தை பருவத்தை கடந்ததினாலும், மேல் கூறப்பட்டவைகளினாலும், இப்படிப்பட்ட துறவியாக மாறுவதற்கு அவருக்கு நம்பிக்கை கொடுத்திருக்கும். ஏனெனில், அந்நிலையில் அவர் தவமிருந்து, வேலைகள் செய்துதான் தேவனால் அங்கீகரிக்கப்படுவதற்கு முயற்சி செய்ய ஏதுவாக இருந்தது.

துறவி வாழ்க்கை மிகவும் கடினமானது. துறவிகள் ஐந்து மணி நேரம் மட்டுமே உறங்க அனுமதிக்கப்பட்டார்கள். மேலும் அதிகாலை 2 மணியிலிருந்து ஏழு ஜெப ஆராதனைகள் செய்ய வேண்டியதாயிருந்தது. குறுகிய கற்பலகைகளின் மேல் நித்திரை செய்தார்கள். வைக்கோலில் படுக்கை செய்தார்கள். இரண்டு கம்பிகள் மட்டுமே கொடுக்கப்பட்டது. அவர்களின் அறைகள் கோடை காலத்தில் மிகவும் உஷ்ணமாகவும், குளிர் காலத்தில் மிக குளிராகவும் இருந்தது. பயிற்சியின் போது இந்த துறவிகளுக்கு இரண்டு காரியங்கள் மட்டுமே சொந்தமாக வைத்து கொள்ள அனுமதிக்கப்பட்டது. ஒன்று ஒரு சிலுவை மற்றும் பிச்சை எடுப்பதற்கான ஒரு பாத்திரம்.

தனிப்பட்ட குற்றவுணர்வினால் லூத்தர் சித்திரவதை செய்யப்பட்டார். வீட்டு ஊழியங்கள் செய்கிறதினாலும், மதிப்பு குறைவான வேலைகளில் ஈடுபடுவதினாலும் தேவனுக்கு முன்பாக அவருடைய குற்றவுணர்வுகள் அகற்றப்படும் என்று உணர்ந்தார். ஆனால் இப்படிப்பட்ட வாழ்க்கை முறையும் கூட லூத்தரின் மனதின் பாரம் குறைக்கவில்லை. விசுவாசத்தினால் நீதிமானக்கப்படுதல், என்ற கருத்தை புரிந்து கொள்ளும் அளவுக்கு வேதாகமத்தை தேட, அவருடைய குற்றவுணர்வு அவரை இழுத்து சென்றிருக்க வேண்டும். வேதாகமத்தின் பக்கங்களை அவர் வாசிக்கையில், ரோமர் 1:17ம் வசனத்தை வாசித்தார். "விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் என்று எழுதியிருக்கிறபடி, விசுவாசத்தினால் உண்டாகும் தேவ நீதி விசுவாசத்திற்கென்று அந்தச் சுவிசேஷத்தினால் வெளிப்படுத்தப்படுகிறது." (ரோமர் 1:17)

"இந்த முழு வேத நூலும் வேறு முகமாக எனக்கு வெளிப்படுத்தப்பட்டது. தேவனுடைய கிருபை இலவசமாக கொடுக்கப்படுகிறது. ஆவி இவனோடிருப்பதற்கு மாம்சம் அழிக்கப்பட வேண்டும். நாம் நம்மை மிகவும் தாழ்த்தினால், அவர் நம்மிடம் இரங்கி, அவருடைய கிருபையினால் உயர்த்துவார். தர்மங்கள் செய்வதினாலும் நல்ல கிரியைகள் செய்வதினாலும் அல்ல மாறாக விசுவாசத்தினால் மட்டுமே அவருடைய கிருபையை பெற முடியும். பவுலின் இந்த வேத பகுதி எனக்கு பாதீசின் கதவுகளை திறந்தது. நான் மீண்டும் பிறந்ததை உணர்ந்தேன்." ("Justification by Faith: The Lutheran-Catholic Convergence," By John Reumann) என்று லூத்தர் எழுதினார்.

**95 ஆய்வறிக்கைகள்:**

லூத்தர் அந்த அற்புதமான சத்தியத்திற்குள் வருகையில், போப் மிகப்பெரும் பணத்தை திரட்ட திட்டமிட்டார். பத்தாம் போப் லியோ, ரோமில் புனித பேதுருவின் பசலிக்காவின் மறு சீரமைப்பிற்காக பாவமன்னிப்புச் சீட்டை விற்பனைக்கு அதிகாரமளித்தார். இந்த வேலையை செய்ய ஜோஹன் டெட்ஸெல் பணியமர்த்தப்பட்டார்.

ஆகஸ்டைனைச் சார்ந்த துறவியான லூதர் விரைவில் டாமினிகள் துறவியான டெட்ஸல் உடன் முரண்படுகிறார், டெட்ஸலின் டொமினிகள் நோக்கம் "ஆன்டிகா மூலமாய்" ஆகும். (பழைமையான வழி) சீர்திருத்தம் மற்றும் சிறந்த மனப்பான்மையை நோக்கி அதிக கவனம் செலுத்துவதன் மூலம்) ஆகஸ்டீனிய நோக்கமானது "மோடர்னா மூலமாய்" (நவீன வழி) "ஆன்டிகா மூலமாய்" என்றும் போது, அவர்கள்

பாரம்பரியமான நம்பிக்கைகளை பாதுகாப்பதும் திருச்சபை உள்ள வேறுபாடுக் கொள்கையை உடையவர்களை வேட்டையாடுவதும் தான் எனக்கூறப்படுகிறது. இவர்கள் தான், எரிப்புத் தண்டக் கம்பத்தில் ஹஸ் எரிந்த போது, அவரைச் சுற்றி வைக்கோல் கட்டுகளைக் குவித்தார்கள். டெட்ஸல் லூதரின் வீட்டிற்கு அருகில் உள்ள ஒரு நகரத்தில் முரசொலிக்க அணிவகுத்துச் சென்றார். அவர் சிவப்பு நிறத்திலும் தங்க வெல்வெட்லும், பாவமன்னிப்புச் சீட்டு விற்பனைக்கான போப்பின் பிரகடனத்தைக் காண்பித்தார். மேஜையில் உள்ள பாவமன்னிப்புச் சீட்டுகளின் அச்சிடப்பட்ட கடிதங்களை வைத்துக் கொண்டு மக்களிடம் அவர்களது அன்புக்குரியவர்களின் இறந்த ஆத்மாக்கள் உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து அழுவதாகவும், அவர்களை விடுவிப்பதற்காக தங்களது பிள்ளைகளின் தர்மம் கேட்டுக் கெஞ்சுகிறார்கள் எனவும் அவர் பிரசங்கிக்க ஆரம்பித்தார். அவர் பயன்படுத்திய கவர்ச்சியான வாசகம், ''பணப்பேழையில் நாணயம் ஒலித்ததும், உத்தரிக்கும் ஸ்தலத்திலிருந்து ஆத்மா விடுவிக்கப்படும்.''

லூதர் இதை கேட்ட போது அவருடைய உற்ற தோழர்கள் பாவமன்னிப்புச் சீட்டுகளின் அச்சிடப்பட்ட கடிதங்களை எடுத்துச் செல்வதையும் கண்டபோது, அவர் சீற்றம் அடைந்து, டெட்ஸலின் முரசில் துவாரம் ஏற்படுத்த போவதாக அச்சுறுத்தினார். இதை உந்துதல் பாவமன்னிப்புச் சலுகைகளின் விற்பனையை எதிர்த்து தனது 95 ஆய்வறிக்கைகளை எழுத லூத்தரை ஊக்குவித்தது.

லூத்தர் தனது 95 ஆய்வறிக்கைகளை ஆணியடித்த கோட்டை தேவாலயத்தின் கதவானது, கல்லூரியின், அறிக்கைப் பலகையாகும். இந்த ஆய்வறிக்கைகளை அறிக்கையிடுவது என்பது உண்மையில் பாவமன்னிப்புச் சலுகைகளின் விற்பனையைப் பற்றி விவாதிப்பதற்கான அழைப்பாகும்.

லத்தீனில் எழுதப்பட்டிருந்த லூத்தரின் அழைப்பு இவ்வாறாக தொடங்குகிறது. ''சத்தியத்தின் மீதுள்ள அன்பின் காரணமாகவும் அதை வெளிச்சத்திற்கு கொண்டு வர விரும்பும் விருப்பத்திற்காகவும், விட்டன்பர்க்கில் ரெவரன்ட் தந்தை மார்ட்டீன் லூதர் மாஸ்டர் ஆப் ஆர்ட்ஸ் அண்ட் சேக்ரட் தியோலோஜி, அவர்களின் தலைமையின் கீழ் பின்வரும் முன்மொழிவுகள் விவாதிக்கப்படும்.

ஒரு கருப்பொருள் மீது நூறு வாதங்கள் கொண்டு வரும் ஓர் நிலையான பயிற்சி முறை மாணவர்களுக்கு இருந்தது. இதில் பங்கு பெறும் பேராசிரியர்களுக்கு, உண்மையில் விட்டன்பர்க் பல்கலைகழகமானது, ஊக்கம் ஊதியம் வழங்கியது மட்டுமில்லாமல் பங்கு பெறாதவர்களுக்கு அபராதமும் விதித்தது. ஆனால் பாவமன்னிப்புச் சலுகைகளைப் பற்றிய விவாதம் அதுவரை நிகழ்ந்ததே இல்லை. விவாதத்திற்கான அவரின் அழைப்பு முழு ஐரோப்பாவிலும் தாக்கத்தை ஏற்படுத்தும் என லூத்தர் சிறிதளவு தான் உணர்ந்திருந்தார்.

95 ஆய்வறிக்கைகள் இலத்தீன் மொழியிலிருந்து ஜெர்மன் மொழிக்கு விரைவாக அச்சிடப்பட்டு பரவலாக நகலெடுக்கப்பட்டன. இது சர்ச்சையை ஏற்படுத்தி அதுவும் வரலாற்றில் முதன் முதலாக அச்சகத்தின் துணையுடன் வெளிவந்தது. இரண்டு வாரங்களுக்குள்ளாகவே, ஜெர்மனி முழுவதும் பரவியது. இரண்டு மாதங்களுக்குள் ஐரோப்பா முழுவதிலும் பரவியது. தனது நிலைப்பாட்டினால் ஏற்பட்ட தாக்கத்தைக் கண்டு லூத்தர் வியப்படைந்தார். டெட்ஸலை நிறுத்துவதற்கு ஆல்பிரெக்ட் என்ற பேராயருக்கு லூத்தர் தனது ஆய்வறிக்கைகளின் ஒரு நகலை அனுப்பினார். சுவிசேஷச் செய்திதாள் திருச்சபையின் உண்மையான பொக்கிஷமாக இருப்பதை நினைவுப்படுத்தி, ஆல்பிரெக்டை பாவமன்னிப்புச் சலுகைகளின் விற்பனையை நிறுத்தும்படி அவர் வலியுறுத்தினார். ஆனால் மறைமுகமான ஊழல் ஒன்றோடு லூத்தர் எதிர்கொள்ள நேரிட்டது. ஆல்பிரெக்ட் பேராயர் பதவிக்கு ரகசியமாக லஞ்சம் கொடுத்திருந்தார். அவ்வாறு செய்ய அவர் வாடிக்கையாளர்களோடு தொடர்புடைய ஐரோப்பிய வங்கியாளர்கள் குழுவிடமிருந்து பணம் கடனாக பெற்றிருந்தார். அவரது கடனை செலுத்துவதற்கு, போப் லியோ டெட்ஸலின் பாவமன்னிப்புச் சலுகைகள் விற்பனையிலிருந்து சேகரிக்கப்பட்ட பாதிப்பணத்தை அவருக்கு வழங்கி உதவி செய்ய ஒப்புக்கொண்டார்.

ஆல்பிரெக்டின் கருத்து வேற்றுமையைப்பற்றி அறிந்திராத லூத்தர் அப்பாவித்தனமாக ஆல்பிரக்டிடம் உதவிக்காக வேண்டுகோள்விடுத்தார். ஆனால் போப்பிடமிருந்து பதிலும் மெதுவாக தான் வந்தது. ஒருபோதும் லூத்தரின் கடிதத்திற்கு ஆப்பிரெக்ட பதிலளித்ததில்லை. அதற்கு மாறாக, அவரின் ஆய்வறிக்கைகளை ரோம் நகரத்திற்கு அனுப்பி, அது தப்பறையானது எனக் கூறியுள்ளார். முடிவாக லூத்தரது வழிகளில் உள்ள பிழைகளை ஏற்றுக்கொள்ளச் செய்யும்படி அவரிடம் பாப்பல் இறையிலாளர்களை போப் லியோன் தொடர்ச்சியாக அனுப்பினார். பின்பு, கி.பி 1518ல் லூதரை அவர் வெறுமனே ''ஜெர்மனிய குடிகாரன், குடிமயக்கம் தெளிந்தவுடன் மனநிலையை மாற்றிக்கொள்வான்'' என்று நிராகரித்தார்.

## ரோமிலிருந்து எதிர்ப்புகள்:

இறுதியாக கி.பி 1518ம் ஆண்டு, ஆகஸ்டு 7ம் தேதி அன்று லூத்தரின் நம்பிக்கைகளை மாற்றிக் கூறும்படிக்கு ரோம் நீதிமன்றம் அவருக்கு அழைப்பாணையிட்டது. அவருக்கொரு மிக பெரிய அனுகூலம் இருந்தது. சந்தேகத்திற்கு இடமின்றி இது தேவ கிருபையாகவே இருந்தது. சாக்ஸானியின் விவேகமுள்ள வாக்காளர், பிரெட்ரிக் (Frederick) லூத்தருக்கு ஆதரவாக இருந்தார். அக்காலத்தில் ரோம சாம்ராஜ்யத்தில், வாக்காளர், தேர்தல் கல்லூரியின் அங்கத்தினராக, இருந்தார்கள். இன்றைக்கு இருக்கும் அமெரிக்க தேர்வு கல்லூரியை போல சக்கரவர்த்தி தேர்வு செய்கிறது இவர்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தது. இந்த தனிப்பட்ட நபர்கள் அதிகமான செல்வாக்குடையவர்களாக இருந்தனர். மேலும் அவர்களின் மாவட்டங்களில் அதிகமான வாய்ப்புரிமையும் பெற்றிருந்தார்கள்.

லூத்தர் ரோமுக்கு அழைப்பாணை பெற்ற போது பிரெட்ரிக் (Frederick) குறுக்கிட்டு லூத்தருக்கும் ஆக்ஸ்பர்க் (Augsburg) மற்றும் ஜெர்மனியில் உள்ள ரோம பிரதிநிதிகளுக்கும் இடையில் ஒரு சமாதான சந்திப்பை ஏற்பாடு செய்தார். ஏதோ ஒரு சமாதானமான முடிவை அவர்கள் வந்தடைந்தனர். டேசலின் (Tetzel) வேலை நிறுத்தப்பட்டது. போபிடம் மன்னிப்பை கேட்பதற்கும் சபையை விட்டு பிரிந்து போவதற்கு ஜனங்களை தூண்டிவிடாமல் இருப்பதற்கு லூத்தர் ஒத்துகொண்டார். ஆயினும், முடிவில் இது நடைபெறவில்லை. ஆக்ஸ்பர்கில் நடந்த கூடுகைக்கு பின் சில காலத்திற்கு பிறகு, "To the Christian Nobility of the German Nation" என்ற தலைப்பில் கீழ் லூத்தர் ஒரு கைபிரதியை வெளியிட்டார்.

"இப்போது இத்தாலி உலர்ந்ததால், அவர்கள் ஜெர்மனிக்கு வந்து மிகவும் அமைதியாக தொடங்கினார்கள். ஆனால் ஜெர்மனியைப் பொறுத்தவரை சீக்கிரத்திலேயே ஜெர்மனியும் இத்தாலியை போல் மாறிவிடும். வாங்குதல் மற்றும் விற்பனை செய்தல், மாற்றங்கள் பரிமாற்றம் செய்தல், பேரம் பேசுதல், ஏமாற்றுதல், பொய் பேசுதல், கொள்ளை அடிப்பது, திருடுவது கெட்ட பழக்கம், வில்லத்தனம், மற்றும் கடவுளை அனைத்து வகைகளிலும் அவமதிப்பது என அந்தி கிறிஸ்துவத்தால் தங்களை இதற்கும் மோசமாக ஆட்சி செய்ய முடியாது என்ற நிலையில் இருந்தனர். போப் பேரசரின் இந்த அதிகப்படியான மிகுந்த அதிர்ச்சியூட்டும் மற்றும் மிக மோசமான கூற்றுகள் அனைத்தும் பிசாசின் கண்டுபிடிப்பே, கூடிய சமயத்தில் அந்தி கிறிஸ்துவை கொண்டு வருவதோடு போப்பை கடவுளுக்கு மேலாக உயர்த்துவதே அதனின் குறிக்கோள் ஆகும்."

கி.பி 1519ம் ஆண்டின் துவக்கத்தில், லூத்தரின் எழுத்துக்கள், பிரான்சு, இங்கிலாந்து, மற்றும் இத்தாலி எங்கும் தொடர்ந்து பரவியது. பொது மக்களிடம் அவருடைய மதிப்பு வளர, வளர, அவருடைய உரையாடலை கேட்பதற்கு மாணவர்கள் விட்டன்பர்குக்கு வந்தனர். இறுதியாக கி.பி 1520, ஜூன் 15ம் தேதி போப் கடுமையான எச்சரிப்பை போல ஒன்றை லூத்தருக்கு அனுப்பியது. அதில்அந்த 95 ஆய்வறிக்கை மற்றும் அவருடைய எழுத்துக்களில் காணப்பட்ட 41 குறிப்புகளையும் 60 நாட்களில் திரும்ப வாபஸ் வாங்காவிட்டால், சபை நீக்கம் செய்யப்படுவதாக கூறப்பட்டிருந்தது.

எதிர்ப்பை தெரிவிக்கும் ஒரு பிரபலமான செயற்பாட்டின் போது லூத்தர், போப் அனுப்பிய அந்த ஓலையை சுட்டெரித்தார். அதோடு கத்தோலிக்க திருச்சட்டங்களின் தொகுப்புகளையும் சுட்டெரித்தார். அவருடைய சொந்த புத்தகங்களை சபை எரித்ததினால் லூத்தர் இப்படி செய்தார். அந்த அழைப்பாணை இதழை அவர் சுட்டெரித்ததினால், நீங்கள் தேவனுடைய சத்தியத்தை சீர்குலைத்தபடியால், இன்று ஆண்டவர் உங்களை சீர்குலைக்கிறார். என்று லூத்தர் கூறியிருக்க வேண்டும் என்று அறிக்கையிட்டிருக்கிறார்கள்.

கிபி. 1521 ஜனவரி 4ம் தேதி லூத்தர் சபை நீக்கம் செய்யப்பட்டார். அதற்கு எதிர் செயலாக, அந்தி கிறிஸ்துவைப்பற்றிய தீர்க்கதரிசன ஆய்வு செய்வதில் கவனம் வைத்தார். இந்நாளில் நாம் காணும்படிக்கு, தானியேல் 2 மற்றும் 7ம் அதிகாரத்தில், நான்கு பேரரசுகளை கண்டார். பாபிலோன், மேதோ பெர்சியா, கிரீஸ் மற்றும் ரோம்.

தானியேல் 7ம் அதிகாரத்தில் ரோமின் பிரிவுகளிலிருந்து எழும்பின "சிறிய கொம்பை" போப் அமைப்பென்று கண்டார். போப் அமைப்பையும், போப்பையும், 2 தெசலோனிக்கேயர் 2ம் அதிகாரத்தில் சொல்லப்பட்டிருக்கும் அக்கிரமத்தின் இரகசியம் என்று கண்டறிந்தார்.

அவர் சீர்த்திருத்தலின் அஸ்திபாரத்தை விரிவாக்கி, உறுதியான தீர்க்கதரிசன விசுவாசத்தின் மேல் நிலைநிறுத்தினார் என்று எட்வீன்புரும் எழுதினார்.(Prophetic Faith of our Fathers, Volume 2, page 261)

கழகத்திலிருந்து (Ann)நீக்கப்பட்ட ஒரு மனுஷனின் கருத்துக்கும் மேலாக இந்த வார்த்தைகள் மேலோங்கி சொல்லப்பட்ட செய்திக்கு உண்மையான அதிகாரத்தை கொடுக்கும்படி இவைகள் வேதாகம

தீர்க்கதரிசனத்தின் மேல் ஸ்தாபிக்கப்பட்டது. இப்படிப்பட்ட ஆதரவின் விளைவு போப் அமைப்பின் எதிர் சீர்திருத்த இயக்கம் உருவாவதற்கு வழி நடத்தியது. அங்கு தீர்க்கதரிசனத்திற்கு மற்றொரு விளக்கங்கள் எடுத்துரைக்கப்பட்டது. பழமைப் பற்றுடைய புரோடஸ்டான்டுகளின் செய்தியில் அந்தி கிறிஸ்துவை, பாவ மனுஷன் என்றும் இதுவரையில் பூமியின் மேல் காணப்படாத ஒரு தனி நபரென்றும் அடையாளம் கண்டுபிடித்துள்ளார்கள். இது ஒரு கத்தோலிக்க பாதிரியாரால், பிரான்சிஸ்கோ ரிலேரா எதிர் சீர்திருத்தத்தின்போது கவனத்தை திசை திருப்புதலிருந்து விலகிச் சென்றது. கி.பி 1600ல் ஜெசூயிட் பூசாரி, லூயிஸ் அல்க்காஸர், மூலம் துவக்கப்பட்ட போதனை புறஜாதி ரோமில் அந்தி கிறிஸ்துவின் பூர்த்தி என்று புரோடஸ்டன்ட கூறுகின்றன. இந்த இரண்டு போதனைகளும், பாப்பல் ரோமுடன் அந்தி கிறிஸ்துவை அடையாளப்படுத்தி அழைத்தாணை அனுப்பினார்.

ஆயினும் பிரெட்ரிக் சக்கரவர்த்தி மீண்டும் ஒருமுறை குறுக்கிட்டு அந்த சக்கரவர்த்தி பாதுகாப்பான ஒரு பயணத்திற்கு உத்தரவாதம் அளித்தால் லூத்தரை ஜெர்மனியில் நடைபெறும் ஆலோசனை கூட்டத்திற்கு அனுப்பி வைப்பதாக கூறினார். இப்படிப்பட்ட நம்பிக்கையை பெற்றபின் லூத்தர் அந்த கூட்டத்தில் கலந்து கொண்டார். போப் அமைப்பே, அந்தி கிறிஸ்துவின் தீர்க்க தரிசனங்களை நிறைவேற்றியது என்பதை விவரிக்கக் கூடிய நோக்கத்துடன் லூத்தர் அந்த கூடுகைக்கு சென்றார். சக்கிரவர்த்தி சார்லெஸ் -V இந்த கூடுகையை நடத்தினார். அதில் லூத்தர் தம்முடைய கருத்துக்களை மாற்றி கூற வேண்டும் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் லூத்தர் அளித்த மறுமொழி, கிறிஸ்துவ மனசாட்சியின் மிக சிறந்த தொனிகளில் ஒன்றாக, வரலாறு முழுவதும் எதிரொளித்தது.

“நான் எதிர்க்கப்பட்டு, வசனங்களின் சாட்சிகளை குற்றவாளியெனத்தீர்ப்பளிக்கப்பட்டு அல்லது தெளிவாக விவாதிக்கப்படும் வரையில் (போப் அல்லது ஆலோசனை சங்கம் பல முறை தவறுகள் செய்தது தெளிவாக இருந்ததினாலும் அவர்கள் தாங்களே முரண் பாடானவர்களாக இருப்பதினாலும் நான் இவர்களை நம்புவதில்லை) நான் என்னால் மேற்கோள் காட்டப்பட்ட பரிசுத்தமான வேத வசனங்களினாலும், தேவனுடைய வார்த்தையினால் கட்டுப்பட்ட என்னுடைய மன சாட்சியினாலும் நான் ஆட்கொள்ளப்பட்டுள்ளேன். மனசாட்சிக்கு விரோதமாக எதை செய்தாலும் அது பாதுகாப்பற்றதும் ஆபத்தானதுமாக இருப்பதால் நான் எதையும் மாற்றி கூறவும் முடியாது. அது என்னால் கூடாது. தேவனே எனக்கு உதவி செய்யும். (History of the Christian Church, Phillip Schaff, Volume 6, page 303)

இதை குறித்த ப்ரோமின் விமர்சனம் அத்தகைய ஒரு அற்புதமான சட்ட சபைக்கு முன்பாக தனியாக நிற்கும் தார்மீக தைரியம் நீண்டகாலமாக இழந்த சத்தியம் மனித குலத்தின் உலகளாவிய கருத்துக்கு எதிரானது, எந்த நிந்தனையுமின்றி அச்சம் கொள்ளாமல் சொந்த மனசாட்சியும், வரலாற்றின் தலை சிறந்த கலைஞர்களில் ஒருவராக இருக்கிறார். நிச்சயமாகவே லூத்தர் கடவுளின் தேர்ந்தெடுக்கப்பட்ட கருவியாக இருந்தார். (Prophetic Faith of our Fathers, Froom, Volume 2, page 262)

சார்லஸ்V கூடுகையின் மற்ற அங்கதினர்களோடு உரையாடி கொண்டிருக்கும் போது லூத்தர் வோர்மஸை விட்டு சென்றார். லூத்தரின் வாழ்க்கை மிக அதிகமான அபாய நிலையில் இருந்ததை அறிந்த பிரெட்ரிக் லூத்தரை வாட்பர்கு காவற் கோட்டைக்கு கொண்டு வரப்படுவதற்கு ஒழுங்கு செய்தார். அங்கு அவர் 11 மாதங்கள் ஒளிந்திருந்தார். அந்நாட்களில் லூத்தர் புதிய ஏற்பாட்டை ஜெர்மனியில் மொழி பெயர்த்ததற்கு மிகவும் பிரயோஜனமுள்ளதாக இருந்தது. லூத்தரின் வேதாகமம், வரக்கூடிய 12 வருடங்களில், 17 பதிப்புகளையும் 50 மறுபதிப்புகளையும் கடக்க வேண்டியதாக இருந்தது.

மிக ஆற்றல் மிக எதிர்ப்புகளோடு லூத்தர் இயற்கையாக மரித்தது ஆச்சரியமானது. பிரெட்ரிக் மற்றும் அதற்கு பின் வந்த அவருடைய சகோ ஜானின் பாதுகாப்பு இராதிருந்தால், லூத்தரின் விதி மாறியிருக்கும். சீர்த்திருத்தமும் நிறுத்தப்பட்டிருக்கும். மற்ற அனைவரும் கொடூரமாக மரித்தார்கள். ஆயினும், தற்போது நடைபெற்று கொண்டிருந்த சீர்த்திருத்த வேலைகளுக்கு லூத்தர் அவசியமாக தேவைப்பட்டார். முன்பு கூறியபடி, ஜெர்மனியில் லூத்தரின் வேலைகளை காட்டிலும் சீர்த்திருத்தம் மிக விரிவாக இருந்தது. ஆனால் சீர்த்திருத்தத்தின் மேலுள்ள பேரார்வமான சுடரை, ஐரோப்பா முழுவதிலும் பற்றவைத்தார். இந்த பாடத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஆதார வசனம், சீர்த்திருத்தலின் வேலைக்கு எவ்வளவு பொருத்தமுள்ளதாக உள்ளது. உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்; உனக்குக் கொஞ்சம் பெலன் இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். (வெளி 3:8)

உண்மையில் சீர்த்திருத்தத்தின் கதவுகள் திறக்கக்கூடிய ஒரு காலமாக இருந்தது. இனி ஒருபோதும் உபதேசங்களின் வாசல்களை போப் அமைப்பு அடைத்து

வைக்க அனுமதிக்கப்படவில்லை. பல்கலைகழகத்தின் ஆலயத்தின் கதவுகளில் லூதர் தம்முடைய 95 ஆய்வறிக்கைகளை ஆணி அடித்தது எவ்வளவு ஏற்றதாக இருந்தது. இயேசு பொது ஜனங்களுக்கு மிக பெரிய சத்தியங்களை புரிந்து கொள்ளுதலுக்கான வாய்ப்பை எவ்வாறு ஏற்படுத்தினார் என்பதை இந்த வாசற்கதவு அருமையாக அடையாளப்படுத்தியது. இது "ஆலய சுத்திகரிப்பின்" துவக்கமாக இருந்தது. இது எந்த மனுஷனும் அடைக்க முடியாதபடிக்கு ஆண்டவர் தாமே திறந்த வாசலாய் இருந்தது.


"இயேசு கிறிஸ்து ஒவ்வொரு மனுஷனுக்காகவும் மரித்தார்." (எபி 2:9) மற்றும் ஆத்துமாவின் நித்திரை, அதாவது அழியா ஆத்துமாவை குறித்து சொல்லப்படும் அனைத்தும்... ஒன்றும் இல்லை. ஆனால் அந்தி கிறிஸ்துவை பற்றிய கண்டுபிடிப்பு அவருடைய வேகத்தை சூடேற்றியது. மேலும் லூதர் மூன்றும் ஒன்று திருத்துவம் போன்ற வார்த்தைகளை தவிர்ப்பதை காட்டிலும் அவைகளை எதிர்த்தார். "(Dreifaltigkeit, Dreiheit, unitas, trinatry)

இந்த பரிசுத்தவான்கள் அனுபவித்தவைகளை காட்டிலும் நம்முடைய வாழ்க்கை மிக வித்தியாசமானது. ஆனாலும் "Sola Sciptura" வேதம் மட்டுமே என்று சொல்லி தேவைப்பட்டால், நம்முடைய விசுவாசத்திற்காக மரிக்கவும் துணிவோம் என்று சொல்லக்கூடிய இருதயத்தோடு ஒரு ஆவிக்குரிய தொடர்பை நாம் அவசியம் ஏற்படுத்த வேண்டும். நாம் விக்லீஃப், ஹஸ், லூத்தர், வின்டேல், செர்விட்டஸ் மேலும் மற்றவர்களோடு இணைந்து, "என்னுடைய விசுவாசத்திலிருந்த நான் பின்வாங்க மாட்டேன்" என்று கூறலாம்.

சுவிசேஷ யுகத்தின் நம்முடைய சகோதரர்களை அடையாளம் கண்டுபிடிப்பதற்கு ஆண்டவர் தாமே நம் ஒவ்வொருவருக்கும்உதவி செய்வாராக. இது நம்முடைய பாரம்பரியம் என்றாவது ஒரு நாள் நாம் அவர்களோடு வேலை செய்து, ஆண்டவரை கனப்படுத்துவதற்கு முயன்று, சமுதாயத்தின் கட்டமைப்புக்குள் முழுமையாக அவரை கொண்டு வருவோம்.

நம்மை ஊக்குவிப்பதற்கான எடுத்துக்காட்டுகள்

# இணையான சாட்சிகளின் அறிமுகம்



**"ஏற்ற சமயத்தில் சொன்ன வார்த்தை வெள்ளித்தட்டில் வைக்கப்பட்ட பொற்பழங்களுக்குச் சமானம்." (நீதி 25:11)**

பல்வேறு வழிகளில் உள்ள மாறுபட்ட ஜனங்களில் அநேகர் தங்களை கிறிஸ்தவர்கள் என்று நடிப்பவர்கள். சத்தியத்தை பெறுவது ஆச்சரியமான ஒன்று. சிலர் முற்றிலுமாக காது கேளாதவர்களைக் கூடுமான வரையில் சம்பாஷனையை கூடிய சீக்கிரம் மாற்றிவிடுகிறார்கள். சிலர் அலட்சியமானவர்களாக காணப்படுகிறார்கள். பிரசங்கிக்கப்படும் சத்தியம் அவர்களுக்கு போதுமானதென்றும், அவர்கள் தங்களுடைய பெற்றோரை காட்டிலும் ஞானிகள் ஆவதற்கு விருப்பமில்லாதவர்களும்; இன்னும் சிலர் அவர்களும் அறியாத பேரழிவு வரும் காலத்தின் அடையாளங்களை குறித்து திடுக்கிடுகிறார்கள். இன்றும் நான் பேசின மற்றவர்கள் மந்திரிகளும், கற்றறிந்தவர்களும், தாங்கள் தீய காலங்களுக்குள் விழுந்ததாக ஒப்புகொள்கிறார்கள். ஆனாலும் பிரகாசமுள்ள காலங்கள் வருகிறது; அதிக விசுவாசமான யுகம் நெருங்கி கொண்டிருக்கிறது. பரிதாபம், இவைகள் எவ்வாறு வரவழைக்கப்படும் என்பதை அவர்கள் அறியாதிருக்கிறார்கள்! நன்றி கர்த்தாவே, கேட்கிற செவி உடையவர்கள் சிலர் உண்டு." (R3643) என்று சகோதரர் ரசலுக்கு எழுதின ஒரு கடிதத்தில் ஒரு சகோதரி எழுதினார்.

சாட்சி பகிரும் போது, ஒரு விதை விதைக்கப்பட்டு, சில நேரங்களில் அது வாசம் வீசம் ரோஜா செடிகளாக காணப்படும் போது எவ்வளவு சுவாரஸ்யமாக உள்ளது. மற்ற நேரத்தில் ஒரே ஒரு பூ பூக்கிறது. பெரும்பாலும் வேர் விடாத விதைகள் குவியலாக நம்மிடம் விடப்படுகிறது.

சாட்சி அளிக்கும் முயற்சிகளில் அயராதவர்கள், பெரிய உற்பத்தி ஏற்படுத்தும் முயற்சிகள் மற்றும் தனிப்பட்ட நபர்களின் குரலின் வழியாக நம்முடைய நேசிக்கப்பட்ட சகோதரர் அநேகர் இன்று நம் மத்தியில் உள்ளனர். கைபிரதிகள், தொகுப்புகள், பூக்களோடு நந்தவன காட்சிகள், "The for this cause" , என்பதற்கான பலவித காட்சிகள், கிறிஸ்தவர்களுக்கான வானொலி நிகழ்ச்சிகள் சந்தைகள், அஞ்சல் முறை, மற்றும் வேலையிலிருக்கும் நண்பர்கள் வழியாக சகோதரர்கள் சத்தியத்தை கண்டறிந்துள்ளார்கள். தொடர்ந்து வரும் கட்டுரைகள் இப்படிப்பட்ட சில சகோதரர்களின் சாட்சிகளை நமக்கு குறிப்பிடப்படுகிறது. இவர்கள் குறிப்பாக சாட்சி கொடுப்பதில் தொடர்புள்ளவர்களும், அழைப்புக்கு பதில் அறிந்தவர்களுமே. சாட்சி கொடுத்தவர்கள் தங்களுக்கு ஆறுதல் அளிக்கும் எல்லையை விட்டு, இந்த பழைய பழைய கதையை சொல்வதற்கு வெளியே வருவதற்கு அவர்களை இயலச் செய்தது எது? பலர் பூச்சிகள், தேவையான வெளிச்சத்தை கொண்டு வருவது போல, மேலும் இதுபோல சில நேரங்களில் சாட்சி கொடுப்பதற்கான நம்முடைய முயற்சிகள் சரியான பலனளிக்காதது போல தோன்றும். படிபடியாக மற்றவர்களை ஆண்டவரிடம் நடத்தும் ஒரு சிறிய மின்மினி பூச்சியை போலிருக்கலாம்.


பல வாசகர்கள், சமுதாய அழுத்தம், போராட்டம், குற்றவுணர்வு பயம் மற்றும் சில சகோதரர்கள் அனுபவித்த பீதிகளோடு இதை தொடர்புப்படுத்துகிறார்கள். பலர் தங்களுடைய சபைகளில் கேட்கும் செய்திகளினாலே அதிர்ப்தி அடைகிறார்கள். அது அப்படிதான் என்ற சிந்தையை ஏற்றுகொள்ள தயாராக இல்லை. தேடுவதற்கு அதிர்ப்தி ஒரு கனவாக இருக்கலாம்.

ஆண்டவர் உங்கள் பாதையில் வைக்கக்கூடிய

சந்தர்ப்பங்களை விடாமுயற்சியோடு காண்பதற்கு இந்த கதைகள் உங்களை ஊக்குவிக்க வேண்டும் என்று ஜெபிக்கிறோம். ஏற்ற காலத்தில் சொல்லப்படும் ஒரு வார்த்தை உங்கள் வாழ்க்கையை மாற்றலாம். அந்த வார்த்தையை உச்சரிப்பவர் நீங்களாகவும், இருக்கலாம். நாம் அனைவரும் சொல்வதற்கு ஒரு கதை உண்டு. மேலும், நாம் ஒருவரை ஒருவர் பற்றி அறிந்து கொள்ளவும் நம்முடைய ஐக்கியத்தையும் நம்முடைய விசுவாசத்தையும் பலப்படுத்துவதற்கு "ஆண்டவரோடு உங்கள் நடை எவ்வாறு துவங்கியது" என்ற கேள்வி, எப்போதும் ஒரு அற்புதமான வழியாக இருக்கும்.

(R3643) " விசுவாசத்தை பயிற்றுவிப்பதற்கு இடம் கொடுப்பதற்காக வேலை செய்யக்கூடியவர்கள், அதன் பலனை காணாதபடிக்கு ஆண்டவர் வேண்டுமென்றே அதை மறைத்து வைத்திருக்கிறார், என்று நீங்கள் சிந்திக்க வில்லையா?" வெளியரங்கமாக பலனை கண்டாலும் சரி காணாவிட்டாலும் சரி "கர்த்தருக்குள் அவர்களின் உழைப்பு வீணாகாது" என்று அவர்கள் நம்ப வேண்டும். நாம் நம்முடைய பரலோக தந்தைக்காக வேலை செய்ய வேண்டும் என்று அவர் விரும்புகிறார். ஆனால் பலனை எதிர்பார்த்து அல்ல. வெறும் நம்முடைய முயற்சிகள் வெற்றி அடைவதை காண்பதற்கான விருப்பதற்காக மட்டும் அல்ல, கொள்கையின் அடிப்படையில் வேலை செய்ய வேண்டும் அறுவடை களத்தில், உழைப்புக்கான பலனை காட்டிலும் நம்முடைய வாழ்க்கையில் நமக்குள் வளர்ச்சி அடைந்திருக்கும், ஆவிக்குரிய கனிகளை அளவிட வேண்டும் அல்லவா?

# சான்றளித்தலின் செயல்முறை ஏற்பாடு



**"நீர் சொல்லுகிறபடி நான் ராஜாதான்; சத்தியத்தைக் குறித்துச் சாட்சி கொடுக்க நான் பிறந்தேன், இதற்காகவே இந்த உலகத்தில் வந்தேன். சத்தியவான் எவனும் என் சத்தம் கேட்கிறான் என்றார்." (யோவான் 18:37)**

பல வேத மாணவர்கள், இன்றளவும் சத்திய செய்தியான இயேசுவின் வாழ்க்கையை கதையின் உள்நோக்கமாக கொண்டுள்ள இதற்காகவே என்ற DVD-யை பற்றி நன்கு அறிந்துள்ளனர். ஆனால் சிலருக்கு, 40 வருடங்களுக்குப் பிறகும் தொடர்ச்சியாக ஊக்குவிக்க கூடியதாய் இருக்கும் இந்த காணொலியானது (வீடியோ) மனதின் ஆழத்தை தொடுகிற பொது சாட்சியின் செயல்முறை ஏற்பாடான இது எவ்வாறு அதன் துக்கத்தை பெற்றது என்பதனை அறியாதவர்களாய் இருக்கிறார்கள்.

1970-க்கு பிற்பாடு சிக்காகோ வேத மாணவர்களின் மூப்பரான சகோ.ஜார்ஜ் டபெக் என்பவர் சுமார் 50 வருடங்களாய் மல்டி மீடியா தயாரிப்பு என்று அழைக்கப்படும் ஒரு புதிய தொழில் நுட்பத்தைப் பற்றி படித்தார். இந்த புதிய அணுகு முறையைக் கொண்டு அழகான சத்தியத்தின் செய்தியை அறிமுகப்படுத்துவது எவ்வளவு மேம்பட்டதாக இருக்கும் என்று நினைத்தார். அவரும் அவருடைய துணைவியாருமான சகோதரி.ப்ளாரன்சுவும், உபகரணங்களின் செயல் விளக்கங்களின் தனிச்சிறப்புக்களை (எடுத்துக்காட்டி ) விளக்கிய விளக்கங்களிலும் கலந்து கொண்டனர்.

ஏறத்தாழ இதே நேரத்தில் இஸ்ரேயலை பார்க்கும் படியான ஒரு வாய்ப்பு அவர்களுக்கு கிடைத்தது அங்கு இருந்த அநேக இருப்பிடங்களை புகைப் படங்களாக எடுத்தனர். இந்த புதிய தொழில் நுட்பத்தைக் கொண்டு உண்மையாகவே இயேசு நடந்திட்ட இடங்களின் பல அழகிய படங்களை அவருடைய வாழ்க்கையின் கதையோடு இணைக்கின்றதான யோசனையை இந்த தனிப்பட்ட, நவீனமான சாட்சியின் முயற்சியை பிறப்பித்தது. புதிய உபகரணங்களை கொள்முதல் (வாங்கப்பட்டது) செய்யப்பட்டது. மற்றும் உண்மையான விளக்க சாட்சியில் அமைக்கப்படுவது போன்றே டாபெக் அவர்களின் வீட்டில் அமைக்கப்பட்டது. அங்கே ஒரு சுற்றல் வளைவு இந்த புதிய ஊடகத்துடன் இருந்தது. மூல வசனங்கள் எல்லாம் ஒரு முடிவு பெற்றவுடன், கதையானது பதிவு செய்யப்பட்டது. மற்றும் மூன்று திரைக்கான எல்லா காட்சிகளும் கதையோடு ஒத்திசைந்து இருக்கும்படி கற்பலகையில் இடப்பட்டது. தனிப்பட்ட கணிணிகளும் (கம்ப்யூட்டர்கள்) மற்றும் வளைதளங்கள் (இன்டர்நெட்) போன்றவைகளின் வருகைக்கு முன்பதாக இவை நடந்தது. இஸ்ரயேலில் எடுக்கப்பட்ட புகைப்படங்கள், "நாசரேத்தின் இயேசு" என்ற புத்தகத்திலிருந்த படங்களை பயன்படுத்தியோ அல்லது மற்ற புத்தகங்களில் தேடுவதின் மூலம் அநேக சகோதரர்கள் காட்சிகளை தேர்ந்தெடுக்கிறதில் பங்கு பெற்றனர்.

கொணர்வி தட்டங்களில் (அல்லது) உலோகத்தினால் பூசப்பட்டிருந்த தட்டுக்களில் போடப்படுவதற்கு முன்பு, எல்லா காட்சிகளும் கண்ணாடி வில்லையில் (Glass Slider) ஏற்றப்பட வேண்டியதாக இருந்தது. கதையினை எடுத்துரைத்தல் (Narration) தொடங்கப்பட்டு மற்றும் காட்சிகளும் தேர்வு செய்யப்பட்ட பொழுது அறிமுகம் செய்தலின் நிரலாகம் (Programming) துவங்கியது. கதையின் எடுத்துரைத்தலானது 4 ட்ராக் 10 அங்குலம் ரீல் ரெக்கார்டரில் (பதிவு செய்யும் கருவி) பதிவு செய்யப்பட்டது. ஆடியோ (ஒலி அமைவு) மற்றும் காட்சிகளின் நிகழ்ச்சி நிரலானது நாடா ரெக்கார்டரில் உள்ள ஒரு ஆடியோ சுவடு ஒன்றில் ஒத்திசைவுள்ள குரல்களை இடம் பெற செய்தது. (Audio track) பதிவு செய்யப்பட்டது மீண்டுமாக விளையாட (played) செய்த போது நிகழ்ச்சி நிரலானது ஒவ்வொரு குரலையும் அங்கீகரித்தது. மற்றும் தேர்வு செய்யப்பட்ட உயர்தரமான ஒளி குவிந்து வீசச் செய்யும் இயந்திரத்துடன் (Projector) முடிவு செய்தது. இது துவங்கிய பொழுது இசையின் தெரிந்தெடுப்பானதும் செய்யப்பட்டது மற்றும் 4 ரெக்கார்டர் (பதிவு செய்யும் கருவி) சுவட்டில் உள்ள இரண்டில் பதிவு செய்யப்பட்டது.

இதன் தயாரிப்பை முடிப்பதற்கு ஒரு வருடம் எடுத்தது. இது முற்றுப்பெற்றவுடன், முதல் காட்சியின் விளம்பரத்திற்குரிய நேரமாய் இருந்தது. 66,000 கைப்பிரதிகளும், மற்றும் 1500 சுவரொட்டிகளும் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்பட்டது. 5 செய்தித்தாள் விளம்பரங்களும், மற்றும் 6 வானொலி அறிக்கைகளும் வைக்கப்பட்டது. இதனுடன் 450 கடிதங்களும் உள்ளூர் அமைச்சர்களுக்கு அனுப்பப்பட்டது.

முதல் விளக்கக் காட்சியானது, மார்ச் 19, 1978-ல் ஒரு குருத்தோலை ஞாயிறு அன்று இல்லினாய்ஸ் எல்மெஹட் (Elmhurt) உள்ள கர்ல் சான்ட்பாங் உள்ள Jr.(Carl Sandburg Jr.High School) உயர்நிலைப்

பள்ளியில் நடைபெற்றது. கலையரங்கம் 800 பேரை கொண்டாதாயிருந்தது. மற்றும் 2 காட்சிகள் திட்டமிடப்பட்டது. இவ்விரண்டு காட்சிகளுக்கு ஆஜரானவர்களின் மொத்த எண்ணிக்கை 1200 அங்கே அநேக கார்கள் (புகை வண்டிப் பெட்டிகள்) வெளியேற இயலாதலால் அருகே இருந்த நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுத்தியது. மற்றும் சகோதரர்களின் நேரடியான போக்குவரத்திற்கு உதவி தேவையாய் இருந்தது. அது ஒரு சந்தோஷமான தருணமாய் இருந்தது. சிக்காகோவில் இருந்த சகோதரர்கள் இதற்கு முன்பாக இப்படி ஒரு பதிவை (எதிர் செயலை) ஒரு போதும் அனுபவிக்கவே இல்லை. உடனே மற்ற சபைகளிலிருந்தும் தங்களுடைய பட்டணங்களிலும் “இதற்காகவே” என்ற காட்சிகள் வேண்டும் என்ற விண்ணப்பங்கள் வரத் துவங்கியது.

**சாலையின் மீது எடுத்துச்செல்லுதல்:**

நாட்டின் எல்லா பக்கங்களிலும் உள்ள மற்ற இடங்களிலும் இக்காட்சிகளுக்கான தேதிகள் திட்டமிடுதல் மற்றும் போக்குவரத்து ஏற்பாடுகளும் செய்வது தேவையாய் (அவசியமாய்) இருந்தது. ஒவ்வொரு புரவலர் வகுப்பாரும் கைப்பிரதிகள் மற்றும் சுவரொட்டிகளையும் உத்தரவிட்டார்கள்.

வேத மாணவர்களின் வெளியீடுகள் இவைகளை ஏற்ற நேரத்தில் விநியோகம் செய்யும்படி சகோதரர்கள் முன்கூட்டியே பெற்று கொள்கிறார்களா என்பதை நிச்சயத்தவர்களாய்; அச்சடித்தல், வெட்டுதல், மடித்தல், கப்பல் வாணிகம் போன்றவற்றை ஓய்வில்லாமல் செய்து கொண்டிருந்தார்கள்.

17 உபகரணங்கள் கொண்ட பெட்டிகளை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு போகும்படி ஒரு பெரிய கூண்டு வண்டி (வேன்) பத்திரப்படுத்தப்பட்டது. (பெறப்பட்டது) தேவையான இடங்களுக்கு வண்டியை ஓட்டுவதற்கும் மற்றும் தயாரிப்பை அமைப்பதற்கும் சகோதரர்கள் தானாகவே முன் வந்தார்கள். சகோதரர்கள் குழுவினர்களாக (பெரும்பாலும் கணவர் மற்றும் மனைவி அணிகளாய்) ஒவ்வொரு வாரம் என முதல் மூன்று வருடங்களுக்கு பயணித்தார்கள். பல சந்தர்ப்பங்களில் ஒரு குழு பல்வேறு நகரங்களுக்கு ஓட்டும் ஆற்றல் உடையவர்களாய் இருந்தார்கள். வேறுவொரு குழுவினர்கள் கடைசி இடத்திற்கு பறப்பார்கள். மற்றும் முதல் குழுவினர்கள் வீட்டிற்கு பறந்து விடுவார்கள். இரண்டாவது குழுவினர் பிற இடங்களுக்கு ஓட்டுவதில் தொடர்ந்து ஈடுபடுவார்கள் கோலின்ஸ், கொலராடம், அல்பு கொர்க்வே நீயு மெக்சிகோ, அரிசோனா, கலிப்ஃபோர்னியா சான் மற்றும் டீகோவின் 2 சகோதரிகளை கொண்ட குழுவில் அங்கமான ஒரு சகோதரி இன்று இவ்வாறு சொல்லுகிறார்.

“அந்த அற்புதமான மற்றும் விரிவான முயற்சியில் சேவை செய்வதும் மற்றும் அதன் ஒரு அங்கத்தினராய் இருப்பது என்பதும் ஒரு பாக்கியம்.” இந்த ஏராளமான ஜனத்தின் அர்ப்பணிப்பையும் மற்றும் தீவிரத்தையும் கண்டு நான் அச்சமுற்றவளானேன். அவ்விதமாய் இதைவிட வித்தியாசமானதாய் எதையும் நான் பார்த்ததே இல்லை. எந்த ஒரு வெள்ளி நாணயத்தையும் (அமெரிக்கா பணம் ) ஒரு போதும் கேட்காமல் தங்களுடைய நேரம், தாலந்து மற்றும் சாதனங்கள் அவர்களுடைய சொந்த செலவில் போடப்பட்டது! இந்த மேகத்தை நகர்த்துவதில் தேவனுடைய கரத்தின் மீது எப்படி நம்பிக்கை வைக்க முடியவில்லை? எனவே அங்கே நாங்கள் சென்றோம். இதோ நான் தேவனே என்னை அனுப்பும்.

**கடல் கடந்து எடுக்கப்படுதல்:**

உலகளவிலான பயன்பாட்டிற்காக, இந்த தயாரிப்பு ஆனது ஒரு ஒளிப்படத்திரையாக (அ) திரைப்படம்/ 3 திரைப்படம் காட்டும் கருவியின் வடிவில் மாற்றியமைக்கப்பட்டது. இதனுடைய கையெழுத்து படிவம் சுருக்கப்பட்டு, மொழிபெயர்க்கப்பட்டு மற்றும் அநேக மொழிகளில் மறுபதிவும் செய்யப்பட்டது.

1982-இல் குப்ஸ் டையின், ஆஸ்திரியா நாடுகளில் நடந்த முதலாம் உலகளாவிலான மாநாட்டில் இத்தயாரிப்பானது காண்பிக்கப்பட்டது. மற்றும் ஜெர்மன் மொழியில் பொதுமக்கள் தொடர்பான பொதுவான சாட்சியாகவும் பயன்படுத்தப்பட்டது. ஓரினக்கூட்டிலிருந்த உபகரணங்கள் மற்றும் கண்ணாடி வில்லைகளின் நகல்களினால் பிரான்ஸ் தேசத்திலும் இக்காட்சியானது முன் வைக்கும்படி அனுமதித்தது. விரைவாகவே போவிஷ் மற்றும் ரோமானிய பதிப்புகளும் சேர்க்கப்பட்டது. 1982-லிருந்து 1986-க்கு இடைப்பட்ட காலப்பகுதிகளில் இது போலிஷ் பாடல் குழுவின் சேர்க்கையுடன் பயன்படுத்தப்பட்டது. மற்றும் போலண்டிலுள்ள 44 பட்டணங்களில் அநேக பொது மக்கள் வருகையின் போதும் (அல்லது) ஆஜாரான போது காட்டப்பட்டது.

**வீடியோ (காணொலி) மற்றும் இறுதியான இணையதள அணுகுமுறை:**

கணிப்பொறி (அ) கம்ப்யூட்டரின் உதவியுடன் இதற்காகவே என்பது பின்பு வீடியோ (அ) காணொலியாக மாற்றப்பட்டது. இந்த வீடியோ காட்சிகள் பயன்படுத்தப்படவும் மற்றும் அநேக மாற்றங்களையும் அனுமதித்தது. இந்த

DVD-யானது பிரான்சீஷ், போலிஷ், உக்கிரையின் ரஷ்யன், ரோமானியன், ஸ்ப்பானிஷ் மற்றும் தமிழிலும் மொழிபெயர்க்கப்பட்டது.

சகோதரர்களின் தனிப்பட்ட சாட்சியின் பயன்பாட்டிற்காக மாத்திரமல்லாமல் பொதுப்படையான சாட்சியின் வேலையிலும் இது ஒரு ஆசீர்வாதமாக இருப்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. தொழில் நுட்பம் முன்னேற்றம் அடைந்தது, மற்றும் DVD-களின் உடைய நகல்கள் / பிரதிகள் இப்பொழுது எளிதில் உண்டாக்கப்படுகிறது. இக்காட்சியானது ஒரு உலகமும் பார்ப்பதற்காகவும், மற்றும் எல்லோருக்காகவும் தன்னை ஈடுபலியாய் கொடுத்த இயேசுவின் கதையினால் ஈர்க்கப்படுவதற்கும் ஆன்லைனில் தயார் நிலையில் உள்ளது. இந்த யோசனையை வெற்றிகரமான உண்மையாக்க திருப்புகிற காரியத்தில் ஈடுபாடு கொண்டிருந்த சகோதரர்களின் முயற்சியினால் எத்தனை பேர்களுடைய வாழ்க்கை தொடப்பட்டது என்பது நமக்கு தெரியாது.

"இதற்காகவே" என்ற காட்சியை அதன் மூன்று வடிவங்களில் ஏதோ ஒன்றினை பார்த்ததினால் எத்தனை தனிப்பட்ட நபர்கள் ஆசீர்வதிக்கப்பட்டார்கள் என்பது நமக்குத் தெரியாது. எனினும் ஒரு சகோதரர் தான் சத்தியத்திற்குள் வந்ததற்கு "இதற்காகவே" என்ற படக்காட்சியே என்று நம்புகிறவர் தற்போதைய சிக்காகோ வேத மாணவர்களின் சபையின் மூப்பரான சகோ.ஜோயேல் ஸ்செல் என்பவர் இக்கட்டுரைக்காக தெரிந்து எடுக்கப்பட்ட "சாட்சியின் இணையில்" மறுபாதியாக இவர் உள்ளார்.

**சகோதரர் ஜோயேலுடைய கதை:**

நான் குழந்தையாய் இருந்த போது கடவுளைப் பற்றிக் கொண்டிருந்த அறிவு உலகத்திலிருந்து பெற்றுக் கொண்டு இருக்கிறதை விட மாறுபட்டதாய் இருந்தது. நான் அதைக்குறித்து ஆச்சரியப்பட்டேன். ஆனாலும் அதைப்பற்றி அறிய மிக்க ஆவலுள்ளவனாய் இல்லை. மேலும் அதைக்குறிதது அதிக கேள்விகளையும் கேட்கவுமில்லை.

1960-ல் மர்மோன் சபையினால் உற்பத்தி செய்யப்பட்ட வணிக தொடர்பான தொலைக்காடசி பற்றி ஆரம்ப காலத்தில் இருந்த ஞாபகம் இருக்கிறது. "மெய்யாகவே பூமியின் மீதான கடவுளின் சபை நம்முடையதாய் இருக்க வேண்டும்" என்றதான அந்த வாக்கியம் என்னுடன் மாட்டிக்கொண்டது. இந்த கூற்று என் சிந்தையில் தங்கியது. அங்கே ஒரு வேலை செய்யப்பட்டிருக்கிறது. அது நம்முடையதாய் இருக்கிறது. ஏனென்றால் நாம் அதை செய்யும்படி அழைக்கப்பட்டுள்ளோம். அது பூமியின் மீது உள்ளது.

தேவனுக்கென்று ஒரு திட்டம் இருக்குமானால் அது என்னாவாக இருந்தாலும், அது எப்படியாவது அவருடைய சிருஷ்டிப்பை உள்ளடக்கியதாகவே இருக்கும் என்பதனை புரிந்து கொள்ளுவதற்கு இந்நிகழ்வு என்னுடைய ஆரம்ப படிக்கல்லாக இருந்தது. மேலும், அவருடைய உறவு கொள்ளும்படி ஏன் வர முடிவதில்லை? தேவன் நம்மை நடத்துகிற இடத்திற்கு வழிகாட்டும் ஒரு அம்பாக இருக்கும்படி ஜனங்களையாவது அல்லது அனுபவங்களையாவது பயன்படுத்த முடியும் என்பதை இப்பொழுது நான் பார்க்கிறேன்.

நான் 12 வயதாய் இருக்கும் போது என் தாயார் மரித்தார்கள். மற்றும் என் தகப்பனார் நான் 21 வயதாய் இருந்த போது மரித்தார்கள். என் தந்தை இறந்த பின்பு சில நாட்களிலே நான் திருமணம் செய்து கொண்டேன். மற்றும் இராணுவத்திலும் சேர்ந்தேன். நான் கலிஃபோர்னியாவில் இராணுவ பயிற்சிக்காக இருந்தேன். ஆனால் என் குடும்ப விஷயமானது மறுபடியும் சிக்காகோவில் என் கவனம் செலுத்த வேண்டியத் தேவை ஏற்பட்டது. என் பயிற்சியை தொடரும்படி வீட்டை சார்ந்த இடத்திற்கு திரும்பி போக பரிந்துரைத்து ஒரு கடிதம் எழுதி தர முடியுமா என்று கேட்பதற்கு விமான படை புரோகிதரிடம் சென்றேன். மத ரீதியான ஆலோசனைக்காக நான் புரோகிதரிடம் செல்லவில்லை. நான் நடைமுறை தேவைக்காக சென்றேன்.

ஆழமான சில விஷயங்கள் சந்திப்பின் போது நடந்தது. புரோகிதர் நேராக வெளியே வந்து "நீ இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கிறாயா?" என்று கேட்டார். இவ்வாறு இதனை ஒருவரும் இதற்கு முன்பாக என்னிடத்தில் கேட்டதில்லை. மற்றும்/ (மேலும்) நான் வியப்படைந்து உணர்ச்சிக்குள்ளானேன். நான் "ஆம் "என்றேன், அது மிகவும் முக்கியத்துவமான தருணமாய் இருந்தது. அங்கே நான் எனக்கு விசுவாசம் உண்டு என்பதை உரத்தசத்தத்தோடே ஒப்புக் கொண்டேன். இந்தத் தருணத்திற்கு வரும் வரைக்கும் நான் மதம் சம்பந்தப்பட்ட காரியங்களை என் குடும்பத்தாரிடமோ, நண்பர்கள் இடமோ அல்லது பள்ளி உடன் மாணவர்களிடமோ பேசாத ஒரு மறைவான கிறிஸ்தவனாக இருந்தேன். என் வாழ்நாள் எல்லாம் நான் கொண்டிருந்த ஏக்கங்களும் மற்றும் ஆழ்ந்த விருப்பங்களும் "எல்லாம் முன் நிபந்தனைகளாக," இருந்தன என்றும் மற்றும் அந்த புரோகிதர் தேவனுடைய கரங்களில் இருந்து என்னைக் குத்துகிற கருவி என்பதை நம்புகிறேன்.

திரும்பவும் சிக்காகோவில் என் மதரீதியான ஆழ்ந்த ஏக்கங்கள் முடிவு அடையவில்லை. இன்னும் அதிகமாக அதனை தேடுவதற்கான வாய்ப்பு இருந்ததைக் கண்டேன். என்னோடு சேர்ந்து இதனை வாஞ்சையாய் செய்வதற்கு யாரும் தெரியாததினாலும் நிலையினாலும் அல்லது எனக்கு நண்பர்களோ அல்லது குடும்பத்தினர்களோ இல்லாததினால் சபைக்குள்ளாக நடக்க ஒரு போதும் விருப்பம் ஏற்படவில்லை. நான் அறிந்த கிறிஸ்துவ சமுதாயத்தின் பொதுவான இடம் எனக்காக எந்த முறையீடும் செய்யவில்லை. அங்கே ஏதோ ஒன்று அதிகமாக இருப்பதை என் உள் உணர்வினால் அறிந்தேன்.

நான் எழுதுவதற்காக ஒரு கல்லூரி வகுப்பை எடுத்தேன். கலாச்சாரங்கள் மற்றும் சூழ்நிலைகள் காரியங்கள் எப்படி மாறுகிறது குறித்த ஆய்வான "நன்னெறி சார்பு வாதம்" என்ற கட்டுரையை எழுதினேன். ஒரு தலைப்பின் மீதான ஆராய்ச்சிகள் மற்றும் யோசனைகள் கொண்டு அறநெறி கடமைகள் பற்றியதான "நடைமுறை அறிவை" நாம் தேவனிடத்திலும் மேலும் ஒருவர் மற்றவர்களிடத்திலும் எப்படி கொண்டுள்ளோம் என்பதை பற்றியதான முடிவிற்கு வர கட்டாயபடுத்தியது. எனக்கு நானே நிரூபித்து கொண்டேன். அறநெறிகள், காரியங்களை செய்கிறது என்று இது அடுத்த குறிப்பிடத்தக்க படிக்கல்லாக இருந்தது. அந்த காரியத்தின் மீதாக இருக்கக்கூடிய உண்மையையும் அதை சார்ந்தான காரணத்தையும் அறிந்து கொள்வதற்கு எடுத்துக் கொள்ளப்படுகிற நேரங்களும் மற்றும் முயற்சிகளை பற்றிய முக்கியத்துவத்தை கட்டுரையை எழுதும் போதே எனக்கு கற்பித்தது. காரியங்களை நமக்கு நாமே நிரூபித்துக் கொண்ட பின்பு அந்த கண்டுபிடிப்புகள் மீது செயல்பட வேண்டும்.

நாம் அந்த ஆராயச்சிகளை சொந்தப்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மற்றும் வெறுமனே கண்மூடித்தனமாக மற்ற மக்களின் எண்ணங்களையோ, எழுத்துக்களையோ, மற்றும் வெளிபாடுகளையோ, ஏற்றுக்கொள்ளக்கூடாது என்பதை உணர இது உதவி செய்தது. சத்தியத்தை நம்முடையதாக ஆக்கி இருக்க வேண்டும். எப்பொழுதுமே முக்கியத்துவம் வாய்ந்தது என்று இப்பொழுது நான் பிடித்துக்கொண்டிருக்கிற எண்ணத்திற்குள் எவ்வாறு ஒரு வேத மாணவன் பின்பு சரியாக பொருத்திக் கொள்ள முடியும் என்பதை ஒருவரால் பார்க்க முடியும்.

1980-க்கு இடைப்பட்ட காலப்பகுதியில் நதி காடுகளில் உள்ள ட்ரிட்டன் சமுதாயக் கல்லூரியில் நடைப்பெற்ற "இதற்காக" என்ற காட்சியைப் பற்றி நான் அறிந்து கொண்டேன். பல வருடங்களாக நரகம் மற்றும் திரித்துவத்தின் பாரம்பரிய கோட்பாட்டின் கருத்துக் கோணங்களை நிராகரித்தேன். ஏனென்றால் நான் யார் தேவன் என்று நம்பினேனோ அதன் உடன் அது பொருந்தவில்லை. மெய்யான நேரம் (Epiphany moment) உணர்த்துதல் கூட விளக்கக் காட்சியை பார்த்துக் கொண்டிருக்கும் பொழுது என்னிடத்தில் இல்லை. ஆனால் என்னுடைய எதிர்செயல் என்னவென்றால் இது சத்தியத்தைப் பற்றியதான நியாயமான விளக்காட்சியாக இருந்தது. இன்னும் அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையை என்னில் கொண்டு வந்தது. அது மென்மை உணர்ச்சி உடையதாய் இருந்த பகுதிகளை கொண்டிருந்தது. ஆனால் மிகைப்படுத்தப்படவில்லை. அது உண்மையாக தெரிந்தது. மற்றும் 1960-களில் இருந்து அந்த வணிகத்திற்கு உற்று கவனித்து திரும்பு கையில் தேவனின் திட்டத்தில் அங்கே ஒரு தனித்துவ உறுப்பு இருப்பதை கிரகித்து கொண்டேன்.

இயேசு யார், அவர் என்ன செய்தார், அல்லது இன்னும் அவர் ராஜ்ஜியம் சம்பந்தமான காரியங்களுக்கு வெளியே நின்ற எந்த அம்சங்களும் அங்கு இல்லை. மாறாக அது என் மனசாட்சிக்கு தேவன் யாராக இருந்தார் மற்றும் மனுக்குலத்திற்காக அவருடைய திட்டம சம்பந்தமான எல்லா வகையிலும் சமூகமாகவும் மற்றும் அறிவிற்கு ஏற்புடையதாகவும் பொருந்தியது. எங்கே என் சிந்தை "நான் அதை நிராகரிக்கிறேன்" என்று கூறியதோ அங்கே ஒன்றும் நான் கேட்கவில்லை. "அங்கே நிராகரிக்கும்படி ஒன்றும் இல்லை! அது புரிந்து கொள்ளக்கூடியதாய் இருந்தது. மற்றும் என்னில் அதிகம் கண்டுபிடிக்கும் படியான ஒரு வாஞ்சையை கொண்டு வந்தது. இதனை நான் பின்பற்ற வேண்டியதாயிருந்தது.

இதற்கு மாறாக எந்த மதச்சம்பந்தமான தலைமையைத் தேடவும் மற்றும் அவர்களுடன் சந்திப்பு கொள்ளவும் ஒருபொழுதும் எனக்கு எந்த வாஞ்சையும் இருந்ததில்லை. ஏதோ சில ஸ்தாபன சபைகளுக்கும் செல்ல எனக்கு விருப்பம் இல்லை. ஏனென்றால் நான் நிம்மதியின்றி போகும் அளவிற்கு அவர்கள் ஏதாவது சொல்வார்கள் என்பதனை உணர்ந்திருந்தேன். "இதற்காகவே" என்ற செய்தியில் எனக்கு எந்த ஒரு குழப்பமும் இல்லை. "நான் இப்பொழுது தயாராக இருக்கிறேன். நான் சென்று கவனிக்கவும் மற்றும் இது எப்படி நியாயமானதாக உள்ளது என்று பார்க்கவும் நான் தயராக இருக்கிறேன் என்ற இயல் உணர்வு/உணர்ச்சி இருப்பது ஞாபகம் உள்ளது. நான் 30 வயதாய் இருந்தேன்.

**சாட்சியின் பாடம்:** சத்தியம் நியாயமானது மற்றும் வாதப்பொருத்தமுடையது. அதனுடைய

இணக்கமான வேண்டுகோள்களை கேட்கின்ற செவிகளுக்கு விடுங்கள்.


ஞாயிறு கூடுகைக்கு வரும்படியான அழைப்பினை ஏற்று கொள்வது என்பது ஒரு மிகப்பெரிய படியாக எனக்கு இருந்தது. கூடுகையில் நான் கீழே உட்கார்ந்தேன். மேலும் மற்ற அனைவரையும் போல என்னிடத்தில் வேதாகமம் இல்லாததை விரைவில் உணர்ந்தேன். சகோதரி ரோபர்ட் தாபக் இதனை கவனித்து எனக்கு வேதாகமத்தை கடன் கொடுத்தார். எனக்கு தேவை இருந்தது அவர்கள் எடுத்துக் கொடுத்தார்கள். இது என்னில் ஒரு முத்திரையைப் பதித்தது. 1993-இல் சிக்காகோ நினைவுகூறுதல் நாள் மாநாட்டில் நான் மூழ்கினேன்.

இயேசுவை பின்பற்ற முயற்சிக்கும் போது தேவன் நம்மோடு தனிப்பட்ட நிலையில் ஒப்பந்தம் கொள்கிறார். இது நம்மில் ஒவ்வொருவருக்கும் மாறுபட்ட விஷயங்களை கொண்டதாய் இருக்கிறது. ஏனென்றால் நம்மில் ஒவ்வொருவரும் வித்தியாசமான அனுபவங்களை பெற்றியிருக்கிறோம். இந்த வழி என்னை எங்கே கொண்டு செல்கிறது என்பது பிரச்சனை இல்லை. நம் பிதாவாகிய தேவனுக்கு பிரியமாய் இருக்கக்கூடிய அந்த முடிவிற்கு நான் வர வேண்டும்.

சத்தியத்தை பரப்புகிற நடவடிக்கையானது தொடரும் என்பதை யோசிக்க நான் பிரியப்படுகிறேன். நாம் நம்முடைய புதிய சரீரங்களை பெற்றுக் கொள்ளும் போதும் மற்றும் புதிய உடன்படிக்கையின் நிபந்தனைக்களுடன் இந்த உலகமானது வரும் போது அவர்கள் சார்பில் என்ன செய்யப்பட்டது என்றும் பார்ப்பார்கள். மேலும் அவர்களுக்காக யார் யார் பலியானார்களோ அவர்களையும் பார்ப்பார்கள். நாம் இதை செயல் நோக்கமாக (Motivation) பயன்படுத்திக் கொள்ளலாம். பரிசுத்தமாக்கப்படுதலில் அது மிகப்பெரிய பங்கு வகித்தாலும் நாம் செய்கிற காரியங்கள் நம் சகோதர்களுக்காக கண்டிப்பான முறையில் செய்யப்படவில்லை. ஆனால் உலகத்திற்கு இனி வரக்கூடிய அந்த ஆசீர்வாதங்களுக்கான ஒரு மிகப்பெரிய பாராட்டு அவ்விடத்தில் இல்லாவிடில் அங்கே ஒரு பகுதி காணப்படாமல் இருக்கும். ராஜ்ஜியத்தில் மனுக்குலத்திற்கு நம்முடைய முயற்சிகளால் நன்மை உள்ளதாய் இருக்கும் என்று அறிந்து நாம் திராட்சை தோட்டத்தில் வேலை செய்ய வேண்டும் என்று தேவன் வாஞ்சையுள்ளவராய் இருக்கிறார்.

**சாட்சி பாடம் :** குழுவாக செய்யும் சாட்சி கூறும் முயற்சிகளை வெறுமையாய் சார்ந்திருக்க வேண்டாம். ஜனங்களிடம் நேரடியாக பேசுவதை தனிப்பட்ட இலக்காக கொண்டு சத்தியத்தின் அற்புதமான செய்தியை பகிரவும். ஒருவர் கேட்பவருக்காக அக்கறையுள்ள இருதயம் கொண்டிருப்பாரானால், மிகுந்த ஆக்கப்பூர்வமான முயற்சிகளுக்கான வாய்ப்புகளை பெறுவார்.

அர்ப்பணித்த நான்கு சகோதரர்கள்



# பள்ளியில் சான்றளித்தல்

**"இவர்கள் பேசாமலிருந்தால் கல்லுகளே கூப்பிடும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன்."**

**(லூக்கா 19:40)**

கிளியர்வாட்டர் ஃப்ளோரிடா வேத மாணவர்களில் மூப்பரான சகோ.லேரிமெக்லேலன், வேத மாணவர்களின் இல்லத்தில் தான் வளர்ந்தார். அவர் வித்தியாசமாக வளர்க்கப்பட்டார் என்பதின் ஆரம்பம், 11 ஆம் வயதில் இருந்து ஆரம்பமாகிறது. அவர் சிறுவனாக இருந்த போது அவரின் தாயார் சகோதரி.ஹேசல் மெக்லேலன். அவருக்கு வேதாகமக் கதைகளை வாசிப்பதில் மிகவும் ஊக்கமுள்ளவராக இருந்தார். என் ஆறாம் வகுப்பு நண்பர் (தற்போது சகோதரர்) டேவிட் ஹொவ்கே, என் தாயார் படிக்கும் ரீப்ரிண்ட்ஸ் கட்டுரையை என்னோடு அமர்ந்து கேட்டு முடிக்காமல், சனிக் கிழமைகளில் என்னோடு விளையாடமாட்டார். பின்பு தான் நான் வித்தியாசமானவன் என்பதை அறிந்தேன் என்று அவர் கூறுகிறார். டேவிட் நாத்திகனாக, பரிணாமவாதியாக வளர்க்கப்பட்டவராயினும், நாட்கள் செல்ல டேவிட்டும் லேரியும் பல வேதாகம கலந்துரையாடலில் ஈடுபட்டனர். அந்த கலந்துரையாடல் மற்றும் சகோதரி.ஹேசலின் வேதாகம வாசிப்பின் மத்தியில் இருவரும் தங்களது 17 ஆம் வயதில் உடன்படிக்கையைச் செய்தனர்.

**சாட்சி பாடம்:** உங்கள் நட்பு வட்டமானது, சாட்சி அளிப்பதற்கும், ஒருவர் சத்தியத்தைத் தழுவிக் கொள்வதற்குமான சிறந்த வாய்ப்புகளில் ஒன்றாகும்.

பலருக்கு கல்லூரி நாட்கள் தங்களை வடிவமைக்கும் காலமாக இருக்கும். லேரிக்கோ, சத்தியத்தின் முத்துக்களை பகிர்ந்து கொள்ளும் விருப்பம் தொடர்ந்து கொண்டே இருந்தது. 1970 இல் அவர் மிச்சிகன் மாநில பல்கலைக்கழகத்தில் சேர்ந்தார். ஒரு நாள் அவர் ஓர் குடியிருப்பு கூடத்தில் நடந்து சென்றுக் கொண்டிருந்த போது, வேத வாக்கியங்களைப் பற்றி விவாதித்துக் கொண்டிருந்த இளைஞர்களின் பேச்சை தற்செயலாக கேட்க நேரிட்டது. அவர் உடனே உள்ளே நுழைந்து மனுக்குலத்திற்கான தேவனுடைய திட்டத்தை விளக்க ஆரம்பித்தார். (தற்போது சகோதரர்) டாம் கில்பார்ட் அறைக்குள் நுழைந்தார். பின்னர் அவர்கள் இருவரும் டாம் தங்கும் அறையில் வேதாகமத்தை ஆய்வு செய்தனர். அது கர்த்தருடைய கிரியை தான், டாமை போன்ற அருமையான சகோதரரை கண்டடைய, அவரின் கரத்தில் நான் ஓர் சாதாரண கருவி தான். டாம் பகுத்தறிவு மிக்கவராய் இருந்தார். மேலும் 1கொரி 15 இல் இரண்டு தனிப்பட்ட நபர்கள் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்ப்பதற்கு கர்த்தர் அவரின் கண்களை மிக விரைவாக திறந்தார்; அதில் தேவனைப் பற்றியும் எல்லாவற்றையும் கீழ்ப்படுத்திய பின்பு திரும்பவும் தேவனிடத்தில் இயேசு இராஜ்யத்தை ஒப்படைப்பதைப் பற்றிக் கூறியுள்ளது. திரித்துவம் இல்லவே இல்லை. டாம் தொடர்ந்து என்னுடன் சில மாநாடுகளுக்கு வந்தார்; மேலும் தான் கண்டடைந்த அன்பு தகப்பனையும், அவரின் அற்புதமான குமாரனையும், உண்மையான முழுமனுக்குலத்திற்கான நற்செய்தியையும் அவர் விரும்பி முற்றிலும் ஏற்றுக்கொண்டார். சகோ.லேரி விவரிக்கிறார்.

**சகோ.டாமின் அந்த நாள் நினைவு**

நான் லேரி வசிக்கும் மாடிக்கு கீழ் உள்ள தங்கும் அறையில் தான் வசித்து வந்தேன். ஒரு மாலை, கேள்வி ஒன்றினை கேட்க ஒருவரைக் காணச் சென்றிருந்தேன். அவர் அறையில் நுழைந்தவுடன் சடுதியில் நிற்க வேண்டியதாயிற்று. ஏனெனில், அச்சிறிய அறை, மத்தியில் தரையில் அமர்ந்திருந்து பேசிக்கொண்டிருந்த லேரியின் பேச்சைக் கவனித்துக் கொண்டிருந்து 10-12 மாணவர்களால் நிறைந்திருந்தது. வோதகமம் பற்றியும், தேவன் மற்றும் இயேசுவைப் பற்றியும் அவர் பேசிக் கொண்டிருந்தார். அவர் பேசி முடித்து, எல்லாரும் அறையை விட்டு வெளியே செல்லும் வரை நான் 10 நிமிடங்களுக்கு மேலாக கதவினருகே நின்று கவனித்துக் கொண்டிருந்தேன். லேரி வெளியே வந்த போது, அவர் வேதாகமத்தைப் பற்றியும் அதின் செய்தியைப் பற்றியும் பேசினதை நான் பாராட்டுகிறேன் என்று அவரிடம் கூறினேன். ஆனால், அவர் பல விஷயங்களைப் பற்றி கலந்து பேசினார். அவர் அந்த விஷயங்களை எனக்கு தெரிவிப்பதில் மகிழ்வுரு வேன் என்றுக் கூறினார். எனவே என் அறைக்கு சென்று நாங்கள் பேச ஆரம்பித்தோம். நாங்கள் இரண்டு மணி நேரம் பேசினோம். நான் முன் கண்டிராத கேட்டிராத வேதாகம விஷயங்களை அவர் எனக்கு காட்டினார். எங்கள் உரையாடலின் முடிவில், வேதாகமம் திரித்துவ போதனையை போதிக்கவில்லை என்பதை எனக்கு அறியச் செய்தார். அதன் பிறகு, நாங்கள் அடிக்கடி உரையாடினோம். நான் மேலும் மேலும் ஆர்வம் அடைந்தேன். லேரி தன் வேதாகமத்தை எவ்வளவு நன்கு

அறிந்து வைத்திருப்பதையும் நான் என்னுடையதை எவ்வளவு சிறியதாய் அறிந்து வைத்திருப்பதையும் எண்ணி நான் ஈர்க்கப்பட்டேன். வேதாகமம் என்ன கற்பிக்கிறது என்று எனக்கு சொல்லப்பட்டதை என்னால் லேரியிடம் கூற முடிந்தது. ஆனால் பல சமயங்களில் வேதாகமத்தில் அவை எங்குள்ளது என்பதை கண்டுபிடிக்க எனக்கு தெரியவில்லை. லேரிக்கோ அவ்விஷயங்கள் எங்குள்ளது என்பது தெரியும். அது மாத்திரமல்லாமல், அதின் உண்மை அர்த்தம் என்ன என்பதை தெரிவிக்கும் மற்ற வேதாகமப் பகுதிகளும் தெரிந்து வைத்திருந்தார்.

**சகோ.டாமின் பின்னணிச்சூழல்**

சதர்ன் விஸ்கோனசின் வேத மாணவர்களின் மூப்பராய் தற்போது சகோ.டாம் இருக்கிறார். அவர் கிராண்ட் ரேபிட்ஸ், மிச்சிகனில் வளர்ந்தார். அவர் இவாஞ்சிளிக்கல் ஐக்கிய சகோதரர்கள் என்னும் பிரிவில் வளர்க்கப்பட்டார். 1968 இல், இப்பிரிவு மெத்தடிஸ்ட் பிரிவோடு இணைந்தது. தற்போது அது ஐக்கிய மெத்தடிஸ்ட் என்றழைக்கப்படுகிறது. அவரது குடும்பத்தினர் அவர்கள் தேவாலயத்தில் மிகவும் சுறுசுறுப்பாக இருந்தனர். அவரது தாத்தா தேவாலயத்தின் பொறுப்பாளராய் இருந்தார். அவரது தந்தை ஞாயிறு பள்ளி நிகழ்ச்சியின் கண்காணிப்பாளர் ஆவார். டாம் சில ஆண்டுகளாக தேவாலயத்தின் இளைஞர் குழுவின் தலைவராய் இருந்தார். டாமை அறிந்தவர்கள் அவர் மதகுருவாக உருவாக வேண்டும் என நினைத்திருக்கலாம். உண்மையில் அவர் தனது உயர்நிலை பள்ளி தேர்வில் மதகுரு பணிப்பிரிவில் மிக அதிகமான மதிப்பெண் பெற்றிருந்தார்.

ஆனால் டாம் தான் எதையோ தேடிக் கொண்டிருந்ததாக நினைவுக்கூறுகிறார். தன் கல்லூரி வளாகத்தின் அருகில் இருந்த ஐக்கிய மெத்தடிஸ்ட் சபைக்கு செல்ல பிரயாசப்பட்டார். ஞாயிறு மாலை மாணவர்கள் கூடுகைக்கு பலமுறை சென்றுள்ளார். தேவன் உண்மையில் ஆண் அல்ல பெண் ஆவார் என்று ஒரு இரவு ஓர் மாணவி கூறியதால் அதிருப்தி அடைந்தார். தேவன் என்பவர் ஆண்பாலுக்குரியவர் என்று வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது என்று நான் கூறினேன். வயதில் பெரியவரான மேற்ப்பார்வையாளர்களில் ஒருவர் எங்களது உரையாடலை கவனித்துக் கொண்டு அருகில் உட்கார்ந்திருந்தார். என் கருத்துக்கு ஆதரவு தேடி அவரிடத்தில் திரும்பியபோது, அவர் எங்கள் இருவரில் ஒருவருக்கு கூட ஆதரவு தெரிவிக்க விரும்பவில்லை. அந்த ஞாயிறு மாலை மாணவர்கள் கூடுகைக்கு மீண்டும் நான் செல்லவில்லை. அதே வேளையில் வாழ்க்கைக்கான ஆழ்ந்த அர்த்தத்தின் தனது தேடலைப் பற்றி ஓர் கட்டுரையை லேரியின் வகுப்புகளில் ஒன்றிற்கு எழுதினார். அந்த கட்டுரையில், நான் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களிலும் என்னைச் சுற்றியுள்ள உலகிலும் உள்ள அர்த்தத்தைத் தேடும் ஒரு பயணத்தில் இருந்தேன். ஆனால் வெறுமையாய் திரும்பி வந்தேன் என்று கூறியிருந்தேன்.

லேரி அவருக்குக் கொடுத்த செய்தியில் எது அவரை ஈர்த்தது என்று கேட்கையில் முழு மனுக்குலத்தையும் மீட்கும் தேவனுடைய தெய்வீகத் திட்டம் அற்புதமாய் இருந்தது. மேலும் யெகோவாவைப் போல் இயேசு இல்லை என்பது தெளிவாயிற்று. அதை நிரூபிக்கும் வகையில் லேரி எனக்கு பல்வேறு வசனங்களைக் காட்டினார். இனி மேலும் சேரக்கூடாத அஞ்சப்படுகிற தேவனாய் தெரியாமல், பூமியையும் முழு மனுக்குலத்தையும் சீர்ப்பொருந்தச் செய்வதற்கான ஞானமும் வல்லமையும் பெற்ற கருணாமூர்த்தியாக தெரிந்தார். அந்த இரவின் பிற்பகுதியில் உரையாடலை நிறுத்திக்கொள்ள கடினமாக இருந்தது. பற்பல கேள்விகள் என் சிந்தைக்கு வந்துக்கொண்டே இருந்தது. அதற்கு பதில்களை தெரிந்து கொள்ள விரும்பினேன். என்று டாம் கூறினார்.

**சாட்சிக்கான மற்றொரு வாய்ப்பு:**

ஓர் கோடைக்காலத்தில் ஓர் வாலிபன் லேரியிடம் இலகுப்பந்து அணியில் சேர விருப்பமா என்று கேட்டான். அந்த வாலிபன் பெயர் (தற்போது சகோ) கென் ஓஸ்ட்மேன். இப்போது அவர் கிராண்ட் ரேபிட்ஸ் ஒன்றிணைந்த வேத மாணவர்களில் ஒருவராய் உள்ளார். ஆரம்பத்தில் அவரது படிப்பிலிருந்து அதிக நேரம் எடுத்துக் கொள்ளும் என்று தயங்கினார். பின் லேரி ஒப்பந்தம் செய்தார். இந்த நேரத்தில் அவர்கள் வெறும் பரிச்சயமானவர்கள் தான். ஆனால் ஒரு பிரசுரம் மட்டும், தேவன் ஏன் பொல்லாத காரியங்களை அனுமதிக்கிறார்? என்றும் உலக சம்பவங்களைப் பற்றியும் கேள்விகளை எழுப்பியது. இந்த இக்கட்டான கேள்விகளுக்கு பதில் அளிக்கும் சில இலக்கியங்கள் இந்த பிரசுரம் பிரசுரித்திருந்தது. குறிப்பிடப்பட்டிருந்த அறை எண்ணுக்கு சென்று கதவைத் தட்டினேன். லேரி மெக்கலன் கதவை திறந்ததும் நான் ஆச்சரியமடைந்தேன்! தகவல் பலகையில் உள்ள பிரசுரத்தை படித்தேன் எனவும், அந்த இலக்கியத்தை அறிந்துக் கொள்ள ஆவலாய் உள்ளேன் எனவும் அவரிடம் கூறினேன். கலந்துரையாட நான் விரும்பவில்லை. அந்தஇலக்கியம் என்ன என்பதை மட்டும் அறிய விரும்பினேன். லேரி எனக்கொரு புஸ்தகம் (முதல் வால்யூ) கொடுத்தப்பின் நான் சென்றுவிட்டேன். எங்களது சந்திப்பு மிகவும் சுருக்கமாக இருந்தது என்று சகோ.கென் நினைவுக்கூறுகிறார்.

“இலகுப்பந்து விளையாடிவிட்டு வரும்போது, நான் என் சக அணியினர் சிலரோடு பேசுவேன், இறுதியில் சிறிய வேதாகம ஆராய்ச்சி குழுவை ஆரம்பித்தோம். கென் எங்களோடு இணைந்தார், ஆனால் அவ்வளவாக பேசவில்லை. அவரின் அமைதியும், அவரிடம் சில மோசமான பழக்கங்கள் உள்ளது என்று நான் நினைத்ததால், அவர் சத்தியத்தை ஏற்றுக்கொள்ள மாட்டார் என்று என்னை நினக்கச் செய்தது. அவர் மனதிலும் சிந்தையிலும் என்ன ஓடிக்கொண்டிருந்தது என்று எனக்கு அப்போது தெரியவில்லை. என்று சகோ.லேரி நினைவுக்கூருகிறார்.”

**சாட்சி பாடம்:** ஒருவருடைய பின்புலம் பழக்கவழக்கங்கள் எதுவாயிருந்தாலும் சரி கர்த்தர் யாரை அழைக்கப் போகிறார் என்று நீங்களே முன் தீர்மானம் செய்யாதீர்கள்.

**சகோ.கெனின் பின்னணிச்சூழல்:**

சகோ.கென் மற்றும் சகோ.டாமின் ஆரம்ப வாழ்க்கையை ஒப்பிடுகையில் மிகவும் சுவாரஸ்யமாக உள்ளது. சகோ.டாம் மத குருவாகும் எண்ணத்தோடு வளர்கிறார்,சகோ.கென் கத்தோலிக்க பாதிரியாராகும் எண்ணத்தோடு வளர்கிறார். கென் கருத்துடன் சிசிடி (கிறிஸ்தவ கோட்பாட்டின் மாநாடு)க்கு சென்றார். மேலும் கத்தோலிக்க பள்ளிக்கு 4 வருடங்கள் சென்றார். பலிபீட சிறுவனாக ஆறு வருடங்கள் இருந்தார்.

“என் சிறிய வயதில், வாராவாரம் ஞாயிறு சுவிசேஷ வாசிப்பின் முடிவில் பாதிரியார் வாசிக்கும் ஓர் வேதப்பகுதி என் மனதில் ஆழப்பதிந்தது. மத் 24:35, “வானமும் பூமியும் ஒழிந்துபோம், என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை” கத்தோலிக்க அமைப்பிலிருந்து ஞாபகத்தில் இருக்கும் ஒரே வேதப்பகுதி இது மட்டும் தான். தேவாலயத்தில் போதிக்கப்பட்ட பைபிள் கதைகள் எனக்கு நினைவிருக்கிறது. இயேசு தான் தேவன் எனவும், திரித்துவம் உள்ளது எனவும் நம்பினேன். ஏனெனில், அவைகள் பாதிரியார் மற்றும் கன்னியாஸ்திரிகள் மூலமாய் போதிக்கப்பட்டது. புறநரகம், உத்தரிக்கும் ஸ்தலம், நரகம், பாவமன்னிப்புச் சலுகை போன்றவற்றை நம்பினேன். மேலும் கர்த்தரின் தாயான மரியாளிடத்திலும், பிற புனிதர்களிடத்தில் பிரார்த்தனை செய்தேன். பாவமன்னிப்பு, மனந்திரும்புதல் மற்றும் வழிப்பாட்டு பிரார்த்தனையில் பங்கு கொண்டேன். நான் ஓர் நல்ல கத்தோலிக்கனாக இருந்தேன்” என்று சகோ.கென் கூறுகிறார்.

எனினும், சகோ.கெனின் வாலிபப் பருவம் கஷ்டம் நிறைந்ததாய் இருந்தது. குழந்தை பருவ காயங்கள், பாதுகாப்பற்ற தன்மை, மனச்சோர்வு ஆகியவற்றால் அவர் பாதிக்கப்பட்டார். நரகத்தின் தீப்பொறிகள் எப்போதும் தன் குதிங்காலை நக்கி வருவதாக தோன்றியது. வெளிச்சத்தை எவ்வளவு அதிகமாக காண நினைக்கிறாரோ குற்றவுணர்வும், நம்பிக்கையின்மையும் அவரை கீழே இழுத்துக் கொண்டே இருந்தது. அவர் மூன்று முறை கல்லூரியை விட்டு வெளியேறினார் மற்றும் வியட்நாம் போரில் ஈடுபட முயற்சிக்கும் போது இராணுவத்தினரால் நிராகரிக்கப்பட்டார்.

கென் 21 வயதாகும் போது, அவர் மனதளவில் சோர்வுற்று, எந்த நம்பிக்கையும் அற்ற நிலையில் அவ்விலக்கியத்திற்காக லேரியின் கதவைத்தட்ட நேரிட்டது. “ஜீவப்பாதைக்காக நான் நம்பிக்கையற்று இருந்தேன், ” என்று அவர் விவரிக்கிறார். அவரை அவமானப்பட வைத்த மோசமான வாழ்க்கை முறைகளை அவர் உருவாக்கி யிருந்தார். ஆனால் அவரால் அதை நிறுத்த முடியவில்லை. “தேவன் தன்னிச்சையாகவும் நியாயமற்ற வராகவும் இருக்கிறார் என்னும் முடிவில் உறுதியாய் இருந்தேன். தேவன் அன்பானவர் என்பதை முற்றிலும் நிராகரித்தேன். மேலும் அடிக்கடி தேவனை சபித்தேன். நான் நரகத்திற்கு செல்வதாய் இருந்தால், இப்போது என் வாழ்க்கையை நன்றாய் அனுபவித்துக் கொள்கிறேன். அதினால் உங்களால் என்னை நியாயமாய் தண்டிக்க முடியும் என்று தேவனிடம் கூறினேன். ”

கென் தன்னுடைய வாழ்க்கையில் குறிப்பிட்ட காட்சிகளை நினைவுக்கூருகிறார். அவைகள் அவருக்கு லேரி கொடுத்துள்ள செய்தியைப் பெறுவதற்கு உதவும் படிக்கற்களாக இருந்ததாக இப்போது அவற்றை நினைக்கிறார். அவற்றில் இரண்டு இதோ:

- உயர்நிலைப்பள்ளியில் என் வகுப்புகளில் ஒன்றிக்கு ஓர் ஞானஸ்நான மதகுரு ஒருவர் வந்தார். ஒரு நாள் நான் உத்தரிக்கும் ஸ்தலம் பற்றிக் குறிப்பிட்டேன். அவர் பரிகரிக்கும் விதமாக சிரித்து வேதாகமத்தில் எங்கு உத்தரிக்கும் ஸ்தலம் குறிப்பிடப்பட்டுள்ளது என்று காண்பிக்கும்படி சவால் விடுத்தார். நான் என் சிசிடி போதகரிடம் இதை வினாவினேன். அவர் 2 மக்க பேயர் 12-ஐ குறிப்பிட்டார். கடந்த காலங்களில் இது என் கத்தோலிக்க கோட்பாட்டின் மீது சந்தேகத்தின் வித்தை விதைத்தது. ஆனால் சத்தியத்தின் வித்தையும் விதைத்தது. இது தற்செயலானதா அல்லது தெய்வாதீனமானதா?
- லேரியின் பிரசுரத்திற்கு பதிலளிக்கும் சில நாட்களுக்கு முன்பு தான் இரண்டு மாணவர்கள் என் கதவைத் தட்டினர். அவர்கள் கிறிஸ்துவிற்காக சாட்சியளிக்க வந்தனர். மேலும் இயேசு கிறிஸ்து தான் என் இரட்சகர் என்பதை நான் அறிவேனா என்று என்னை வினவினர். இயேசு

கிறிஸ்துவை நான் அறிவேன். ஆனால் மக்களை நரகத்தில் துன்புறுத்தும் தேவனுக்கு ஊழியம் செய்ய என்னால் முடியாது இயலாது என்று பதிலளித்தேன். என் பதிலாலும் அவற்றின் விதத்தாலும் அவர்கள் சிறிது அதிர்ந்தனர். இருந்தாலும் என்னை வற்புறுத்த முயன்றார்கள். ஆனால் நான் உடனே கலந்துரையாடலை நிறுத்தி அவர்களை வெளியேறும்படி சொன்னேன். இது தற்செயலானதா அல்லது தெய்வாதீனமானதா? ”

இந்த சமயத்தில் பிரசுரம் கொடுப்பதிலிருந்து, கென் பங்கு கொண்ட சிறிய வேதாகம வகுப்பு ஒன்றை உருவாக்குமளவுக்கு லோிக்கு போதுமான அளவு ஆர்வம் வந்திருந்தது. “எங்களது கேள்விக்கு லோியிடம் எப்போதும் வேதாகம பதில்கள் இருந்தது. வேதாகமத்தில் எல்லாவற்றிற்கும் பதில்கள் இருந்தன. என்னுடைய கத்தோலிக்க வளர்ப்பில், நான் வேதாகமத்தை படித்ததேயில்லை, அவற்றை படிக்க நான் ஊக்குவிக்கப்படவும் இல்லை. மத குரு, கன்னியாஸ்திரிகள் மற்றும் மறைகல்வி தான் என் கோட்பாடுகளின் ஊற்றாய் இருந்தன. பின் என் மிகப்பெரிய கேள்வியை நான் லோியிடம் கேட்டேன்; இராஜ்யத்தைப் பற்றி தாங்கள் கூறுவது மிக அற்புதமாய் உள்ளது! ஆனால் தேவன் தண்டனைக்காக நரகத்திற்கு அனுப்பப்பட்ட அனைவரின் நிலை என்ன? தேவன் ஞானமுள்ளவர் அல்ல, அவர் மிகவும் வஞ்சகமானவர்! லோியின் பதில் எளிமையாகவும் தெளிவானதாயும் இருந்தது. தேவாலயம் கற்பிக்கும் நரகமும் வேதாகமம் கற்பிக்கும் நரகமும் மிகவும் வித்தியாசமான போதனைகளாகும். நரகத்தைப் பற்றின சத்தியம் என்னும் பிரசுரத்தை என்னிடத்தில் அவர் தந்தார். உடனே நான் அருகில் உள்ள கத்தோலிக்க புத்தக கடையில் என் முதல் வேதாகமத்தை வாங்கினேன். (லோி டாம் மற்றும் மற்றவர்களுடன் வேதாகமப் படிப்பில் பல வாரங்களுக்குப் சென்றப்பிறகு லோி ஒரு போதும் கேள்விப்படாத ஒரு அழகான வசனத்தை மேற்கோள் காட்டினேன். நான் பாருக் புத்தகத்தை வியந்து சுட்டிக்காட்டியபோது, வேறொரு வேதாகமத்தை வாங்குமாறு அவர் சொன்னார்.)”

“அந்த பிரசுரத்தில் உள்ள ஒவ்வொரு வார்த்தையையும் நான் படித்தேன். ஒவ்வொரு வசனத்தையும் நான் தேடி வாசித்தேன். நான் வாசித்துக் கொண்டிருப்பதை என்னால் நம்பவே முடியவில்லை! நரகத்திற்கான தேவனின் நோக்கத்தைக் குறித்ததான என்னுடைய அனைத்து எண்ணத்திற்கும் எதிரானதாய் இருந்தது. நரக வலி என்பது மீதான என்னுடைய கொடுமையான நம்பிக்கைக்கு எதிரானதாய் மாத்திரமல்லாமல், அதற்கு அது வேதாகமத்தை அதின் ஆதாரமாக பயன்படுத்தியது. என் ஆவியிலிருந்து எடுக்கப்பட்ட சுமை மகத்தானது. ஆனால் இது அந்தகாரமாய் இருந்தது. என் இதயத்தில் வேரூன்றிய நம்பிக்கையை லோியால் உணர முடியவில்லை. குழு கலந்துரையாடல்களுக்கு தொடர்ந்து வந்து விளிம்பில் பங்கேற்கும் ஒருவரை மட்டுமே அவர் கண்டார். ”

சகோ.கென் இறுதியில் லோி தனக்கு முன் கொடுத்த முதல் வால்யூமை படிக்கத் தொடங்கினார். அவர் துண்டுப்பிரதிக்குச் செய்ததைப் போலவே, இதையும் அவர் பக்கம் வாரியாக படித்து, தனக்கே சத்தியத்தை மெய்ப்பித்துக் கொண்டார்.

“டாம் மற்றும் கென் இருவரும் கற்றுக்கொள்ளும், இயேசு பேசின விதையை முளைப்பிக்கும் நல்ல நிலமான நல்ல இருதயத்தைப் பெற்றிருந்தனர். இராஜ்யத்தின் நற்செய்தியையும், உண்மையான அன்பின் தேவனிடத்தில் இருந்து கொடிய நரகம் என்கிற ஒன்று எப்படியும் இருக்க முடியாது என்பதை நான் அவர்களிடத்தில் வலியுறுத்தினேன். இந்த பாடங்கள் அனைத்திற்கும் வேதாகம ஆதாரங்களை எப்போதும் அளித்தேன். கணிதத்தில் கென் ஆர்வமுள்ளவராய் இருந்ததால், ஓர் வார இறுதியில் அவருக்கு இரண்டாம் வால்யூமை கொடுத்துவிட்டுச் சென்றேன் என்கிற ஞாபகம் வருகிறது. அதை அவர் மிகவும் அனுபவித்தார். அதைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளவும் விரும்பினார். எவ்வளவு கற்றுக்கொண்டாரோ, அவ்வளவு தூரம் கர்த்தரோடு நெருங்கினார். இறுதியில் கெட்ட பழக்கங்களை விட்டு வெளியேறி உடன்படிக்கையும் செய்தார். கர்த்தர் என்னை மீண்டும் ஒருமுறை அபரிவிதமாக ஆசீர்வதித்தார்.”

மே 1971 இல் மற்ற 9 பேரோடு டாமும் கென்னும் சிகாகோ மாநாட்டில் ஞானஸ்நானம் பெற்றனர்.

**சகோ.டாமின் நினைவு பகிர்வு:**

“லோியைப் பற்றி எனக்கு பிடித்த கதைகளில் ஒன்று 1970 களின் வெயில் காலத்தின் முதல் வார இறுதியில் என்னை மெரில் வில்லே இண்டியான நகரத்திற்கு தன்னோடே வரும்படி அழைத்தார். அதனால் அவர் தனது காதலி மற்றும் (சகோதரி) டெப்பி லெட்விங்காவை சந்திக்க முடியும். நாங்கள் இரயிலில் பயணித்தோம். இரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தவுடன் லோி தன் பைகள் ஒன்றிலிருந்து அடுக்கடுக்கான பிரசுரங்களை எடுத்தார். அதை பாதியாகப் பிரித்து இருவரும் பிரிந்து வெவ்வேறு வழிகளில் சென்று இந்த பிரசுரங்களை வாங்கிக்கொள்ள விருப்பமுள்ளோரிடம் விநியோகம் செய்யலாம் என்றார். நான் அப்போது வெறும்

சிறுவன் தான் அதற்கு முன்பு நான் பிரசுரங்களை விநியோகித்ததே இல்லை. நான் மிகவும் உள் முகமானவனாக இருந்தேன். மேலும் பயந்தும் இருந்தேன். லேரியை (பரம தகப்பனைத் தவிர) ஏமாற்றமடைய வைக்க நான் துணியவில்லை. அதனால் அவர் சொன்னதை செய்தேன். அந்நாள் எப்படி சென்றது என்பது பற்றி அதிகம் நினைவில் இல்லை. என் பயம் மட்டும் நினைவில் உள்ளது. ஆனால் நான் அந்த சூழலில் தாக்குப்பிடித்தேன்.''

**பெரிய கல்லூரி வளாகத்தில்சாட்சி:**

கல்லூரி வளாகத்தில்சாட்சி சொல்ல முயற்சி செய்தால் பலரை சத்தியத்திற்கு அறிமுகம் செய்து வைக்க முடியும் என்று டாம் மற்றும் லேரிக்கு தோன்றியது. பின்னாளில் சகோதரர்.சகரைபா அவர்களின் தங்கு மறையில் அவர்களோடு இணைந்தார். சகோதரர்கள் டேவிட் டோரன், கர்ல்ஹேகன்சிக் மற்றும் ஜார்ஜ் டபக் பல்வேறு பொது வெளி சாட்சி நிகழ்வுகளில் பேசியுள்ளனர். பேச்சுரைக்கு விளம்பரம் செய்ய வாலிப சகோதரர்கள் பிரசுரங்களை விநியோகித்தனர். அவர்கள் பெரும்பாலும் கேலிக்குள்ளாயினர். ஆனால் ஒரு நபர் அந்தப் பிரசுரத்தை மிகவும் கவனமாகப் பார்த்தார். அவர் (தற்போது சகோதரர்) பாப் டேவிஸ், ஜேக்சன் (மிக்சிகன்) வேத மாணவர்கள் சபைக்கு மூப்பராய் இருக்கிறார். சகோ.கார்லின் உரையில் அவர் கலந்துக் கொண்டார். டாம், சக், மற்றனைவரும் பாபிற்கு கொடுத்த ஊக்கத்தால் அவர் இறுதியில் உடன்படிக்கை செய்தார். இப்போது அவர்களது முயற்சிகள் இன்னும் ஆவிக்குரிய பலன்களை அளிக்கின்றன.

**சகோ.பாப் டேவிஸின் கதை:**

ஆண்டவருக்குள்ளான என் வாழ்க்கை என் தாயுடன் ஆரம்பமானது. அவர் மத சார்பற்ற மிகச் சிறந்த நபராவார். நான்கு வயது குழந்தையாக நான் அடிவயிற்றுச் சவ்வு அழற்சியினால் மரித்துக் கொண்டிருந்தேன். பிழைப்பதற்கு மிகக் குறைவான வாய்ப்பே இருந்தது. என் தாயும் தந்தையும் கத்தோலிக்க மருத்துவமனையில் இருந்த சிறிய தேவாலயத்தில் இரவை கழித்தார்கள். என் தாய் ஆண்டவரிடத்தில் என் உயிரைக் காப்பாற்ற வேண்டவில்லை. ஆனால் அவ்வாறு அப்படி நடந்தால் நான்அவருடையவனாவேன் என்று எண்ணம் கொண்டார். காலையில் என் அறைக்கு அவர்கள் வந்தபோது குளிர்ச்சியாக இருந்த என் கால்கள் வெது வெதுப்பாய் இருந்ததை என் தந்தை உணர்ந்தார். கல்லூரியில் ஆண்டவரைப் பற்றி அறியும் வரை என்னிடம் இதை விவரித்ததில்லை. ஆனால் அவ்வப்பொழுது ஒரு மந்திரியாவதற்கு உலகப்பிரகாரமான என்னை மெதுவாக உற்சாகப்படுத்தினார். அது எனக்கு வினோதமாயும் இருந்தது.

கல்லூரியில் ஓர் நெருக்கடி என் இதயத்தைத் தயார்படுத்தியது. கர்த்தர் பற்றியதான என் தேடல் ஓர் பொய் சாட்சியோடு தொடங்கியது. அண்மையில் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்ட ஓர் நண்பன் கர்த்தரிடத்தில் ஒரு அற்புதம் செய்யும்படி பிரார்த்திக்கவும் அதை அவர் நிச்சயம் வழங்குவார் என்றும் எனக்கு அறிவுறுத்தினார். நான் முதலில் இதுவரை அருளப்படாத ஒரு எளிய அற்புதத்தை கேட்டேன். பிறகு நான் என்றுமிராத ஓர் ஜெபத்தை மனமார சத்தியத்திற்காக ஏறெடுத்தேன். நான் ஒன்றுமறியாத சிறுபிள்ளை என்று கர்த்தரிடத்தில் கூறினேன். அவர் எனக்கு சத்தியத்தைக் காண்பித்தாரா? கூடிய விரைவில் அவர் எனக்கு சத்தியத்தை வழங்கினார். இன்னும் வழங்கிக் கொண்டிருக்கிறார். இவ்வாறு தான் அது நடந்தது.

கர்த்தர் பற்றியதான என் தேடலின் பல பாதைகள் அனைத்தும் முடக்கமானதாய் இருந்தது. ஓர்நாள், உலகப்பிரகாரமான ஒரு தோழர் நான் சத்தியத்தைத் தேடிக் கொண்டிருக்கிறேன் என்பதையறிந்து கல்லூரி வளாகத்தில் கிடைத்த ஓர் பிரசுரத்தை எனக்கு கொடுத்தார். மிக்சிகன் மாநில வேத மாணவர்கள் சபையின் உறுப்பினர்களான டாம் கில்பெர்ட் மற்றும் சக் ரைபா அந்நாளில் அங்கு பிரசுரம் வழங்கிக்கொண்டிருந்தனர்.

அந்தப் பிரசுரத்தில் நான் கலந்துகொண்ட கார்ல் ஹாகன்சிக் கொடுத்த கர்த்தரின் பிரசன்னத்தைப் பற்றிய உரைக்கான விளம்பரம் இருந்தது. கர்த்தருடைய முதல் பிரசன்னம் பற்றியே எனக்கு தெரியாது என்பதால் இரண்டாம் பிரசன்னத்தைப் பற்றியதான இந்த பேச்சு கொஞ்சம் தாக்கத்தை ஏற்படுத்தியது. பேச்சுக்குப் பிறகு போர்ட் வொர்த் தெய்வீகத் திட்டம் பத்திரிக்கையின் கண்ணுக்கினிய கவர் என் கவனத்தை ஈர்த்தது. 35 பக்கங்களைப் படித்த பிறகு அதிலுள்ள அற்புதமான ஞானம் என்னை ஈர்த்தது. இவரே தேவன் என்று நினைத்தேன். பத்திரிக்கையின் முடிவில் உடன்படிக்கை செய்துக்கொள்ள ஊக்குவிக்கப்பட்டிருந்தது. அதை என் மாம்ச எதிர்ப்பை மீறி என் ஆவி பின்பற்றியது. சிகாகோவில் இருந்து வேதாகமத்தின் ஆய்வுகள் பற்றிய ஆறு தொகுதிகளை நான் பதிவு செய்து வாங்கினேன். சிகாகோ சகோதரர்கள் டாம் மற்றும் சக்கினிடத்தில் கூறினார்கள். பிறகு இருவரும் என்னை காண என் கல்லூரி குடியிருப்புக்கு வந்தனர். நான் உடனடியாக மிச்சிகன் மாநில பைபிள் மாணாக்கர்களில் ஒரு அங்கத்தினரானேன். விரைவில் மாநாடுகள் பலவற்றிற்கும் சென்றேன்.

டாம் கில்பெர்ட் என உடன்படிக்கைக்கு கருவியாக இருந்தார். வார இறுதியில் ஒரு நண்பருடன் கடற்கரையில் செலவிட திட்டமிட்டிருந்தேன். ஆனால் அதற்கு பதிலாக சிகாகோ மாநாட்டிற்கு செல்ல டாம் முன் மொழிந்தார். என் சரீரம் என் ஆவியுடன் சண்டையிட்டது. ஆனால் டாமின் மென்மையான தூண்டுதல் அந்த நாளில் வென்றது. அது ஓர் திருப்புமுனையாகும்.''

**சாட்சி பாடம்:**

தனித்தனி அல்லது வேறுபட்ட வாழ்க்கை முறையை வாழ்வது ஒரு வலிமையான சாட்சியாகும். ''பிறகு டாம் மீண்டும் மென்மையாக உடன்படிக்கைக்கு ஊக்குவித்தார். அது கிராண்ட் ரேபிட்ஸ் மாநாட்டில் நடந்தது. ஆராதனைக்கு நான் தாமதமாக சென்றிருந்தேன். அதினால் கார்ல் என்னை முன்வருமாறு அழைக்கும் வரை, நான் பின் இருக்கையிலே அமர்ந்திருந்தேன். அழைப்புக்கான என் பதிலோடு, நீங்கள் பதிவில் என் அடிச்சுவடுகளின் சத்தத்தையும்தெளிவாகக் கேட்கலாம்.''

**கல்லூரிக்கு பிறகும் சாட்சியிடும் ஆவி குறையவில்லை:**

லேரி தன் கதையை தொடர்கிறார். கல்லூரியில் பட்டம் பெற்ற பிறகு, (சகோதரி) டெப்பி லெட்விங்காவை திருமணம் செய்து கொண்ட பிறகு, நான் கொலம்பஸ், இந்தியானாவில் ஆசிரியர் வேலையைத் தேர்ந்தெடுத்தேன். சத்தியத்தைக் காண கர்த்தர் தேர்ந்தெடுத்த இன்னொரு முக்கிய நபர் நான் வேலைப்பார்த்த பள்ளியில் இருந்தார். அவர்தான் அந்த பள்ளியின் முதல்வர் சகோதரி.கிரேசியா ரெய்ட். அவரின் அலுவலகத்தில் ஓர்நாள் இருந்தபோது, அவரின் உடமைகளோடு ஓர் புத்தகத்தைப் பார்க்க நேர்ந்தது. அதின் பெயர் எவ்வாறு தேவ சித்தத்தை அறிந்துக்கொள்வது அந்த தலைப்பை சாட்சிக்கு சாதகமாகப் பயன்படுத்தினேன். என் வாழ்வில் தேவ சித்தம் என்ன என்பதை கண்டடைய நான் எவ்வாறு முயன்றேன் என்பதையும் மனுகுலத்திற்கான தெய்வீக திட்டத்தில் உள்ள என்னை ஈர்த்த சில அற்புதமான விஷயங்களையும் அவரோடு பகிர்ந்துக் கொண்டேன். கிரேசியா தேவனுடைய அற்புதமான திட்டத்தினால் மிகவும் கவரப்பட்டார். பல உரையாடலுக்கு பின்னர், பல கூட்டத்திற்கு வந்தார். இறுதியில் தேவனுக்கு தன் வாழ்க்கையை அர்ப்பணித்தார். அவரின் ஞானஸ்நான முழுக்கை செய்ய எனக்கு சிலாக்கியம் கிடைத்தது. தற்போது ஒர்லாண்டோ வேத மாணவர்கள் ஆய்வில் கிரேசியா பங்குக் கொண்டு வருகிறார். இவ்வளவு அருமையான வாய்ப்புகளையும் இந்த அன்பானவர்கள் நமது அருமையான சத்தியத்தைக் காண கருவியாக பயன்படுவது எவ்வளவு தாழ்மையைக் கொடுக்கிறது.''

தனது விசுவாசத்தைப் பகிர்ந்து கொள்வதற்கான லேரியின் விருப்பத்தின் காரணமாக, அநேக சகோதரர்கள் கர்த்தரைக்கண்டடைய கருவியாக இருந்தார். கேட்கும் செவி உள்ள எவரிடத்திலும் பேச விரைவார். எங்கள் சொந்த சாட்சிகளில் பயன்படுத்த அவருடைய ஆலோசனைகளை நாங்கள் கேட்டோம். பின்வருவனவற்றை அவர் வழங்கினார்.

1.பூமியில் வரப்போகும் இராஜ்யத்தைப் பற்றியும் ஆபிரகாமிற்கு வழங்கப்பட்ட வாக்குத்தத்தின் மீதான நம்பிக்கையைப் பற்றியும் முக்கியமாய் பேசுங்கள்.

2.ஆர்வமுள்ளோருக்கு வழங்க சில வேத பாடத்தின் பிரதிகளை எப்போதும் உங்களோடு வைத்திருங்கள். ''கர்த்தர் சொல்கிறதாவது'' என்று தாங்கள் குறிப்பிடும் அனைத்தையும் நிரூபிக்க எப்போதும் தயாராய் இருங்கள்.

3.நரகம் மற்றும் திரித்துவம் பற்றிய இருத்தரப்பு கேள்விகளுக்கும் பதிலளிக்க வேத வசனங்களை அறிந்து வையுங்கள்.

4.புரிந்து கொள்ளுங்கள் மற்றும் உங்கள் கருத்துக்களை அன்பாகவும் ஆணித்தரமாகவும் கூறுங்கள். பொறுமை தயவு, நேர்மை மற்றும் உணர்வு பூர்வமாக இருங்கள். இராஜ்யத்தின் சுவிசேஷத்தின் மீதான தங்களது நம்பிக்கையில் மகிழ்ச்சியுடன் ஆர்வமாக இருங்கள்.

5.''படத்தை சித்தரியுங்கள்''

தேவனின் உண்மையான குணங்களான அன்பு மற்றும் நீதியைப் பற்றியதான பார்வையை பகிர்ந்திடுங்கள்.


6. 3 பகுத்தறிவுக் கேள்விகளை கேளுங்கள். அவர்களின் நம்பிக்கையைப் பற்றியும், அந்த நம்பிக்கை வேத அடிப்படையில் உள்ளதா என்பதை யோசிக்க வையுங்கள்.

7.அவர்கள் ஆர்வம் காட்டினால், தகுந்த பிரதிகளைக் கொடுங்கள். அல்லது அவர்கள் இன்னும் அறிய வேண்டினால், வேத ஆராய்ச்சிக்கு அழையுங்கள்.

8.கர்த்தரிடத்தில் சத்தியத்திற்கு சாட்சி கூற வாய்ப்புகளைக் கேளுங்கள். அதற்காக கவனமாக காத்திருங்கள்.

''ஞாபகத்தில் வையுங்கள். தங்களது சாட்சியிடும் முயற்சியினால் எவ்வளவு நபர்கள் சத்தியத்திற்குள் வருகின்றனர் என்பது முக்கியமல்ல. எவ்வளவு முயற்சியை நீங்கள் செய்தீர்கள் என்பதே கர்த்தர் காண்கிறார். தேவனிடத்தில் முடிவை விட்டுவிடுங்கள். உண்மையில் அவர்கள் சத்திய வித்தை ஏற்றுக்கொள்ளும் நல்ல நிலமாய் இருப்பின் தேவன் அவர்களை கண்டிப்பாக இழுத்துக்கொள்வார்.''

# வேலையகத்தில் சான்றளித்தல்



**இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது. (மத்தேயு 5:16)**

சகோதரர் ஜோனாதன் மற்றும் சிஸ்டர்.ஜீவல் பென்சன் கிரேட் நியூ லண்டனில் இருக்கும் கனெக்டிகர் எக்லீசியாவை சேர்ந்தவர்கள். அந்த பிரிவிலிருக்கும் சிஸ்டர் கேத்தி ரோஸன் பெர்கிற்கு அவர்கள் சாட்சி கொடுத்தார்கள். சகோதரர் ஜோனாதன் 19 ஆண்டுகளுக்கு மேலாக, கிறிஸ்துவர் கேள்விகள் வானொலி நிகழ்ச்சியின் (இப்போது வாராந்திர ஒளிப்பரப்பு) துணை இயக்குனராய் இருக்கிறார். சகோதரி ஜீவல் மற்றும் சகோதரி கேத்தி ஆகிய இருவரும் அந்த சாட்சியின் முயற்சியில் ஆர்வமாய் ஈடுபட்டுள்ளனர்.

**முதலில் தங்களது மத பின்னணியை குறித்து சொல்லும்படி அவர்கள் அனைவரையும் நாங்கள் கேட்டுக் கொண்டோம்.**

**சகோதரி கேத்தி:**

என் முந்தைய ஆண்டுகள் ஒரு மெத்தடிஸ்ட் தேவாலயத்தில் கழிந்தது. என் நினைவில் இருக்கும் வரை நான் தேவனை மிகவும் நேசித்தேன். புதிய வாழ்க்கை பாடகர்கள் ஆலயம் வரும் சமயமெல்லாம் நான் என் பெற்றோர்களை ஆலயத்திற்கு அழைத்து செல்ல வற்புறுத்தினேன் என்பதை தற்சமயம் நினைவுகூறுகிறேன். என் 8 வயது இருதயத்தை அவர்கள் வார்த்தைகளும், இசையும் தொட்டது.

நான் சிறு பிள்ளையாய் இருந்த பொழுது, நான் உறங்க செல்லும் முன் சத்தமாய் ஜெபம் செய்வேன் என்றும், அந்த ஜெபங்களெல்லாம் நீண்டதாய் இருக்கும் என்பதால் என்னை என் தாயார் தனியே விட்டு விட்டு மீண்டும் வருவார் என்று பல கதைகளை என் தாயார் கூறுவார். உலகில் இருக்கும் எல்லா தீமைகளுக்காகவும் என்னால் முடிந்தவரை நான் ஜெபம் செய்வேன்.

நான் 10 வயது ஆன பொழுது என்னுடைய கத்தோலிக்க நண்பர்கள் என்னை அதிகமாய் ஆலயம் செல்வதை நான் பார்த்து கொண்டிருந்தேன். அவர்களிடம் என்ன இருந்தது என்பதை அறிய ஆவலாய் இருந்தேன். நான் முதல் முறையாக பாதிரியார் முன் புது நன்மை பெறுவதற்காகவும், பாவ அறிக்கை செய்யவும் என் தாயார் எனக்காக வகுப்புகளை ஏற்பாடு செய்தார். நான் வகுப்புகளுக்கு சென்று தேவனைப் பற்றி அறிய ஆசைப்பட்டேன். ஆனால் அங்கு கத்தோலிக்க திருவருட் சாதனங்களை பற்றியே கற்றுக்கொடுத்தனர். கத்தோலிக்க பள்ளியும், திருப்பலிகளும் எனக்கு பல விதிகளையே கற்பித்தன. ஆனால் நான் விரும்பியபடி நான் கடவுளுக்கு நெருக்கமாய் இல்லை என்பதை உணர்ந்தேன்.

நான் தேவனிடம் எப்படி நெருங்கி வருவது என்று தெரியவில்லை. எனது முப்பது வயது வரை மதத்தை பற்றி வெறுமனே, அறிந்து கொண்டேன். அதன் பின்பே நான் தேட ஆரம்பித்தேன்.

நான் பல சபைகளில் முயற்சி செய்து, பிறகு ஒரு குழுவில் சேர்ந்து அதில் இருக்கும் பாஸ்டரையும் சந்திக்க முயற்சி செய்தேன். ஆனால் இது அவருக்கு ஒரு வேலையாய் இருந்தது. மக்களை தேவனிடத்தில் கொண்டு வருவதும், தேவனைப்பற்றிய அறிவை மக்களிடம் கூறுவதும் அவரிடம் நிறைவாக காணப்படவில்லை மாறாக குழுக்களை அமைப்பதும், வியாபாரங்களை கவனிப்பதும், நிதி திரட்ட இரவு உணவுகளை ஏற்பாடு செய்வது மட்டுமே அவருக்கு முக்கிய வேலையாய் இருந்தது. என் கேள்விகளுக்கு பதில் சொல்ல இயலாமல் என்னிடமிருந்து மெதுவாக விலகினார்.

யேகோவா விட்னஸை சார்ந்த மக்கள் ஒருமுறை என் வீடு வந்த பொழுது, வேதாகமம் பற்றி எனக்கு கற்றுக் கொடுப்பார்கள் என்று எண்ணி நான் அவர்களை ஆர்வமாய் வரவேற்றேன். எனக்கு தெரியாத பல விஷயங்களை அவர்கள் கூறின பொழுது நான் மிக ஆர்வமாய் அவற்றை கற்றுக் கொண்டேன். ஆனால் ஒரு நாள் அவர்களுடைய வார நாள் கூட்டத்திற்கு நான் சென்ற பொழுது அவர்கள் மேற்கொண்ட படிப்பு எனக்கு அதிருப்தியை அளித்தது. அவர்கள் வைத்திருக்கும் ஒரு பத்திரிக்கையிலிருந்து ஒரு பத்தியை வாசித்துவிட்டு, பிறகு ஒரு கேள்வி மற்றும் அதற்கான பதிலையும் வாசிக்க வேண்டும். எந்த ஒரு விவாதமோ, சிந்தனையோ அங்கு நடைபெறவில்லை. அவர்களுடைய ஞாயிற்றுகிழமை

கூட்டங்களையும் முயற்சி செய்தேன். ஆனால் எனக்கு ஒரு அமைதியற்ற நிலையே உருவாயிற்று.

**சகோதரி ஜீவல்:**

நான் நான்காம் தலைமுறையினரின் வேத மாணவி. என் தந்தையின் குடும்பத்தை சேர்ந்த என் மூதாதையர்கள் அவர்கள் வசித்த பகுதிக்கு விஜயம் செய்த இத்தாலிய சகோதரரிடம் இருந்த சத்தியத்தை கற்றுக்கொண்டனர். அவர்கள் சத்தியம் அறிந்த பிறகு கத்தோலிக்க சபை விட்டு வெளியேறினார்கள். அவர்களுடைய நான்கு பிள்ளைகளும் சத்தியத்தை நேசித்து வளர்ந்தார்கள். அதில் மூன்று பேர் என் பாட்டி உட்பட திருமுழுக்கு பெற்றார்கள். என் தாத்தா Antoinette Franco சத்தியத்தை நேசித்த போதும் திருமுழுக்கு பெறவில்லை. என் தாத்தா பாட்டியின் சாட்சிய வாழ்வை கண்ட என் தாய்வீட்டு மூதாதையர்களான Louise and Emanuel சத்தியத்தை ஏற்றுக்கொண்டு திருமுழுக்கும் பெற்றார்கள்.

என்தாய் ஜோஸ்பின் கத்தோலிக்க சபையை விட்டு 9 வயதில் வெளியேறி தனது 16 ஆவது வயதில் திருமுழுக்கு பெற்றார். என் தந்தை தனது இளவயதிலேயே திருமுழுக்கு பெற்றார். அவர்கள் அனைவரும் கத்தோலிக்க திருச்சபையை விட்டு வெளியேவந்ததால் துன்புறுத்தப்பட்டார்கள். அவர்கள் குடும்பத்தில் யாரேனும் இறக்க நேர்ந்தால் அவர்களை அடக்கம் செய்ய அவர்களுக்கு கல்லறைகள் அளிக்கப்படாது என்றும் கூறினார்கள். என் பாட்டி Giuseppina பல கல்லறை நிலங்களை வாங்கி அதை சகோதரர்களுக்கு விற்றார். கல்லறைகளில் சவ அடக்க நிகழ்வில் கலந்து கொண்டால், அங்கு புதைக்கப்பட்டுள்ள பல சகோதரின் கல்லறைகளில் பல சிலுவைகளும், கீரிடங்களும் காணலாம். நான் சத்தியத்தில் வளர்க்கப்பட்டதால் மிகவும் நன்றியுள்ளவளாய் இருக்கிறேன். நான் என் 26வது வயதில் என் உயிரை கர்த்தருக்காக ஒப்புக் கொடுத்தேன்.

**சகோதரர் ஜோனாத்தான்:**

நான் ஒரு மெத்தடிஸ்ட் குடும்பத்தை சார்ந்தவன். நான் எங்கள் ஆலயத்தில் பாடகற் குழுவில் இருந்தேன். என் தந்தை பாடற் குழுவின் இயக்குனராய் இருந்தார். பாடல் பாடுவது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியை கொடுத்தது. ஏனெனில் நான் கர்த்தரை நோக்கி நேராய் பாடியதாய் நினைத்தேன். என் இளவயது முதல் கர்த்தர் என் வாழ்வில் இருப்பதை நான் உணர்ந்தேன். அவர் மீண்டும் மீண்டும் தனது அதிகாரத்தை என் மீது செலுத்துவதை நான் உணர்ந்தேன். நான் சிறுபிள்ளையாய் இருந்த பொழுதே பல நிகழ்வுகளை புரிந்து கொண்டேன். என்னைவிட மிக பெரிதான ஒன்று நடந்து கொண்டிருக்கிறது என்றும் கர்த்தரிடத்தில் எனக்கு தனிப்பட்ட அன்பு உள்ளது என்பதையும் நான் உணர்ந்தேன். மேடைகளில் நான் கேட்கும் பிரசங்களை பொருட்படுத்தாமல், வேதாகமத்தில் நான் வாசித்ததை மட்டுமே விசுவாசித்து நரகம் இல்லை என்றும் தேவனே பிதாவென்றும், இயேசு கிறிஸ்துவே அவரது மகன் என்றும் கூறும் வேத பாடங்களை விசுவாசித்தேன். இந்த கருத்துகளையெல்லாம் நான் மிக எளிமையாக புரிந்து கொண்டு அதை என்னுடன் எடுத்து சென்றேன்.

ஆனால் என் உயர்நிலை பள்ளி வாழ்க்கை மற்றும் என் ஆரம்ப கால இளவயதிலும் நான் மிகவும் கடினமாய் இருந்தது. நான் மிகுந்த மன அழுத்தத்திற்கு ஆளாக்கப்பட்டேன். மேலும் நான் வாழ்ந்த வாழ்க்கை முறை எனக்கு விரக்தியும், தனிமையையும், பொய்களையும் மட்டுமே கொண்டு வந்தது. என்னுடைய 26வது வயதிற்குள் நான் தனிமைப்படுத்தப்பட்டு என் வாழ்வை வீணாக்கி கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் நான் பாறையின் கீழே இருப்பதை உணர்ந்து, என்னை வழி நடத்தும்படி மூன்று மாதம் ஜெபம் செய்தேன். அவரில்லாமல் நான் ஒன்றும் இல்லை என்பதை உணர்ந்தேன்.

ஒரு நாள் என் சகோதரியின் நண்பருடன் நான் மதிய உணவை உட்கொண்டேன். அந்த நண்பர் ஒரு வேத மாணவர் இருக்கும் எக்லீசியாவை சேர்ந்தவர். இஸ்ரயேலில் இருக்கும் காம்ப்பெல் குடும்பத்துடன் அவர் தொடர்புடையவர். நாங்கள் உணவு உண்ண ஆரம்பித்தவுடன் நான் நரகத்தை பற்றி என்ன நினைக்கிறேன் என்று வினவினார். தேவன் அன்பாய் இருப்பதால், இந்த இடம், ஒரு வேதனை தரக்கூடிய இடமாய் இருக்காது என்று நான் கூறினேன். ஆச்சரியப்படும் வகையில் அவர் அதை ஏற்றுக்கொண்டார். எல்லா கிறிஸ்தவர்களும் வேறு விதமாய் விசுவாசிக்கும் பொழுது இது எப்படி சாத்தியமாகும் என்று எனக்கு ஆச்சரியமாய் உள்ளது. அவர் நரகம் என்றும் அந்த வார்த்தைக்கு கிரேக்க எபிரேய மொழிகளில் விளக்கம் அளித்தார். இதன் மூலம் தேவன் ஏன் தீமையை அனுமதித்தார் என்ற

விளக்கமும் தொடர்ந்தது. இது ஒரு நல்ல ஒரு உணர்வை எனக்குள் ஏற்படுத்தியதால் நான் அவருடன் பிற பாடங்களை படிக்க ஆரம்பித்தேன் நாங்கள் அன்று எங்கள் மத்திய உணவை உண்டு முடிக்கவில்லை. நாங்கள் அவரின் தாய் வீட்டிற்கு சென்று, அவர் குடும்பத்துடன் வேதாகமத்தை பற்றி பேசினோம்.

சிறிது காலத்திற்கு பின், புதிதாய் ஆர்வமுள்ளவர்களுக்காய் வடிவமைக்கப்பட்ட ஒரு வேதாகம படிப்பு கூடத்திற்கு அழைத்து சென்றார். அங்கே அனைவரும்தொகுதியை படித்து கொண்டிருந்தனர். நான் புதிதாய் சேர்க்கப்பட்டதால், அவர்கள் மீண்டும் முதலிருந்து படிக்க ஆரம்பித்தார்கள். சுமார் இரண்டு மாதங்களுக்கு பிறகு எனக்கு இன்னும் அதிகமாய் தேவைபட்டதால், Dilmington இருக்கு Delaware வேத மாணவர் எக்லீசியாவில் நடக்கும் கூட்டங்களில் நான் கலந்து கொண்டேன். அந்த வருடமே நான் கர்த்தருக்காக என் வாழ்வை அர்பணித்தேன். இதற்காக தான் நான் இத்தனை நாட்கள் காத்திருந்தேன். என்னை சுற்றியுள்ள மக்களுக்கு சத்தியத்தை பகிர்வதில் மிகவும் ஆவலாய் இருந்தேன்.

**சகோதரி கேத்தி:**

சில ஏமாற்றங்கள் இருந்த போதிலும், வேதாகமத்தை குறித்து யெகோவா விட்னஸார் கூறும் கருத்துக்களை நான் கற்றுக்கொள்வதில் ஆர்வம் கொண்டேன். இதை என் நண்பர்களுடன் பகிரவும் துவங்கினேன். ஒருவர் இதில் தனக்கு ஆர்வம் இல்லை என்று கூறினாலும், "எப்பொழுதும் தேவனை பற்றியே பேசிக்கொண்டிருக்கும்" ஜொனாதன் என்பவரைப் பற்றி என்னிடம் கூறினார்.

**சகோதரர் ஜோனர்த்தன்:**

நான் சிறப்பாக வீடுகளை சுத்தம் செய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளதால், நான் வேலை செய்யும் ஸ்தலங்களில் சத்தியத்தை குறித்து பேச எனக்கு தந்திரம் கிடைத்தது. நான் ஒரு வீட்டில் வேலை செய்யும் பொழுது, அந்த வாடிக்கையாளர் அந்த வீட்டில் இருந்தால் நான் ஒரு கிறிஸ்தவன் என்பதை அவர்களுக்கு அறிவிக்க முயற்சி எடுப்பேன். எடுத்துக்காட்டாக "தேவன் நல்லவர்" அல்லது "நன்றி தேவனே" போன்ற கருத்துகளை கூறுவேன். வாடிக்கையாளரிடமோ அல்லது நான் தொடர்பு கொள்ளும் யாரிடமோ எப்பொழுது ஒரு திறப்பு கிடைக்கும் என்று எதிர்பார்த்து கொண்டிருப்பேன். இந்த உலகின் நிலைமையை குறித்து யாரேனும் புகார் அளித்தால் அதுவே எனக்கு ஒரு பெரிய திறவுகோள் இது என்றுமே இப்படியே இருக்காது என்று வேதாகமம் உறுதிப்படுத்துகிறது. என்னுடைய வாடிக்கையாளர் அல்லது நான் சந்திக்கும் நபரின் நண்பரோ அல்லது அவர்கள் குடும்பத்தில் ஒரு நபரோ இறந்து விட்டால், "நீங்கள் அவர்களை மீண்டும் காணும் பொழுது அது உங்களுக்கு ஒரு சிறந்த நாளாய் அமையும்" என்பேன். இதைப்பற்றி இன்னும் அதிகம் தெரிந்து கொள்ள ஆர்வமுள்ளவர்களுக்கு, மேற்கூறப்பட்ட கருத்துக்கள் ஒரு திறவுகோலாய் அமையும். சில நேரங்களில் இந்த கருத்துக்களை தொடர்ந்து கேள்விகள் எழும். நான்வெளியே செல்லும் பொழுது, யாரிடமாவது வேதாகமம் இருந்தால் "நீங்கள் வேதாகமம் பள்ளிக்கு சென்றீர்களா? அல்லது நீங்கள் என்ன படிக்கிறீர்கள் என்று கேட்பேன்."

**சாட்சி பாடம்:**

சாட்சியம் கொடுக்க நம்மை சுற்றி நிறைய வாய்ப்புகள் உள்ளன. பல ஆறுதல் அளிக்கும் நற்செய்திகளும், உண்மையான சமாதானத்திற்குரிய பாதையும் நம்மிடம் உள்ளது. "ஏற்ற பருவத்தில் கூறப்படும் வார்த்தை" பலர் வாழ்க்கையை மாற்ற இயலும். 1999 ஆம் ஆண்டு கோடைகாலத்தில் ஒரு நாள், நான் என் வாடிக்கையாளர் ஒருவருடன், வேதாகமத்தை குறித்து பேசிக்கொண்டிருந்தேன். ஜொனாதன் எனக்கு இதில் ஆர்வம் இல்லை, ஆனால் எனக்கு ஒரு நண்பர் இருக்கிறார். அவர் ஜெகோவா விட்னஸ் அவர்களுடன் பேசிக்கொண்டிருப்பது எனக்கு மிகுந்த கவலையை தருகிறது. அவர் உங்களை அழைத்தால் உங்களுக்கு சரியா? என்று கூறினார். நிச்சயமாக அதற்கு பதில் ஆம் என்று தான் இருந்தது. யாரோ ஒருவர் என்னை சத்தியத்தைப் பற்றி பேசப் போகிறார்கள் என்பதை நினைத்த பொழுது எனக்கும் ஜீவனுக்கும் மிகுந்த உற்சாகமாய் இருந்தது. இது மன அழுத்தத்தை தரவில்லை. தேவன் கேள்விகளையும் பதில்களையும் துவக்கிவைத்தார்.

**சகோதரி கேத்தி:**

நான் அழைத்தேன். ஜீவல் தொலைப்பேசிக்கு பதில் அளித்தார். ஒரு நாள் மாலை வேளையில் அவரும், ஜோனத்தானும் என் வீட்டிற்கு வர ஏற்பாடு செய்தோம். நான் கதவு திறந்த பொழுது ஜீன்ஸ் அணிந்த அழகான ஒரு

ஜோடி நிற்பதை கண்டு மகிழ்ந்தேன். அவர்கள் முகத்தில் ஒரு வெளிகுத்தனம் தெரிந்தது. தங்கள் கைப்பைக்குள் மிகுந்த பத்திரிக்கை செய்திகளை எடுத்து கொண்டு, ஞாயிற்றுக்கிழமைகளில் ஒரு சிறந்த உடையில் காட்சியளிக்கும் ஜெகோவா விட்னஸை போல் அல்லாமல் இவர்கள் மிகவும் வித்தியாசமாக காட்சிளித்தார்கள்.

ஜோனர்த்தன் மற்றும் ஜீவல் உள்ளே நுழைந்து எனக்கு கற்றுக் கொடுப்பதில் எந்த அவசரமும் காண்பிக்காமல் மிகவும் நிதானமாய் இருந்தார்கள். என்னிடத்தில் எரிந்து கொண்டிருந்த கேள்விகளுக்கு பதில் தேவைப்பட்டது. எரிந்து கொண்டிருந்த கேள்விகளுக்கு பதில் தேவைப்பட்டது. அவர்கள் ஈர்க்கப்படுவார்கள் என்று நினைத்து நான் படித்து கொண்டிருந்த ஆவிக்குரிய புத்தகத்தை அவர்களிடம் காண்பிப்பதில் மிகவும் ஆர்வமாய் இருந்தேன். என்ன ஒரு ஆச்சரியம், ஜீவல் அதை கையில் எடுத்து அதில் சில பத்திகளை படித்து விட்டு இனிமையாக ஆனால் உறுதியாக "இதை நான் நம்பவில்லை" என்று கூறினார். நான் அதிர்ச்சி அடைந்தேன். இறுதியாக நேர்மையான பதில் ஒன்று எனக்கு கிடைத்தது. எப்படியோ எனக்கு தெரிந்தது அவர்கள் என் கேள்விகளுக்கெல்லாம் பதில் கூறுவார்கள் என்று அதனால் நான் அவர்களிடன் கேள்விகளை தொகுக்க ஆரம்பித்தேன். அன்றிரவு நாங்கள் என்ன பேசினோம் என்று நினைவு கூறமுடியாவிட்டாலும், அவர்களது அமைதியான மனப்பான்மை என்னை வியப்பில் ஆழ்த்தியது. அவர்கள் என்னை நம்ப வைக்க எந்த ஒரு அவசரத்தையும் காண்பிக்கவில்லை. அவர்களிடம் இருந்த சமாதானமும், உண்மையான அன்பும் என்னை பெரிதும் தொட்டது. அவர்கள் வெளிப்பகுதியில் விருந்தோம்பலும் உத்வேகமும் அவர்கள் ஜீவிக்கும் கிறிஸ்தவ வாழ்விற்கு ஒரு சாட்சியாய் அமைந்தது.

சிறிது நாட்களில் நியூ இங்கிலாந்து மாநாட்டிற்கு அவர்களை பின் தொடர்ந்தேன். அங்கேயும் நான் வரவேற்கப்பட்டதையும் முதல் நாள் முதற்கொண்டு நான் அன்பு செலுத்தப்பட்டதையும் உணர்ந்தேன்.

**சகோதரர் ஜோனர்த்தன் மற்றும் சகோதரி ஜீவல்:**

அவர் எங்களை அன்புடன் தங்கள் இல்லத்திற்குள் வரவேற்றார். "நீங்கள் கையில் பெட்டி ஒன்றும் எடுத்து வரவில்லையா" என்று புன்னகையுடன் தனது முதல் கருத்தை தெரிவித்தார். நாங்கள் எங்கள் வேதாகமத்தை மட்டும் எடுத்து சென்றிருந்தோம். சில பொதுவான விசாரிப்புகளுக்கு பிறகு நாங்கள் அவருடைய சமையலறையில் அமர்ந்தோம். அவர் யெகோவா விட்னஸிடன் சேர்ந்திருப்பதை குறித்து அவர் நண்பர் கவலைப்பட்டதால், யெகோவா விட்னஸின் வரலாற்றை நாங்கள் அவருக்கு எடுத்து கூறினோம். எங்கள் விசுவாசத்திற்கு அவர்கள் விசுவாசத்திற்கும் உள்ள வேறுபாடுகளை எடுத்து கூறி அவர்கள் விசுவாசிக்கும் சில காரியங்களை குறித்து எங்கள் கவலையை தெரிவித்தோம்.

அவர் கேள்விகளை தொகுக்க ஆரம்பித்தார். நாங்கள் ஈடுபலி, எல்லோருக்கும் உள்ள இரட்சிப்பு மற்றும் சத்தியத்தின் அழகை குறித்து கலந்து ஆலோசித்தோம். எங்கள் விஜயத்தின் சிறிது நாட்களுக்கு பிறகு நேரடி வானொலி ஒளிப்பரப்பான கிறிஸ்துவ கேள்விகள் என்ற நிகழ்ச்சிக்கு அழைத்து சென்றோம். அங்கு அவர் சில சகோதரர்களை சந்தித்து சத்தியத்தை பற்றி இன்னும் அதிகமாய் தெரிந்து கொண்டார்.

நாங்கள் வீடு திரும்பும் பொழுது அடிக்கடி எங்கள் பதிலளிக்கும் இயந்திரத்தில் கேத்தியின் நீண்ட செய்திகள் பதிவாகியிருக்கும். அதில் கேள்விகளுக்கு மேல் கேள்விகள் அடுக்கி கொண்டே போகும் சில நேரங்களில் இயந்திரத்தில் செய்தியின் நேரம் முடிவடைவதால் பாதியிலேயே கேள்விகள் முடிந்துவிடும். மீண்டும் அவர் அழைத்து அந்த செய்தியை தொடர்வார்.

**நியூ லண்டன் எக்லீசியாவை சேர்ந்த குடும்பத்தாரோடு அவர் பாடங்களை கற்க ஆரம்பித்தார். சில வாரங்களுக்கு பிறகு உடன்படிக்கை பெற்றார்.**

**சகோதரர் ஜோனர்த்தன் மற்றும் சகோதரி ஜீவல்:**

அவர் கேள்விகளால் அந்த வகுப்பில் ஒரு தீப்பொறியை உண்டாக்கினார். இன்னும் தொடர்ந்து அதையே செய்து வருகிறார்.

**சாட்சி பாடம்:**

சிலருக்கு நிறைய கேள்விகள் உள்ளன. நாம் சொல்வதற்கு ஏராளமான தகவல்கள் இருந்தாலும், கேட்கும் பழக்கம் நம்மிடம் இருக்க வேண்டும். யாருக்கும் அழுத்தம் கொடுக்க தேவையில்லை. திறந்த செவி இருந்தால் சத்தியத்தின் வல்லமை அவர்களை ஏற்றுக் கொள்ள செய்யும். எந்த சத்தியம் உங்களை மிகவும் ஈர்த்தது என்பதற்கு கேத்தி அவருடைய வார்த்தையில் தனிப்பட்ட ஒரு நபருக்கான தேவ சித்தம் வெளிப்படுகிறது

என்று பதிலளித்தார். அவர் மேலும் கூறுகையில்

**சகோதரி கேத்தி:**

நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் மிகுந்த நேரம் எடுத்து ஆர்வமுடன் சகோதரர்கள் பதிலளித்தால் அவர்களையும் அவர்கள் சொன்ன சத்தியத்தையும் மிகவும் நேசிக்க ஆரம்பித்தேன். தேவனுக்கே நன்றியும் மகிமையும் உண்டவாதாக.

**சகோதரர் ஜோனர்த்தன் மற்றும் சிஸ்டர் ஜீவல்:**

தேவன் உங்கள் வாயில் அவர் வார்த்தையை போடுவார். அவர்கள் சத்தியத்தை அறிய விரும்பினால் அவர்கள் கேட்க விரும்பும் வார்த்தைகள் அங்கு இருக்கும். நாம் சாட்சி கொடுக்க ஆசைப்பட வேண்டும். சத்தியத்தின் மேல் அன்பும் விருப்பமும் இருக்க வேண்டும். நாம் எந்த வாய்ப்பை உபயோகப்படுத்தவில்லை என்றால் அவர் அதை எடுத்து வேறு யாரிடமாவது கொடுத்துவிடுவார்.

**இந்த அனுபவத்திலிருந்து சாட்சி கொடுப்பதைப் பற்றி அவர் என்ன கற்றுக்கொண்டார் என்று கேத்தியை நாங்ள் கேட்டோம்.**

**சகோதரி கேத்தி:**

எங்கெல்லாம் ஜோனர்த்தன் செல்கிறாரோ அங்குள்ள மக்களிடம் அவர் ஒரு கிறிஸ்தவர் என்று தெரிவித்து விடுவார். எங்கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தேவனைப் பற்றியும் அவர் திட்டங்களைப் பற்றியும் இங்கொன்றும் அங்கொன்றுமாக வார்த்தைகளை கூறுவார். அது ஒரு ஜெல்லி மீனின் விழுதுகளைப்போல வார்த்தைகள் வெளியே சென்று, ராஜ்யத்தை குறித்து செய்தி யார் கேட்க வேண்டுமோ அவர்களை தொடும். "கேத்தி இதை ஏன் நீ என்னிடம் சொல்லவில்லை" என்று என்னை தெரிந்தவர்கள் யாரும் என்னை கேட்டுவிட கூடாது.

என்னுடைய பேரன் முதலாம் வகுப்பில் படித்த போது, ஒவ்வொரு ஆசிரியருக்கும், உதவி பணியாளர்களுக்கும், பேராசிரியரின் அலுவலகத்தில் பணிபுரியும் ஒவ்வொருவருக்கும் பரிசுகள் கொடுப்பேன். அது முதல் தொகுப்போடு சில இனிப்புகளை கொண்டது. அந்த புத்தகத்திற்காக சிலர் நன்றி குறிப்புகளை பெற்றேன். சில நன்றி குறிப்புகள் இனிப்புக்காகவும் சிலது இரண்டிற்காகவும், பெற்றேன். ஆனால் குறைந்த பட்சம் அனைவருக்கும் ஒரு சாட்சி கொடுக்கப்பட்டது.

ஒருமுறை ஸ்ஃபானிஷ் பேசும் சில ஓவியர்களை நான் வேலைக்கு அமர்த்தினேன். ஒவ்வொருவருக்கும் ஸ்பானிஷின் முதல் தொகுப்பை வழங்கினேன். அவர்கள் அனைவரும் மகிழ்ச்சியோடு பெற்று கொண்டார்கள். நான் புன்னகையோடு சாட்சி கொடுத்து, நான் போகும் இடமெல்லாம் மற்றவர்கள் இதில் ஈடுபடுத்த முயற்சித்தேன்.

# நண்பர்களிடம் சாட்சியளித்தல்



**ஒருவன் தன் சிநேகிதனுக்காக தன் ஜீவனை கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலும் இல்லை (யோவான் 15:13)**

சகோதரி ஸ்டெஃபனி குவென்ஜ்லி மற்றும் பெக்கா மார்டின் இவர்கள் மில்வாக்கி வேதமாணவர்கள் சபையை சார்ந்தவர்கள். இவர்கள் இருவரும் நடுநிலைப்பள்ளியில் தான் சந்தித்துக் கொண்டனர். எப்படி உங்களின் நட்பு சகோதரி பெக்கா வேதமாணவர் சபையின் ஐக்கியத்தில் வர உதவியது என்று நாங்கள் கேட்டோம்.

**சகோதரி பெக்கா:** "நான் எந்தவிதமான நம்பிக்கையிலும் வளரவில்லை. என்னுடைய தந்தை கண்டிப்பான கத்தோலிக்க குடும்பத்தில் வளர்ந்தவர். அவர் வீட்டை விட்டு வெளியேறிய பின்பு அவருக்கு குறிப்பிட்ட மதத்தை பற்றின ஆர்வம் இல்லாமல் போய் விட்டது. என்னுடைய ஆரம்ப கால கட்டத்தில் மதத்தை பற்றின எண்ணம் என் தாயாரிடத்தில் வந்தது. பெரும்பாலான மக்கள் கபடதாரிகளாக அவர்கள் மற்றவர்களை நியாயம் தீர்ப்பார்கள். ஆனால் மிகவும் மோசமான விஷயங்களை செய்வார்கள் என்பதை உணர்ந்தவர், பின்பு மற்றவர்களை கண்டிக்கிறதென்ன? என்னிடத்தில் தேவனை பற்றின சிந்தையும் இல்லை, வேதத்தை பற்றி எதுவும் தெரியவும் இல்லை."

**சகோதரி ஸ்டெஃபனி:** "என் குடும்பத்தில் இருவழி நான்காம் தலைமுறையாக வேதமாணவர் ஐக்கியத்தில் இருக்கிறேன். என்னுடைய 17ஆம் வயதில் உடன்படிக்கையை மேற்கொண்டேன்.

**சகோதரி பெக்கா:** "நான் முதலில் ஸ்டெஃபனியை 6ஆம் வகுப்பில் சந்தித்தேன். சில வருடங்களாக வேத மாணவர்கள் யார் என்று தெரிந்தது. ஏனெனில் சகோதரி ஸ்டெஃபனி வேதமாணவர் சபை மாநாடுகளிலும் முகாம்களிலும் கலந்து கொண்டு அவளுடைய நண்பர்களை பற்றி என்னிடம் கூறினாள். நான் உயர்நிலை பள்ளியில், சேரும் வரை அவளுடைய தேவ நம்பிக்கை பற்றின பேச்சை குறித்தும் எனக்கு நினைவில்லை. எனக்கு 16 வயதாயிருந்த போது என்னுடைய தாயார் நுரையீரல் புற்று நோயாலும் மற்றும் மூளை கட்டியினாலும் பாதிக்கப்பட்டிருந்தார். அப்பொழுது என்னுடயை சகோதரனுக்கு 15 வயது. என் சகோதரிக்கு 8 வயது, புற்று நோய் ஒரு கொடியது என்று நான் அறிந்திருந்தேன். ஆனால் என் தாய் நேர்மறையான எண்ணத்துடன் இருந்தார். அப்பொழுது அவள் நன்றாக குணமடைவாள் என்று நம்ப வேண்டியதாகயிருந்தது. என்னுடைய பிறந்த நாளன்று ஸ்டெஃபனி எனக்கு ஒரு வேதாகமத்தை பரிசளித்தாள். அந்த வேதாகமத்தை நான் இன்னும் உபயோகித்து வருகிறேன். அது ஒரு நல்ல பரிசாக இருந்தது. ஆனால் அதை நான் மிகவும் பயன்படுத்தவில்லை."

**சாட்சிபாடம்:** வேதாகமம் உண்மை இலக்கியம் விலையேற பெற்ற பரிசு அதற்கு அந்தந்த கால கட்டத்திற்கு பிறருக்கு மிகவும் ஆசீர்வாதமாய் இருக்கும்.

**சகோதரி ஸ்டெஃபனி** : "நான் ஏற்ற விதத்தில் சாட்சி சொல்லுவேன். அனைத்திற்கும் நேரமும், காலமும் உண்டு. ஏற்ற காலத்தை பயன்படுத்த முயற்சி செய்வேன். கடந்த காலத்தில் தான் துண்டு பிரசுரம் கொடுத்திருக்கிறேன். பொது கூட்டங்கள் நடத்த உதவினேன். மாநில நியாய சாவடியில் வேலை செய்தேன். அந்நியர்களுக்கும் சாட்சி சொல்வது விருப்பமாக இருந்தது. அந்நியர்கள் வேதம் வாசிக்கும் போது அவர்களை அணுகுவேன். எனது நான்கு வயதில் இருந்தே தலைவர்களுக்கு சாட்சி சொன்னது ஞாபகம் வருகிறது."

**சாட்சி பாடம் :** நீ நீயாகவே இரு. ராஜ்யத்தை பற்றி பேச பெரிய பேச்சாளராக இருக்க அவசியம் இல்லை. சாதுவான மற்றும் தாழ்மையுடைய ஆவி பிறரை ஈர்க்க வல்லது.

பெக்கா எங்கள் நட்பின் தொடக்க காலம் முதலே என் மத பின்னணியை நன்கு அறிவார். இருந்தும் நாங்கள் உயர்நிலை பள்ளியில் சேர்ந்த பிறகே அதை கவனிக்க தொடங்கினாள். அவள் தாய் இறந்த பிறகு, அவளுக்கு ஆறுதல் தேவைப்பட்டது. தேவனுடைய ராஜ்யத்தைப் பற்றி புரிந்து கொண்டாள். தொலைபேசியில் மணிக்கணக்காக தேவ ராஜ்யத்தை பற்றியும் உயிர்தெழுதல் பற்றியும் பேசி கொண்டோம். அவள் அதை கேட்டு உற்சாகம் ஆனாள், நானும் அந்த அற்புத செய்தியை பகிர உற்சாகம் ஆனேன்.

**சகோதரி பெக்கா:** நான் மேல்நிலை பள்ளியில் படிக்கும் போது என் தாய் இறந்தார். அது எனக்கு துயரமான அனுபவம். ஏன் அவள் இறந்தாள் என்று புரியவில்லை. நான் இந்த பிரபஞ்சத்திடம் என் சகோதர, சகோதரிக்கு என் தாய் வேண்டும் என் தாய்க்கு பதிலாக என்னை எடுத்து கொள்ள மணிக்கணக்காக வேண்டினேன். அவருக்கு

நடந்ததை நினைத்து பயமும் சோகமும் கொண்டேன். ஸ்டெஃபனி என் நெருங்கிய நண்பர். அவள் தேவனை பற்றியும் அவர் திட்டத்தை பற்றியும் நம்பிக்கையாக பேசினாள்.

**சாட்சி பாடம்:** தேவன் காட்டும் ஒவ்வொரு வாய்ப்புக்கும் விழித்திருக்க வேண்டும். இது புதிய சூழலையும் அனுபவத்தையும் கொண்டிருக்கும். அல்லது இந்த நிலை ஒரு நண்பனுக்கு ஆறுதல் தரக்கூடியதாகவும் இருக்கும்.

அவள் வருகின்ற ராஜ்யத்தை பற்றி பேசி என் தாய் அங்கே மிதந்து திரியவில்லை. அவர் நிஜமாகவே இறந்துவிட்டார். ஆனால் ஒரு நாள் மனுகுலத்துடனே உயிர்தெழுவார் என்றாள். மகிழ்ச்சி காலையில் வருகிறது என்ற ஒரு பத்திரிக்கை தந்தாள். நான் அதை படித்ததை நினைவு கூர்ந்தேன். அதில் குறிப்பிட்டுள்ளவை சரியான உணர்வு அளித்தது. அந்த நேரத்தில் மிகுந்த சோகத்தை அனுபவித்தேன் இருந்தும் என் தாய் மீண்டும் உயிருடன் வருவார் என்னும் உண்மை என்னை உற்சாகப்படுத்தியது. என்னை மிகவும்கவர்ந்தது. தேவனுடைய திட்டம், அது விருப்பம் இல்லாதவரை திட்டத்தில் உடன்பட வற்புறுத்தவில்லை. நான் சோர்வுக்குள் இருக்கும் போது தேவனுடைய தெய்வீக திட்டம் என்னை தேற்றியது. இதுதான் உண்மை.

எனக்கு நரகம் பற்றின விஷயத்தில் நம்பிக்கையில்லை. தேவனுடைய இராஜ்யமும், அதின் உள்ளடக்கங்களும், மிகப்பெரிய உண்மை என்று உணர்ந்தேன். எனக்கு நியாபகத்தில் இருக்கிறது. என்னுடைய சிறுவயதில் என் தாயார் கூறியது என்னவென்றால் கத்தோலிக்கர் சொல்வது ஏசு கிறிஸ்துவை ஏற்றுக் கொள்ளாத ஆப்ரிக்கா குழந்தைகள் நரகத்துக்கு, செல்வார்கள் என்று அபத்தமாய் கூறுகின்றனர். அவர்கள் அப்படி சொன்னது பிடிக்கவில்லை. தேவனை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் பூமியில் ஆறுதலும் சமாதானமும் உண்டு. தேவனுடைய திட்டம் அழகாகவும் எளிமையாகவும் தோன்றியது.

குறைவான பயங்கரமும், இருண்டதாகவும் எதிர்காலம் தோன்றியது. என் தந்தை குடிகாரர். என் தாய் இறந்த பிறகு இவர் உடல்நிலை சரியில்லாமல் அவர் வேலை செய்ய முடியாமல் போனது. சில வருடங்கள் கழித்து அவரும் இறந்துவிட்டார். அது பயங்கரமான சூழ்நிலை. ஏனெனில் நான் குடும்பத்தில் மூத்தவனாக இருந்தபடியால் என் சகோதரியை வளர்க்க வேண்டியதாயிற்று. நான் மிகுந்த சோர்வான போது என் சகோதரன் மீது சாய்ந்து கொண்டேன். அது ஒரு பெரிய வித்தியாசத்தை ஏற்படுத்தியது என் தந்தை இறுதியின் முழுமைக்கு மீண்டு வருவார் என்று தெரிந்து கொண்டேன். ஸ்டெஃபனியுடன் நான் கொண்ட நட்பு என் வாழ்க்கையை முற்றிலும் மாற்றியது. அவள் இல்லாமல் மில்வாகிவர்க்கத்தின் ஆவிக்குரிய குடும்பத்தில் நான் ஒரு அங்கமாக இருந்திருக்கமாட்டேன். ஸ்டெஃபனி நீண்ட காலமாக சத்தியத்தை பேசுவதில் நிலைத்திருந்தபடியால் எனக்கு திருமண வாழ்க்கையும் (சகோதரி பெக்கா சகோதரர் டேவிட் மார்டனை திருமணம் செய்தார்) பல நெருங்கிய நண்பர்களுகம் அமைந்தனர்.

அவள் தன் நம்பிக்கையை பற்றி பேசுவது மட்டுமின்றி அதை வாழ்ந்தும் காட்டினார். அவள் நேர்மையான நல்ல மனிதர் அவள் வாழ்க்கை அவள் நம்பிக்கைகளை பிரதிபலிக்கும் என் வாழ்நாளில் அவளை மிகவும் மதித்து வந்தேன்.

**சகோதரி ஸ்டெஃபனி**: சாட்சி சொல்வதை பிறர் மீது திணிக்கக்கூடாது என்பது என் அறிவுரை. ஒருவர் தன் நம்பிக்கையின் சந்தோசமாகவும் சௌகரியமாகவும் இருந்தால் நாம் கூறுவது அவர் மீது பெரிய பாதிப்பை ஏற்படுத்தாது. அதற்கு பதில் நம் வாழ்க்கையில் நாம் சாட்சியாக இருப்பது நாம் ஓர் நல்ல நண்பனாக சக தொழிலாளியாக, பக்கத்து வீட்டாராக இருந்தால் வாய்ப்பு வரும் போது அவர் நமக்கு செவி கொடுப்பார்.

நாம் நம் சகாக்களால் மதிக்கப்பட்டால் நம் வாழ்க்கையில் சத்தியத்தில் நல்ல தாக்கத்தை கண்டு அவர் சொல்லை தானாகவே ஏற்று கொள்வார்.

**சாட்சி பாடம்:**

சாட்சி நம் வாழ்க்கை முறையை பற்றியது. உன் நண்பர்கள் உன் கிறிஸ்துவ நடத்தையை கண்டு ஆறுதல் தேவைப்படும் போது உன்னை நாடுவார். சத்திய அழகும் எளிமையும் அதின் வேலையை செய்யட்டும். அதை பற்றி ஆர்வத்துடனும் நம்பிக்கையுடனும் பேசுங்கள்.

**சங்கிலியாண்டபுரம் வேதமாணவர்கள்**, திருச்சி.
கைப்பேசி : 9244611241, 8122224919